கல்கி

ரிலாக்ஸ் மனமே ரிலாக்ஸ்!
—இலவச இணைப்பு

KALKI 11.5.2003 ரூ.6.00



அட்மிஷன் அவஸ்தைகள்!

Steelwin®

THE RECLINER CHAIR

முழுமையான சுகம்

உங்கள் விரல் முனையில்



Imagine being able to do all this on one chair! Steelwin's amazing Recliner can change from chair to hammock to bed and everything in between, in a trice, at a gentle flick of the elegant arms rest. That's the Recliner. A chair that changes to suit your need.

CHENNAI : Siva Sakthi Industries, 100, Menambedu Road, Sidco Industrial Estate, Ambattur, Chennai - 98. Ph: 2623 3957, 2624 8333. **Triveni & Co**. 5, Raja Street, T. Nagar, Chennai - 17. Ph: 2436 0111.

DEALERS: • **Purasawalkam :** ❍ Sakthivel Enterprises, Ph: 26433556, ❍ Choice Decors, Ph:26422841 • **Annanagar :** ❍ National Furnitures, Ph:26212666 ❍ Carrefour, Ph: 26210933. • **Kilpauk :** ❍ Seating World, Ph : 26444005 • **Annasalai :** ❍ Imperial Furniture Co., Ph:24349644 • **Teynampet:** ❍ Kapsons, Ph:24339986. • **Nungambakkam :** ❍ MahmayiOffice&HomeFurniture(P)Ltd.Ph:28251533 • **Royapettah High Road :** ❍ Jaya Bharatham Furniture & Appliances (P)Ltd., Ph:28131384. ❍ Sathya Furniture World, Ph: 24983929. • **T.Nagar :** ❍ Muthu Furniture, Ph: 24344193, ❍ New Gold House Foams & Furnishers, Ph: 28150337. ❍ Gunaa Marketing, Ph: 24340083. ❍ Kuttys Wood Crafts, Ph: 24833967. ❍ Anush Furnitures, Ph: 24338021 • **Vadapalani:** ❍ Palve, Ph: 24840812 • **Kodambakkam:** ❍ Furn World, Ph: 24806687 • **Aminjikarai:** ❍ SelectionMegaShop, Ph:26263179 • **Thiruvanmiyur :** ❍ PunyasAgencies, Ph:24481520 • **Velachery :** ❍ Maruthi Decors, Cell:98400 82784 • **Nanganallur :** ❍ Balasubramanian&Co., Ph:22332425 • **Thiruvottiur:** ❍ Comfort Foams & Furnishers, Ph:3103 6225 • **Padi:** ❍ Sathya Furniture World, Ph:26545029. • **Tambaram :** ❍ K.Dhasthagir&Bros, Ph:22376464

Bangalore: Steelwin, 131, Davatha Plaza, Residency Road, Bangalore - 560 025. Ph:080 - 2210541, 2221866

Also available at all reputed furniture showrooms throughout South India.

உள்ளே...



56

யாழ்ப்பாணத் தமிழில்
பேசுகிறாராமே!

ஏன்
எச்சரிக்கை?



82

கரீனாவின்
நர்ஸ்
வேலை?



12



என்ன
கோபம்?


64

கல்கி
11.5.2003



* போராட்டத்துக்கு நடுவே சிகிச்சை

சிகிச்சையின்



* காரல்

தனியார் மருத்துவக் கல்லூரிகளை அரசு அனுமதிக்கக் கூடாது என அரசு மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் போராடுவது புதிதல்ல. இந்த முறை தீர்வு கிடைக்கும்வரை பின் வாங்கப் போவதில்லை என்ற தீவிரப் பிடிவாதத்தோடு போராடுகிறார்கள். தமிழக அரசோ, 'போராட்டத்தை நிறுத்திவிட்டு பேச்சு வார்த்தைக்கு வாருங்கள்' என்று அடம் பிடிக்க, பாதிக்கப்பட்டிருப்பதென்னவோ பொது மக்கள். இந்த விவகாரத்தில் உண்மையில் சிகிச்சை தேவைப்படுவது யாருக்கு...?

போராடி வரும் மாணவர்கள் சார்பில் சொல்கிறார், தமிழக அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் காரல் :

"தமிழகத்தில் உள்ள பன்னிரண்டு அரசு மருத்துவக் கல்லூரிகள், நான்கு தனியார் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து ஆண்டுதோறும் இரண்டாயிரம் டாக்டர்கள் படித்து முடித்து வெளியேறுகிறார்கள். இது தவிர, ஏற்கெனவே தமிழகத்தில் அறுபத்து நான்காயிரம் பதிவு பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்கள். தமிழகத்தின் ஆறு கோடி மக்கள் தொகையோடு கணக்கிடும்போது ஆயிரத்து இருநூறு பேருக்கு ஒரு டாக்டர் வீதம் இருக்கிறார்கள். உலக சுகாதார நிறுவனமோ, மூவாயிரத்து ஐந்நூறு பேருக்கு ஒரு டாக்டர் என்ற விகிதமே போதுமானது என்று நிர்ணயித்திருக்கிறது. இந்தக் கணக்கைச் சொல்லி மட்டுமே டாக்டர்களின் தேவையை நாங்கள் மறுக்கவில்லை. எப்படிப்பட்ட டாக்டர்கள் என்பதில்தான் பிரச்னையே. அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் தொண்ணூறு சதவிகித மாணவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழை எளிய குடும்பங்களிலிருந்து, மெரிட்டை நம்பி வந்தவர்கள். ஆனால் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒரு சீட்டுக்குக் குறைந்த பட்சம் இருபத்தைந்து லட்சம் கொடுத்துச் சேரும் மாணவர், கல்விக் கட்டணமாக ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வீதம் செலுத்துகிறார். இத்தனை பெரிய தொகையைச் செலவழித்து மருத்துவராகும் பட்சத்தில், அதை திரும்ப மீட்கும் வியாபார மனோபாவத்துடன் மக்களைச் சுரண்டுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இன்னொரு பக்கம் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தொழில் அனுபவமோ, பயிற்சியோ மிக மிகக் குறைவு. ஆனால், அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களாகிய நாங்களோ அதிக நோயாளிகளைச் சந்திக்கிறோம்.

"ஆரோக்கியமும், சுகாதாரமும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதனால்தான் மருத்துவக் கல்லூரிகளைத் தனியாருக்குத்

தாரை வார்க்கிறோம்' என்கிறது அரசு. உண்மையில் பொதுமக்களின் ஆரோக்கியம், சுகாதாரத்தில் அக்கறை செலுத்த அரசு விரும்பினால், மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கில், தேவையுள்ள பகுதிகளில், புதிதாகத் தொடங்கவில்லை என்றாலும் பரவாயில்லை; ஏற்கெனவே அரைகுறையாக செயல்பட்டு வரும், ஆரம்ப மற்றும் துணைச் சுகாதார நிலையங்களைச் சீர்படுத்த வேண்டும். போதுமான சுகாதாரப் பணியாளர்களை நியமிப்பதில் ஏற்படும் குறைபாட்டின் காரணமாக மூடிக் கிடக்கும் சுகாதார மையங்கள், மருத்துவமனைகளைத் திறக்க வேண்டும். பல மாவட்ட, தாலுக்கா மருத்துவமனைகளில், பல் மருத்துவர், எம்.என்.ஏ, வார்டு பாய், தொழில் நுட்ப பணியாளர்கள் புதியதாக நியமிக்கப் படாதது ஒருபுறம் இருக்க, மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவரையும் அரசு புதிதாக நியமிக்காததால், பெரும்பால அரசு மருத்துவமனை

தேவை யாருக்கு?

களில் அறுவை சிகிச்சை அறைகள் பூட்டப்பட்டு ஒட்டடை படிந்து கிடக்கின்றன.

"அரசு மருத்துவக் கல்லூரிகளின் நிலையோ இதை விட மோசமாக இருக்கிறது. நிர்ணயம் செய்யப்பட்ட வசதிகள் இல்லாததால், நெல்லை, தஞ்சை, கோவை, அரசு மருத்துவக் கல்லூரிகளில் எழுபத்தொன்பது பாடப் பிரிவுகளுக்கான அனுமதியையே இந்திய மருத்துவக் கழகம் ரத்து செய்துள்ளது. திருச்சி அரசு மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தையும் இதே நிறுவனம் ரத்து செய்துவிட்டது. எனவே, அரசு மருத்துவக் கல்லூரிகள் சிறப்பாகச் செயல்பட, அரசு போதிய நிதி ஒதுக்க வேண்டும். இதை விடுத்து புற்றீசலாகக் கிளம்பிய பொறியியல் கல்லூரிகள் போல, தனியார் மருத்துவக் கல்லூரிகள் பெருகினால், ஏழை மாணவர்களுக்கு, மருத்துவப் படிப்பு வெறும் கனவாகி விடும் என்பது மட்டுமல்ல, மருத்துவத் துறை, சேவைத் துறை என்ற நிலையிலிருந்து, தனியார் துறையின் தங்கச் சுரங்கமாகிவிடும்" என்கிறார்.

ஏற்கெனவே பதினைந்து தனியார் பல் மருத்துவக் கல்லூரிகள் அரசு அனுமதி இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும்போது, மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளை தொடங்க வரும்படி தனியார் நிறுவனங்களுக்கு அழைப்பிதழாகவே அரசு ஆணை (MS) 211 வெளியிட்டுள்ள தமிழக அரசு, தனியார் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பதில்லை என்ற கொள்கை முடிவை வைத்துள்ளதாகச் சொல்லி வருவது விளங்காத வேடிக்கை!

- ஜெ.ஜெ.

படங்கள் : ராஜன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



* சஃபையர் தியேட்டர்

நமக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டுப் போய்விட்டாலும், இன்னும் நாம் பின்பற்றுவது, இங்கிலாந்தின் பாராளுமன்ற நடைமுறைகளையும், மரபுகளையும்தான். ஒரு முறை வெட்டித்தனமான விவாதம் இங்கிலாந்து பொதுச் சபையில் நடந்தபோது, "பொதுச் சபை வெறும் பிதற்றல் சபையாகப் போய்விட்டது" என்று எழுதினார் பெர்னார்ட் ஷா. ஆனால் எந்த உறுப்பினரும் அவையின் கண்ணியமும், இறையாண்மையும் அவமதிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை.

இப்போதுள்ள சூழ்நிலையில் இதே போன்ற ஒரு விமர்சனம்

போர்! போர்! பத்திரிகைகள் மீது போர்!

தமிழக சட்டமன்றத்தின்மீது வலுவான அடிப்படையில் வைக்கப்படுமானால், உரிமைக் குழுவுக்கு மற்றுமொரு விஷயமாகப் போய்விடும். இங்கே இருக்கும் இன்னொரு ஆபத்து என்னவென்றால், முதல்வருக்கு ஏற்படுகிற கண்ணியக் குறைவும், மாசும், அவைக்கே ஏற்பட்டாற்போல சித்திரிக்கப்படுகிறது. "முதல்வர் என்பதால் தனி உரிமைகள் கிடையாது. சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில் ஒரு உறுப்பினர் என்ற முறையில்தான் சிறப்பு உரிமைகள் இருக்கின்றன" என்கிறார்கள் அரசியல் சட்ட நிபுணர்கள்.

சட்டமன்றத்தில் முதல்வர் பேசியது தொடர்பான செய்திகளை 'ஹிந்து' வெளியிடும்போது பிரயோகிக்கப்பட்ட சில

வார்த்தைகள்தான் இப்போது அந்தப் பத்திரிகைக்குச் சங்கடத்தைக் கொண்டு வந்திருக்கிறது. "முதல்வரின் கட்டுப்படுத்தப்படாத தாக்குதல்." "கோபமடைந்து உரத்த குரலில் குற்றம் சாட்டினார்" போன்ற வார்த்தைகள் செய்திகளில் பயன்படுத்தப்பட்டன.

"அரசின் செல்வாக்கையும், புகழையும் எந்த அளவிலாவது குறைக்க வேண்டும்" என்ற வகையில் உள்நோக்கத்தோடு செய்தி வெளியிடப்பட்டதாகச் சொல்கிறார் சபாநாயகர். சட்டசபை என்பது சபாநாயகருக்குக் கீழுள்ள தனி அமைப்பு. அதன் ஒட்டு மொத்த சுதந்திரமான செயல்பாட்டுக்குப் பங்கம் நேராமல் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவர் சபாநாயகர். ஆனால் இங்கே அரசுக்கு ஏற்பட்டிருக்கிற 'செல்வாக்குக் குறைவு' சபாநாயகருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தங்களது செய்தி இப்படி எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி உரிமைக் குழுவைச் சந்திக்க இருக்கின்ற நிலையில் "ஆளும் கட்சியின் சகிப்புத்தன்மையில்லாத நிலையை"க் குறிக்கும் விதமாக தலையங்கம் எழுதியதற்காக, மீண்டும் ஹிந்து மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது நடப்பதைப் பார்த்தால் நூற்றிருபத்தைந்து வருட பாரம்பரியத்துக்குச் சொந்தமான ஹிந்து பத்திரிகையின் மீது களங்கம் கற்பித்து அதை ஓர் அவதூறு பத்திரிகையாகச் சித்திரிக்கும் முயற்சியில் ஆளும் கட்சி இறங்கிவிட்டதோ என்று ஐயப்பட இடம் இருக்கிறது. இதற்கும் அடிப்படை உண்டு. ஏற்கெனவே ஹிந்துவின் மேல் ஐந்து அவதூறு வழக்குகள் இருக்கின்றன. ஹிந்து' பத்திரிகை பற்றிய தமது கடுமையான விமர்சனங்களை முதல்வர் கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆங்கில காலை தினசரிகளில் ஏகபோகமாகத் தனித்தன்மையோடு இருக்கும் ஹிந்து'வுக்குப் போட்டியாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளிதழின் சென்னைப் பதிப்பைத் துவங்க, தமிழக அரசு முழு அளவில் உதவ இருப்பதாகச் செய்திகள் சொல்லுகின்றன. ஆளும் கட்சியின் சொத்தான சஃபையர் தியேட்டர் வளாகம் இதற்காகத் தயார் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. "கருணாநிதியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஹிந்து குடும்பத்திலிருந்து பெண் கொடுத்திருப்பதால் அந்தப் பத்திரிகை தனக்கு எதிராகத்தான் செயல்படும்" என்று ஜெ. கருதுகிறாராம்!

"இப்போது பெங்களூர் பதிப்பு 'டைம்ஸ் ஆப் இந்தியா' முழு அளவில் தமிழக



அரசின் விளம்பரங்களை வெளியிடுகிறது. ஆனால் "சஃபையர் தியேட்டர் வளாகம் ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு விற்கப்பட்ட தாகச் சொல்கிறார்கள்" என்கிறார் ஒரு மூத்த பத்திரிகையாளர்.

இவை ஒருபுறமிருந்தாலும் சமீபத்தில், ''உரிமைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்ட தாலேயே ஹிந்து மீது நடவடிக்கை எடுத்து விட்டதாகாது; உரிமைக் கமிட்டியில் எதிர் கட்சியினரும் உண்டு. கலந்து பேசி நல்ல முடிவுக்கு வருவார்கள்'' என்று பேரவைத் தலைவர் சற்று இறங்கி வந்து பேசி யிருக்கிறார்.

பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சி சென்ற முறை ஆட்சியிலிருந்த போது கையாண்ட முறைக்கும், இப்போதைய போக்குக்கும் வித்தியாசம் இருக்கிறது. அப்போது ஆட்டோக்களில் குண்டர்களை அனுப்பித் தாக்குவது, அதிக அளவில் இருந்தது. ஆனால் இந்த முறை வேறு மாதிரியான அணுகுமுறை கடைப்பிடிக்கப் படுகிறது. அவதூறு வழக்குகளும் உரிமைப் பிரச்னைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்த வகையில் தி.மு.க.வும் சுத்த சுயம்பிரகாசம் அல்ல. அதன் முந்தைய காலகட்டங்களில், பத்திரிகைகளும், பத் திரிகையாளர்களும் தாக்கப்பட்டிருக்கிறார் கள். ஏன்? சென்றமுறை கூட ஜெயா தொலைக்காட்சி நிருபரும் காமிராமேனும் தாக்கப்பட்டார்கள்.

முன்பு பாய்ந்த சில பத்திரிகைகள் இப்போது பதுங்குவதற்குக் காரணம் அச்சம் மட்டு மல்ல; 'விளம்பர' ஆசையும்தான். கொஞ் சம் நீக்கு போக்'காக நடந்து கொண்டால், தமிழக அரசின் விளம்பரங்கள் முழு அளவில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புகள் காரணமாகவும், சில பத்திரிகைகள் ஆளும் கட்சியைப் பொறுத்தமட்டில் மென்மையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றன. பிரபலமான ஒரு நாளிதழ், கட்சி பேதமின்றி எப்போதுமே ஆளும் கட்சிக்கு ஜே போடும் பாலிஸியைக் கொண்டிருக்கிறது. சட்ட மன்றத்தில் எதிர்கட்சிகள் செயல்பட முடியாத நிலையும், சகட்டு மேனிக்குச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையும் இருப்பதைப் பற்றித் துளிக்கூட கவலைப்படாமல் "வேகமும், விறு விறுப்பும் நளினமும் அவை யில் தாண்டவமாடுவதாகவும், அதற்கு முதல்வரே காரணம்" என்றும் பெருமைப்பட் டுக் கொள்கிறது தினமணி. இதன் போக்கு சமீபகாலத்தில் மாறி இருப்பதை வாசகர்கள் கவனிக்கிறார்கள்.

அவதூறு வழக்குகளும், உரிமைப் பிரச்னையுமாக பத்திரிகைகள் தாக்கப் பட்டால், அவற்றின் செயல்பாடுகளில் கணக்கம் ஏற்படும் என்று ஆளும் கட்சி எதிர்பார்க்கிறது. இது இயல்புதானே? "எதுக்கடா வம்பு" என்று நாம் யோசிக் கும்போது, நமது பேனாவின் சுதந்திரமான வலிமை சற்று பலவீனப்பட வாய்ப்பு இருக் கிறது. இதுவும் பத்திரிகை சுதந்திரத்துக்கு விடப்பட்டுள்ள சவால்தான்" என்கிறார் ஒரு பிரபல தமிழ் தினசரியின் ஆசிரியர்.

தமிழ்நாட்டில் மற்றொரு ஆபத்தான போக்கும் தற்போது காணப்படுகிறது. ஒரு பத்திரிகையாளரின் மீதோ அல்லது பத்திரிகையின் மீதோ தாக்குதல் தொடுக்கப் பட்டால், "அது அவர்களுக்குத்தானே" என்ற மனோபாவம் அது. தனக்கு வந்தால்தானே தெரியும் தலைவலியும், முதுகுவலியும்!

- சஞ்சயன்

படம் : ராஜன்

"எங்க டீச்சர் டீ.வி. தொடர் பார்த்துக் கொண்டே, கேள்வி பேப்பர் தயார் செய்திருக்காங்க."

"எப்படிச் சொல்றே...?"

"பதினாறு பெண்கள் ஆறு தொடர்களை நான்கு மணி நேரம் பார்த்தால், முப்பத்தி இரண்டு பெண்கள் எட்டு தொடர்களை எத்தனை மணி நேரம் பார்ப்பார்கள்.. என கேள்வி வந்திருக்கு..."

- நாமக்கல் பாலு





27 வருட தைராய்டு மருத்துவ சேவையில்

R.K. Diagnostic Centre

THYROID CARE / தைராய்டு நவீன சிகிச்சை மையம்

தைராய்டு மருத்துவ பரிசோதனை அவசியத்திற்கான சில காரணங்கள் / அறிகுறிகள் :

★ கழுத்தின் முன் பகுதியில் வீக்கம்.
★ கர்ப்பம் தரிக்க முடியாமை.
★ நிலையற்ற மாதவிடாய் சுழற்சி
★ அசாதாரணமான தூக்கம் மற்றும் வலி
★ கை நடுக்கம், கோபம், மன அழற்சி
★ பரம்பரையில் தைராய்டு குறைபாடு
★ சீதோஷ்ண மாற்றங்களை தாங்க முடியாமல் அவதி
★ அதீத உடல் எடை கூடுதல் (அல்லது) குறைதல்
★ பள்ளி செல்லும் குழந்தைகளிடையே சலனமின்மை, ஞாபகமறதி
★ குழந்தைகள் படிப்பார்வத்தில் திமர் குறைபாடு (அல்லது) வீழ்ச்சி.



டாக்டர் ஆர்.ராம்குமார் MBBS, DRM, RSO, DIT (MAHE) VONM (Germany) VFNM (USA)
R.K. Diagnostic Centre
Madras Isotope Laboratory & Research Centre
60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2.
போன் : 28551712, 28533595, 20013744

'பொடா' வாயஸ் இல்லையாமே?

● டி. சுப்ரமணியன், மேலையூர்,

? தமிழகத்தின் அனைத்து சட்ட சபைத் தொகுதிகளிலும் 'கணினி' திட்டம் செயல்படுத்தப்படும் என்கிறாரே ஜெயலலிதா?

! வீராணம் திட்ட காண்ட்ராக்ட் ஏற்கெனவே விமர்சனத்துக்குள்ளாகி விட்டது. இந்தக் கணினி மயமாக்கும் திட்டத்திலாவது ஊழல் புகாமலிருந்தால் சரிதான், வரவேற்போம்.

● இரா. சக்கரபாணி, கோ. புதூர்.

? எங்கு பார்த்தாலும் கூட்டம் "ஜெ.ஜெ" என்று இருந்தது எனக் கூறுகிறார்களே, அதன் அர்த்தம் என்ன?

! சுதந்தரப் போராட்டக் காலத்தில் தலைவர்கள் 'பாரத் மாதா கீ... மகாத்மா காந்திஜிக்கு...' என்று குரல் கொடுத்தபடி செல்ல, பின்னால் மக்கள் கூட்டம் 'ஜே, ஜே' என்றபடி தொடரும். இப்போது 'ஜே' போடுவது 'ஓ' போடுவது போலாகிவிட்டது. போங்க!

● சுதா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? சென்னையில் நேற்றுக்கூட, ஒருவர் சீட்டு சேர்த்து ஒரு கோடிக்கும் மேலான மக்களின் பணத்தை எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விட்டதாக செய்தி. நம் மக்களுக்கு இன்னுமா விழிப்புணர்வு ஏற்படவில்லை?

! 'சீட்டு' லேயே 'சீட்' இருப்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால் எப்படி விழிப்புணர்வு வரும்?

● கே.கே. வெங்கடேசன், சென்னை.

? மனக் கட்டுப்பாட்டுக்கு ஒரு நல்ல வழி சொல்லுங்களேன்?

! இரண்டு வழிகள் சொல்லலாம்:

1. விவேகானந்தர் சொன்னது - தியானம்.
2. இராஜாஜி சொன்னது - ஓயாத, ஆக்கபூர்வ உழைப்பு.

● வி.எஸ். கோவிந்தன், மதுரை.

? தலைமைச் செயலகத்தை ராணி மேரிக் கல்லூரிக்கு இடம் மாற்ற எடுத்த நடவடிக்கை "பிள்ளையார் பிடிக்க குரங்கு ஆன" கதையாக மாறி விட்டதே!

! பிடிக்கப் போனதே குரங்குதானே!

● எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி.

? பாரதியார் மீசை, கட்டபொம்மன் மீசை, வீரப்பன் மீசை - எதில் கம்பீரம்?

! வெள்ளையனை நடுங்க வைத்த கம்பீர மீசைகளின் வரிசையில், கொள்ளையனையும் சேர்ப்பது அறியாமை.

● இ. துரைசாமி, சு.தே. புதூர், ஈரோடு.

? மது, மாது - எதில் போதை அதிகம்?

! இரண்டையும் விட அதிகமானது அதிகார போதை. மத்திய, மாநில அரசுகளுக்கு சிக்கனம் போதிக்க நியமிக்கப்பட்ட கமிஷன், மாதம் 22 லட்சம் வாடகைக்கு காரியாலயம் பெற்று, அதன் தோற்றப் பொலிவை அதிகரிக்க, இரண்டு கோடி செலவழிக்கிறதென்றால், அதிகார போதையின் தீவிரத்தை எளிதில் உணரலாமே!

● டி.கே. சுப்பிரமணியன்,
திருப்பரங்குன்றம்.

? 'ஸ்டாலினை ஜெயிலில் போட்டால் நாட்டுக்கு என்ன நஷ்டம்?' என்கிறாரே விஜயசாந்தி?

! விஜயசாந்திக்குப் பதில் சொல்லுமளவிற்கு தராசு தரம் தாழ்ந்து விடவில்லை.

● ஜெ. ரஜினி ராம்கி, மயிலாடுதுறை.

? காந்திஜி கூடத்தான் தடி வைத்திருந்தார் – என்கிறாரே வாலு?

! காந்திஜி வைத்திருந்தது தள்ளாட்டத்துக்கு. இவர்கள் வைத்திருப்பது பிறரை அடக்குவதற்கு.

• தாழ்ந்து விடவில்லை



• வரவேற்போம்





• கம்பீரம் - 1



• கம்பீரம் - 2



• ...?

● ஆர்.பி. ஜெயச்சந்திரன், பூனாம் பாளையம்.❒

? டான்ஸி தீர்ப்பு தாமதமாவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறதே?

! இதற்கு ஏதாவது முக்கியக் காரணமிருக்கலாம். ஆனால் பொதுவாக நோக்குமிடத்தில் Justice delayed is justice denied என்பது நிரந்தர உண்மை.

● ம. நிர்மல் குமார், கோவை -1.

? முன்னணி தொலைக்காட்சி நிறுவனத்தின் கல்வி நிறுவனங்கள் பற்றிய கருத்துக் கணிப்பு சரியா? இதனால் சில கல்வி நிறுவனங்களுக்கு மதிப்பு உயரவும், சில கல்வி நிறுவனங்களின் மீது அதிருப்தியும் வர வாய்ப்புள்ளதே!

! இதனால் போட்டா போட்டி உருவாகி மற்ற கல்வி நிலையங்களும் தரத்தில் உயர வாய்ப்புண்டு. மக்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் தரத்தை மட்டுமே பார்க்க மாட்டார்கள். அண்மையிலிருக்கிறதா, தங்கள் பொருளாதார நிலை, போன்றவற்றையும் கவனிப்பார்கள். தரமும் உயருமானால் நல்லதுதானே!

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33.

? பொது வாழ்வில் ஊழல் ஒழிந்தால்தான் இந்தியா வல்லரசாக மாற முடியும் என்று நம் ஜனாதிபதியே சொல்கிறாரே?

!அது சரி, ஆனால் ஊழல் ஒழிய என்ன வழி என்பதை அவர் சொல்லவில்லையே, அது அல்லவா முக்கியம்!

● த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? 'பொடா சட்டம் வாபஸ் இல்லை' என்று பா.ஜ.க. கூறிவிட்டதே?

! 'கூடவே நாடாளுமன்றத் தேர்தல் முன்னதாகவே நடக்கும் என்றும் சொல்லி விட்டார்கள் பா.ஜ.க. தலைவர்கள். அவர்களுக்கு உள்ளூர பொடாவிலும் நம்பிக்கை போச்சு, தங்களிடமும், கானே கான்!

● கல்லன் கிருஷ்ணராஜ், குன்னூர்.

? தனியார் மருத்துவக் கல்லூரிகள் அனுமதிக்கப்படுவதை ஆட்சேபித்து போராடும் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் செயல் நியாயமானதுதானா?

! நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப போதிய மருத்துவர்கள் இல்லை எனும் போது இந்த ஆட்சேபணை தவறானது. அரசு நடத்தும் கல்லூரிகளில் மாணவர்களுக்குக் கட்டண விகிதம் குறைவாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. இவர்களுடைய உண்மையான பயம் எதிர்கால வேலை வாய்ப்பு. அரசு மருத்துவர்களைத் தேர்வு செய்யும் போது அரசுக் கல்லூரியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை என்றால் பிரச்னை தீரும். எது எப்படியானாலும் மருத்துவக் கல்வியின் தரத்தில் கவனக் குறைவு, சலுகை, கூடவே கூடாது. இது வாழ்வா, சாவா சமாச்சாரம்!

● கே. கணேசன், சென்னை - 5.

? ஏர் இந்தியா பைலட்கள் சார்ஸ் நோய் சம்பந்தமாக அரசாங்கத்துடன் மல்லுக்கு நிற்பது பற்றி...?

! பயணிகளின் உருவத்தில்தான் சார்ஸ் இறக்குமதியாகிறது என்று உறுதியான பிறகு, விமானிகள் உயிருக்குப் பயந்து பின்வாங்குகிறார்கள். இதை கோழைத்தனம் என்று விமர்சிக்கவும் முடியாது. அதே நேரம் போதிய பாதுகாப்பு வசதிகளோடு பணிக்குச் செல்வதை இவர்கள் நிராகரிப்பது இந்திய சகிப்புத் தன்மைக்கு ஏற்றதும் அல்ல.

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
ஆர்.பி. ஜெயச்சந்திரன்,
பூனாம் பாளையம் (அஞ்சல்),
திருச்சி - 9.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
வி.எஸ். கோவிந்தன்,
16, கற்பக நகர், 16வது தெரு,
கோ.புதூர், மதுரை - 7.

வர்த்தமானன் பதிப்பகத்தின் புதிய ஷோரூம் திறப்பினை முன்னிட்டு வரலாறு காணாத சலுகை தொடர்கிறது !

பட்டியலில் மேலும் புதிய நூல்கள்

நூல்கள்	பக்கங்கள்	விலை	சலுகை விலை
1. திருவருட்பா - மூலமும் தெளிவுரையும் (7 தொகுதிகள்)	3415	1100.00	**700.00**
2. நாலாயிர திவ்வியப்பிரபந்தம் - மூலமும் தெளிவுரையும் (9 தொகுதிகள்)	4736	1000.00	**600.00**
3. வில்லிபாரதம் - மூலமும் தெளிவுரையும் (4 தொகுதிகள்)	2062	650.00	**425.00**
4. பெரிய புராணம் - மூலமும் தெளிவுரையும் (6 தொகுதிகள்)	2391	600.00	**400.00**
5. திருவிளையாடல் புராணம் - மூலமும் தெளிவுரையும் (5 தொகுதிகள்)	1959	500.00	**275.00**
6. திருமந்திரம் - தெளிவுரையும் (3 தொகுதிகள்)	1823	450.00	**225.00**
7. சீவகசிந்தாமணி - மூலமும் தெளிவுரையும் (3 தொகுதிகள்)	1533	300.00	**175.00**
8. திருப்புகழ் - மூலமும் தெளிவுரையும் (4 தொகுதிகள்)	2300	400.00	**180.00**
9. அரிச்சந்திர புராணம் - மூலமும் தெளிவுரையும்	747	180.00	**80.00**
10. சிவபுராணம் - மூலமும் விளக்கவுரையும்	418	78.00	**50.00**
11. திருவடிப் புகழ்ச்சி - மூலமும் விளக்கவுரையும்	328	75.00	**50.00**
12. நன்னூல் - மூலமும் விளக்கவுரையும்	408	125.00	**70.00**
13. அறநெறிச்சாரம் - மூலமும் விளக்கவுரையும்	200	70.00	**40.00**
14. நற்றிணை - மூலமும் தெளிவுரையும்	685	125.00	**70.00**
15. குறுந்தொகை - மூலமும் தெளிவுரையும்	541	100.00	**60.00**
16. அகநானூறு - மூலமும் தெளிவுரையும் (3 தொகுதிகள்)	1593	275.00	**150.00**
17. புறநானூறு - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	808	150.00	**90.00**
18. கலித்தொகை - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	951	170.00	**120.00**
19. பரிபாடல் - மூலமும் தெளிவுரையும்	591	100.00	**65.00**
20. ஐங்குறுநூறு - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	813	150.00	**85.00**
21. பதிற்றுப்பத்து - மூலமும் தெளிவுரையும்	654	125.00	**75.00**
22. பத்துப்பாட்டு - மூலமும் தெளிவுரையும் (2 தொகுதிகள்)	1347	250.00	**150.00**
23. சூளாமணி - மூலமும் தெளிவுரையும்	800	200.00	**120.00**
24. திருவாசகம் - மூலமும் தெளிவுரையும்	471	70.00	**35.00**
25. தமிழ் - தமிழ் அகராதி	908	100.00	**60.00**
26. சுக்கிர நீதி	456	70.00	**40.00**
27. வள்ளலாரின் உரைநடை நூல்	731	200.00	**150.00**
28. மகாபாரதம் நீதிகள்-கிளைக்கதைகள்	204	50.00	**25.00**
29. வில்லிபாரதத்தில் கண்ணன்	264	86.00	**48.00**

30. பயன் தரும் பாராயணம்	171	35.00	**20.00**
31. திருமுறைத்தியானம்	365	60.00	**35.00**
32. சுய முன்னேற்ற நூல்கள் 1. சிகரத்தைத் தொடுவோம், 2.வாழ்ந்து காட்டுகிறேன் 3.மனதை வென்றால் உலகை ஆளலாம், 4.மனோசக்தி 5. வெற்றி உங்கள் கையில், 6.வல்லுநர் வரலாற்றுச் சுருக்கம்	1201	225.00	**125.00**
33. இவ்வளவுதான் ஆங்கிலம் - தமிழ் விளக்கத்துடன்	504	265.00	**120.00**
34. இங்கிலீஷ் ஸ்பீகிங் கோர்ஸ் - தமிழ் உச்சரிப்புடன்	200		
35. Dictionary of Synonyms & Antonyms *with Tamil Meaning*	300	40.00	**24.00**
36. Dictionary of Proverbs *with Tamil Translation*	304	40.00	**24.00**
37. Dictionary of Quotations *with Tamil Translation*	406	40.00	**24.00**
38. Dictionary of Idioms & Phrases *with Tamil Translation*	522	80.00	**50.00**
39. Letter Writing தமிழ் மொழிப்பெயர்ப்புடன்	458	60.00	**32.00**

கையடக்கப்பதிப்பு

1. நாலடியார்- மூலமும் தெளிவுரையும்	176	10.00	**6.00**
2. சிலப்பதிகாரம்- மூலமும் தெளிவுரையும்	500	45.00	**35.00**
3. மணிமேகலை- மூலமும் தெளிவுரையும்	437	45.00	**35.00**
4 பழமொழி நானூறு - மூலமும் தெளிவுரையும்	192	15.00	**10.00**
5. திருக்குறள்-நாமக்கல் கவிஞர் உரையுடன்	284	20.00	**10.00**
6. பொய்மான் கரடு, கள்வனின் காதலி, மகுடபதி, தியாகபூமி - கல்கி	1001	130.00	**78.00**
7. நாயன்மார் வரலாறு- திரு.வி.க.	334	40.00	**28.00**
8. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - திரு.வி.க.	480	45.00	**30.00**
9. வாழ்விக்க வந்த காந்தி- தமிழில் : ஜெயகாந்தன்	272	40.00	**25.00**
10. நாமக்கல் கவிஞர் பாடல்கள்	541	60.00	**30.00**
11. கீதைப்பேருரை	568	60.00	**30.00**

★ *நேரில் பெற :* எமது புதிய விற்பனை நிலையத்தில் சலுகை விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி நூல்களை உடனே பெறலாம். நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை இடைவேளையின்றி.


★ *தபாலில் பெற :* கடிதம் மூலம் தொடர்பு கொள்க. விபரம் தெரிவிக்கின்றோம்.

புதிய விற்பனை நிலையம் : வர்த்தமானன் பதிப்பகம்

40, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை -17. (உஸ்மான்ரோடு- கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

கோவையில், ஸ்டேட் பேங்க் சாலையில் அமைந்துள்ள அண்ணாமலை அரங்கில் (சாந்தி தியேட்டர் அருகில் - ஹோட்டல் ஆரியாஸ் மாடியில்) **விஜயா பதிப்பகம்** நடத்தும் புத்தகக்கண்காட்சியில் இதே சலுகை விலையில் நூல்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சலுகை 31.5. 2003 அல்லது ஸ்டாக் உள்ள வரை மட்டுமே !



• கரீனா கபூர்

அன்பே சுகம்!

பிடித்திருக்கிறதென்று பார்த்தால், அல்ஃபான்ஸோ மாம்பழங்களின் விலை, பிடிக்க முடியாத உயரத்தில் உட்கார்ந்திருந்தது சென்ற ஆண்டு. 'ஜம்போ' மாம்பழங்கள் டஜன் ஆயிரத்து இருநூறு என்றும், சின்ன சைஸ் நானூறு ரூபாய் என்றும் விற்றன; இந்த வருடம் விளைச்சலும் அதிகம்; ஈராக் போரினால் ஏற்றுமதியும் குறைவு! அதனால் பெரிய சைஸ் டஜன் ஐநூறுக்கும், சிறியவை டஜன் நூறு ரூபாய்க்கும் இறங்கிவிட்டன; கூடவே 'ட்ரக்கர்'களின் ஸ்டிரைக்கும் சேர்ந்து விட்டதா? காய்கறிகள் கன்னாபின்னாவென்று விலை ஏற, கிலோ 'நாற்பது ரூபாய் கொடுத்து பட்டாணி வாங்குவதை விட, நான்கைந்து மாம்பழங்களை அதே விலைக்கு வாங்கி சாப்பிட்டுவிட்டுப் போகலாமே' என்ற மனப்பான்மை வளர்ந்துவிட்டது. 'கனி இருப்ப காய் கவர்ந்தற்று' என்று சும்மாவா சொன்னார்கள்? ம்ம்.. மாம்பழங்களை வாங்குங்கள்...!

"**வா**ங்குங்கள்... ஆனால் மராத்திக் கடைக்காரரிடமிருந்து மட்டுமே வாங்குங்கள். மராத்தி அல்லாதவர் கடை போட்டிருந்தால் அதைப் புறக்கணியுங்கள்'' என்கிறார் ராஜ் தாக்கரே. "உ.பி.காரர்கள் மும்பையை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள்; நீங்கள் இப்படி சோம்பேறிகளாய் இருந்தால் எப்படி? பணம் பண்ணுங்கள்... எப்படியாவது... அப்போதுதான் முன்னுக்கு வர முடியும்? தினம் நம்மீது படை எடுக்கும் அயல் மாநிலத்தாரைத் தடுத்து நிறுத்த முடியும்!'' என்று ஆவேசமாக, மராத்திய மைந்தர்களை உசுப்பி விட்டிருக்கிறார். எங்கே போய் முடிய போகிறதோ?

ஷில்பா ஷெட்டி தைரியமாக ஒப்புக் கொண்டிருக்கிறார் அந்த ஆட்டத்திற்கு... "கேன்ஸ் ஃபெஸ்டிவெலில்' ஐஸ்வர்யா ராய் நடுவராக இருக்கும்போது, நான் டான்ஸாட மாட்டேம்ப்பா'' என்று மற்ற நடிகைகளெல்லாம் உதறி விட, ஷில்பா மட்டும், "என் சகோதரி ஜூரிகளில் ஒருவராக இருக்கும்போது, நான் பாலிவுட்டின் சரித்திரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நாட்டியம் ஆடுவது என்பது எவ்வளவு பெரிய பெருமை!'' என்று ஐஸுக்கே ஐஸ் வைத்துள்ளார்?


"**ப்**யூர் லவ்''வாக்கும்! கரீனா கபூர் கனடா ஷூட்டிங்கை எல்லாம் கான்சல் பண்ணிவிட்டு, அப்பா ரந்தீர் கபூருக்கு உடம்பு சரியில்லையே என்று நர்ஸ் வேலை பார்ப்பதைச் சொல்லவில்லை; அது அக்மார்க் அன்புதான். பிரபல லத்தின் பாடகர் ரிக்கி மார்ட்டின் திடீரென்று மும்பைக்கு வந்து, 'காமாத்திபுரா'வுக்கு மட்டும் விஸிட் அடித்ததைச் சொல்கிறோம். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தின் அமெரிக்கா முதலியவற்றில் வாழும் 'சிவப்பு விளக்குப்' பகுதி அபலைகளை மீட்கும் பணியில் முழு மூச்சுடன் இறங்கியிருக்கிறார் ரிக்கி. அன்பே சுகம்!



• ரிக்கி மார்ட்டின்

மும்பை மசாலா

— ஜெய்ஸ்ரீ ராஜ்



எலியைப் பிடிப்பது எளிதல்ல!

தமிழக சட்டமன்றத்தில், 'எலியைப் பிடிப்பது எளிதல்ல' என்பதை வலியுறுத்தி ஒரு அதி முக்கியமான விவாதம் நடைபெற்றுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா அதில் கலந்து கொண்டு அவையோரை மகிழ்வித்திருக்கிறார்.

பேரவைத் தலைவர் காளிமுத்துவும் தம் பங்குக்கு 'விட்' அடித்து எல்லோரையும் குலுங்கிச் சிரிக்க வைத்திருக்கிறார்.

ஆனால் இது சிரித்து ஒதுக்கிவிடக் கூடிய விஷயமல்ல!

எலிகளில் பல ரகம் உண்டு. மூஞ்சூறு, கண்டெலி, பெருச்சாளி போன்றவை. எல்லாவற்றையும் விட சாமர்த்தியமாக டிமிக்கி கொடுப்பது லஞ்ச-ஊழல் பெருச்சாளி. அது பேரவை உறுப்பினர் ஈசுவரன் கூறியது போல, வெகு வேகமாக ஓடுவது மட்டுமல்ல; சந்து பொந்துகளில் நுழைந்து தப்பிவிடும். பொறி வைத்தாலும் மோப்பம் பிடித்து நழுவும். பிடித்தே விட்டாலும்கூட வழுக்கிக் கொண்டு பாய்ந்தோடிவிடும்!

இதற்கெல்லாம் எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். ஆட்சியில் இருப்போரும், இருந்தோரும், எதிர்கட்சியினரும், மக்களும் நன்கு அறிந்தவையே. அதனால் பட்டியலிடத் தேவையில்லை.

எனினும் லேட்டஸ்டாகச் சொல்வதென்றால் வீராணம் திட்டம் பற்றி எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் பேரவையிலேயே எழுப்பிய கோரிக்கையைக் குறிப்பிடலாம்.




கல்கி



2003 மே 11
சுபானு சித்திரை 28
மலர் : 61
இதழ் : 41

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஊழல் நடந்திருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க, கட்டடங்களைத் தகர்த்துப் பார்க்கலாம்; பாலங்களில் ஓட்டைபோட்டு ஆராயலாம். ஆனால் திட்டமே நிறைவேறாமல் ஊழலுக்கு உதவ வேண்டுமானால், அது வீராணம் திட்டமாகத்தான் இருக்க முடியும்!


அடுத்தடுத்து வரும் அரசுகளுக்கு அது தகிடுதத்தத்துக்கு வசதி செய்தளிக்கிறது. எலிகளைவிட வேகமாக லஞ்ச ஊழல் குட்டிகளைப் பெற்றெடுக்கிறது!

இத்தனைக்கும் வீராணத்திலேயே தண்ணீர் கிடையாது. அது காவிரியை நம்பி இருக்கிறது. காவிரியோ, கர்நாடக அரசின் பிடியில் சிக்கியிருக்கிறது. தப்பித் தவறி வீராணத்தில் தண்ணீர் தேங்கினாலும் மேட்டுப்பாங்கான சென்னையின் பக்கம் பாயுமா? சந்தேகம்தான். அப்படியே இயந்திரம் பொருத்தி பாயச் செய்தாலும் வழியில் உள்ள வறட்சி மாவட்ட மக்கள் அதில் பங்கு கேட்க மாட்டார்களா? போராட்டம் நடக்காதா?

எல்லாம் போக, சென்னைக்கு நாலு சொட்டு நீராவது வந்து சேருமா? "இந்தக் கோடைக்கு கிருஷ்ணாநதி நீர் சென்னைக்கு வராது" என்று இப்போது முதல்வர் அறிவித்துள்ளது போல, எதிர்காலத்தில், "இந்தக் கோடைக்கு வீராணம் தண்ணீர் சென்னைக்குக் கிடைக்காது" என்று முதல்வர் அறிவிக்க நேரலாம்.

வீராணம்-டு-சென்னை கான்கிரீட் குழாய்களில், அல்லது கால்வாயில், தண்ணீர் பாய்கிறதோ இல்லையோ, லஞ்ச ஊழல் வெள்ளமாகப் பாயும் என்பதற்கு இப்போதே அறிகுறிகள் காணப்படுகின்றன. சில காலம் முன்பு ஹிந்து பத்திரிகை கொஞ்சம் முன்னோட்டம் விட்டது. வாங்கிக் கட்டிக் கொள்ளவும் செய்தது.

இன்று எஸ்.ஆர்.பி., உள்ளாட்சித் துறை அமைச்சர் சம்பத் பேரவையில் பேசி முடித்ததும், ஒரு சின்ன, ஆனால் நியாயமான கோரிக்கையை முன் வைத்தார். வீராணம் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் குறித்து அரசின் பொதுப் பணித்துறையும் இதர சில சுதந்திர அமைப்புகளும்



அறிக்கைகள் தயாரித்து அளித்துள்ளன. அவற்றையும்; திட்டத்தின் நான்கு நிலைகளுக்கும் பெறப்பட்டுள்ள டெண்டர் விவரங்களையும்; இந்தத் திட்டத்தைக் குறித்து சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் இயக்குனர்கள் விவாதித்தபோது எழுதப்பட்ட அவைக் குறிப்புகளையும் சட்டமன்றத்தில் அரசு சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு தகவல் பெறும் உரிமை சட்டபூர்வமாகவே மக்களுக்கு உண்டு எனும்போது, மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லாமல் போய் விடுமா?

ஆனால் இந்த முக்கிய கோரிக்கை பற்றி கனத்த மௌனம் சாதித்தார் அமைச்சர் சம்பத். அவைத் தலைவரோ, எஸ்.ஆர்.பி.யின் கோரிக்கையை நிராகரித்தே விட்டார். தொடர்ந்து காங்கிரஸ் வெளி நடப்பு செய்துள்ளது.

வீராணம் திட்டத்தில் தில்லுமுல்லு எதுவுமே இல்லை என்றால் எஸ்.ஆர்.பி.யின் எளிய கோரிக்கையை ஏற்பதில் அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இருக்கத் தேவையில்லை. மாறாக, வடிகால் வாரியம் தீட்டியுள்ள திட்டத்தில் லஞ்சலாவண்யத்துக்கு வடிகால் அமைக்கப்பட்டிருக்கு மானால், அது பற்றி மக்களுக்குத் தெரியவராமல் போகாது. இன்றில்லை எனில் நாளை அது வெளிவரவே செய்யும்.

லஞ்ச ஊழல் என்பது இந்த நாட்டை - தமிழகத்தை - பீடித்துள்ள கொடிய நோய். ஸார்ஸ் நோயை விடவும் பயங்கரமானது. குண்டு பெருச்சாளிகள் மூலம் வேகமாகப் பரவுகிற தொற்று நோய்.

சட்டமன்றத்தில் முடிவானது போல, 'எலியைப் பிடிப்பது எளிதல்ல' என்றாலும் எஸ்.ஆர்.பி.யின் முயற்சி பாராட்டுக்குரியது. இதற்காக அவருக்கு ஒரு எலிப் பொறியும் குண்டாந்தடியும் பரிசளிக்கலாம். மசால்வடையை அவரேதான் திறம்படத் தயாரித்தாக வேண்டும்! ●

காசி, கங்கையில் செய்யும் தீபவழிபாடு மனித வாழ்வுக்கு மேன்மை அளிக்கக்கூடியது !

முக்தி தரும் ஸ்ரீ அன்னபூரணி க்ஷேத்ரமான

காசியில் மாதாமாதம் அமாவாசைநாளில்

கங்கையில் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள் !

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் புண்ணிய க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்டிட்" **5** ஆம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை !

பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பிரபஞ்சம் முழுமைக்கும் உணவு படைக்கும் தாயாக விளங்கும் ஸ்ரீ அன்னபூரணி மாதா கொலுவீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று கங்கையில் தீபமேற்றி, அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். அன்பர்கள் அனைவராலும் காசியில் கங்கைக்கு தீபமேற்றி அன்னதானமிடமுடியும் என்ற இறை சிந்தனையோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான இறை பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும், அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்கு கொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ராங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தாமங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000- அனுப்பும் போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்டப்பிரதானத்திற்காக ரூ. 5000- அனுப்பும் அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை பத்து ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்கு பணம் அனுப்பும் அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர் தங்களுடைய வேண்டுதலையும், பிரார்த்தனையையும் தெரிவித்தால் அதற்கேற்ப நீங்கள் விரும்பும் அமாவாசை தினத்தில் காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி செம்பும், காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தில் காசியில் அன்னதானமும், கங்கையில் தீபமேற்றும் பணியும் செய்து பத்து வருடங்கள் ஆன்மீகம் மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் மங்கலம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ. 5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

அன்னதான சேவையிலும், கங்கைக்கு தீபமேற்றும் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4 என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயம் மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

TEL : 2495 9302, E-mail:siva siva @ vsnl.net



"காசியில் அன்னதானமிடுவது வாழ்வில் பெரும் புண்ணியத்தைக் கொடுக்கும்"



பந்தா பரமசிவம்

கதையோடு ஒட்டிய நகைச்சுவை காணாமல் போய்விட்ட கோடம்பாக்கத்திலிருந்து முழு நீள நகைச் சுவைப் படங்களுக்காக ஏங்கும் ரசிகர்களுக்கு நல்ல சம்மர் சாய்ஸ்.

ஹார்பரில் மூட்டை தூக்கி முதுகு ஒடிந்த பிரபு, கலாபவன் மணி இருவருக்கும் குறுக்கு வழியில் கோடீஸ்வரர்கள் ஆக ஆசை. வினு சக்கரவர்த்தி, மணிவண்ணன் இருவரும் தத்தம் செல்லப் புத்திரிகளுக்கு மில்லியனர் மாப்பிள்ளைகளைத் தேடிக் கொண்டிருக்கும் ஏட்டிக்குப் போட்டி கோடீஸ்வரர்கள். வினு சக்கரவர்த்தி வீட்டுக்குப் பெண் பார்க்கப் போய் அவமானப்பட்டுத் திரும்பிய லிவிங்ஸ்டன், பழி தீர்த்துக் கொள்ள பிரபு, கலாபவன் மணி இருவரையும் அம்புகளாக ஏவி விடுகிறார். கோடீஸ்வர மாப்பிள்ளைகளாக வேஷம் கட்டிக் கொண்டு போய் திட்டமிட்டபடி ரம்பா, அபிநயஸ்ரீ மனங்களில் இடம் பிடிக்கும் இவர்களின் குட்டு எப்போது உடைகிறதோ, அப்போது படம் முடிந்துவிடும் என்று ரசிகன் சுவாரஸ்யமாய் நிமிர்ந்து உட்கார, அட்டகாசமான காமெடிக் களத்தில் அநாயாசமாகக் காட்சிகளை நகர்த்திக் கொண்டு போகிறார் இயக்குனர் டி.பி. கஜேந்திரன்.

பிரபு கிட்டத்தட்ட ஒரு நகைச்சுவைக் கதாநாயகனாகவே மாறிவிட்டார். அதற்கு அவரின் தற்போதைய உடலமைப்பு முழு ஒத்துழைப்பு தருகிறது. கலாபவன் மணியோ ஒரு மினி அனிமல் பிளானட் சேனலைப் போல உடல்மொழியில் கலக்குகிறார். இலேசான மலையாள வாசனையோடு அவர் பேசும் தமிழ் கூடுதல் நகைச்சுவை.

அப்பாஸ் - மோனிகா காதலை திரைக் கதையின் முக்கியத்துவம் கருதி அளவோடு பயன்படுத்தியிருக்கும் இயக்குனர், எல்லா பாத்திரங்களுக்கும் போதிய முக்கியத்துவம் கொடுத்திருப்பதைப் பாராட்டலாம்.

ஒரு பொய் சொன்னால் கூட, பொறுத்துக் கொள்ள முடியாத சிதம்பர முதலியார் பாத்திரத்தில் பி.வாசு கச்சிதமாய்ப் பொருந்தி இருந்தாலும், கம்பியைப் பழுக்கக் காய்ச்சி டிரைவருக்கு சூடு போடுவதெல்லாம் ரொம்ப ஓவர்.

கலகலப்பாக, சிறப்பாக இசை அமைத்திருக்கும் சிற்பி இன்னொரு ரவுண்ட் வரலாம்.

கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி எடுக்கப்படும் குப்பைப் படங்களை விட, கவலைகளை மறந்து சிரிக்க வைக்கும் லட்சியத்தோடு லட்சங்களில் எடுக்கப்படும் இதுபோன்ற படங்கள் எவ்வளவோ மேல்.

- விஷுவல்தாசன்

● ஆவரேஜ்



முன்னேறு மேலே மேலே - தொகுப்பு க்ளிக் ரவி

தடம் மாறும் வாழ்வையும், தற்காலிகச் சறுக்கலிலும், தரமிழந்து தாழாமல் தடுப்பது நம் முன்னோர் காட்டிய வழியும், கூறிய அறிவுரைகளும்தான். இயேசு, புத்தர், காந்தி முதல் கண்ணதாசன் வரை பல அறிஞர்கள் கூறிய பொன் மொழிகளின் தொகுப்பு.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.40

உப கதை - பிரளயன்

இதிகாசக் கதைகள் மரபு சார்ந்த கூத்து வடிவங்களாக வெறும் பொழுது போக்கு அம்சங்களாக இருந்தது மாறிப் போய் சமூகத்தைத் தட்டியெழுப்பி, தவறுகளைத் திருத்தவும், நிறுத்தவும், தட்டிக் கேட்கவும் கூடியதாகப் பரிமளித்திருக்கின்றன. அவ்வகையில் நுட்பமான படிமங்களுடன் வடிக்கப்பட்ட கூத்து வடிவத்தின் நூல் வடிவம்.

மருதா, 10, ரயில்வே ஸ்டேஷன் சாலை, எடமலைப்பட்டி புத்தூர், திருச்சி - 620 012. விலை ரூ.50.

தேவதை வீதி - மகரந்தன்

மழை விழுந்தவுடன் எழும் மண்ணின் மணம் போல உணர்ச்சிக் குவியல்களிலிருந்து எழுந்து மனத்தை நிறைக்கும் கவிதைகளின் தொகுப்பு. மண்ணின் மணமும், பெண்ணியமும் பேசுகிற, சிலிர்ப்பையும் சிந்தனையையும் ஒருங்கே தருகிற கவிதைகள்.

லலிதா மூர்த்தி பதிப்பகம், மாமரத்து வீடு, சம்பாக் கோட்டகம், எடையூர் அஞ்சல், திருவாரூர் - 614 102. விலை ரூ.35.

இந்திய மறுமலர்ச்சி சிந்தனையாளர்கள் - க.நா. சுப்ரமணியம்

நாடு விடுதலை பெற்றபின் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டிய சமுதாய, அரசியல், கலைத் துறைகளில் அதற்காக வித்திட்டு, மனம், மெய், பொருள் என்று வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்ட மாமனிதர்களைப் பற்றி விரிவாக, செறிவாகக் கூறும் நூல்.

மருதம் பதிப்பகம், 38, கோமுட்டித் தெரு, ஒரத்த நாடு - 614 625. விலை ரூ.40.

கிராமங்களின் கதை - பா. செயப்பிரகாசம்

ஓட்டுத் திண்ணையிலும், ஒழுகும் கூரையிலும், ஓடைக் கரைகளிலும், ஓயாமல் உழும் வயற்காட்டினிலும், கிராமத்து மனிதருக்கு மூச்சாக, பேச்சாக, உழைப்பாக, ஓய்வாக இருப்பவை கதைகளும் பாட்டுகளும், அத்தகைய கிராமத்துக் கதைகளும் கிராமியக் கலைஞர்களின் வாழ்வுகளையும் கொண்ட அருமையான தொகுப்பு.

அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சை - 613 007. விலை ரூ.90.

லா.ச.ராமாமிருதம் படைப்புலகம் - அபி

மணிக் கொடி காலத்து சிறுகதை ஜாம்பாவனான லா.ச.ரா.வின் எழுத்துக்களை, அவற்றின் தத்துவங்களை, அவர் அனுபவங்களை, அவர் ஏற்கவும் மறுக்கவும் செய்தவற்றை அவரது படைப்புகளைக் கொண்டு விவாதித்து விவரிக்கும் தொகுப்பு.

கலைஞன் பதிப்பகம், 10, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.100.

- சேனன்

Preethi®

Range of Home Appliances

INNOVATION 25 Years EXCELLENCE 1978 - 2003



விற்பனை மற்றும் சேவை மையம்:

டி.ஏ.டெய்லர் பி. லிட் 2, போட் கிளப், முதல் அவின்யூ, சென்னை 28. ☎2434 7963, 2434 1512.

கிளைகள்: தி.நகர் ☎24347418, 24345348, வேலூர் ☎2215916, திருச்சி ☎2781288, சேலம் ☎2350878, கோயம்புத்தூர் ☎2333687, மதுரை ☎2623276, திருநெல்வேலி 2320252, பாண்டிச்சேரி ☎2346383, பெங்களூர் ☎2222583, விஜயவாடா ☎2578158, செகந்திராபாத் ☎27819516, விசாகப்பட்டினம் ☎2541915. கொச்சி ☎2370781, திருவனந்தபுரம் ☎2339807. கண்ணூர் ☎2765948.



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.
E-mail:svhome@vsnl.net





• அர்ஜுனுடன் சண்டைக் காட்சியில்

அந்த இருபத்தெட்டு வயது இளைஞரின் கால் ஷீட்டுக்காகத் தவம் கிடக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

விவேக் ஓபராயா? விஜய்யா? அஜித்தா என்றெல்லாம் முடியைப் பிய்க்காதீர்கள். அந்த ஹீரோ, பீட்டர் ஹெயிங். ஸ்டண்ட் மாஸ்டர்.

காலையில் அர்ஜுன் சண்டைக் காட்சி. அப்புறம் விஜய் படத்துக்கு 'சண்டை'. மதியம் பிரபுதேவா படத்துக்கான டிஸ்கஷன், மாலையில் 'நியூ' பட வேலை. மறுநாள் காலை, தெலுங்குப் படத்துக்காக ஹைதராபாத் பறக்கணும்...

நிற்பதற்குக் கூட நேரமின்றி பம்பரமாகிறார் பீட்டர் ஹெயிங்!

"வியட்நாம்லதான் பிறந்தேன். தாத்தாவுக்குப் பூர்வீகம் சென்னை. பாட்டி வியட்நாமைச் சேர்ந்தவங்க. எனக்கு மூணு வயசு இருக்கும்போது அங்கேயிருந்து அகதிகளாக தமிழகம் வந்துட்டோம். அப்பா அங்கே குங்ஃபூ மாஸ்டர். இங்க பிழைக்கணுமே. அதனால குங்ஃபூ வகுப்பு ஆரம்பிச்சார். வடபழனியில வசித்ததால, சினிமா ஸ்டண்ட் ஆட்களோட பழகுற வாய்ப்புக் கிடைச்சது. அவங்க அப்பாவை ஸ்டண்ட் யூனியன்ல சேர்த்துவிட்டாங்க. விஜயன், விக்ரம் தர்மா மாதிரியான மாஸ்டர்கள்கிட்ட அப்பா வொர்க் பண்ணினார்.

கூடவே நானும் குங்ஃபூ கத்துக்கிட்டேன். ஜிம்னாஸ்டிக்ஸூம் படிச்சேன். ஸ்கூல்ல சேர்த்தாங்க. படிப்பு ஏறலை. அப்பாவும் கட்டாயப் படுத்தலை. 'பேசாம சினிமாவுக்கு வந்துரு'ன்னு சொன்னார். சரின்னு சொன்னேன்.

அதிலயும் ஒரு சிக்கல். இருபது வயது ஆனால்தான் ஸ்டண்ட் யூனியன்ல சேர்த்துப்பாங்க. அதுவரை வெயிட் பண்ண வேண்டியதாப் போச்சு.

இடையில விஜயகாந்த் சாரோட 'காவியத்தலைவன்' படத்துல நடிக்க ஒரு சின முகம் தேவைப்பட்டது. உடனே என் முகம் ஓ.கே. ஆக, அந்தப்படத்தில சண்டைக் காட்சியில நடிச்சேன். அந்தக் காட்சிக்கு நல்ல வரவேற்பு.

அப்புறம் இருபது வயசானதும் ஸ்டண்ட் யூனியன்ல மெம்பரானேன். எட்டு வருஷம் கனல் கண்ணன் மாஸ்டர்கிட்ட உதவியாளரா இருந்தேன். நான் குள்ளமா இருக்கேன் இல்லையா? அதனால, ஹீரோக்களோட மோதுற மாதிரியான சீன் வந்தா, என்னைச் சேர்த்துக்க மாட்டாங்க. ஆனா ரம்பா, விஜயசாந்தி, ரோஜா போன்ற நடிகைகளுக்கு 'டூப்'பா நடிச்சிருக்கேன்!" என்று படபடவென்று பேசும் பீட்டர் முத்து, படையப்பா, முதல்வன், உட்பட பல படங்களில் பணிபுரிந்திருக்கிறார்.

"நான் ஸ்டண்ட் மாஸ்டரா வொர்க் பண்ணிய முதல் தமிழ்ப் படம் 'மின்னலே!' கடந்த மூன்று வருடங்களா, அசோக்பச்சன், சிரஞ்சீவி, நாகார்ஜுனா, ஜூனியர் என்.டி.ஆர்., ஸ்ரீகாந்த், சிம்பு, உட்பட இந்தியாவின் முக்கியமான நடிகர்களோட பணியாற்றியிருக்கேன்.



• பீட்டர் ஹெயிங்

இன்னைக்கும் லாஜிக் வேணும்!

"பொதுவா, சினிமாவுல பார்த்தீங்கன்னா ஹீரோ, ஏழெட்டுப் பேரை பந்தாடுற மாதிரி காட்சியிருக்கும். ஆனால் சண்டைக்காட்சிகள்ல கூட லாஜிக் இருக்கணும்ம்னு நினைக்கிறேன் நான். அதனால படத்தோட கதை, சிச்சுவேஷன் பற்றி டைரக்டரோட டிஸ்கஸ் பண்ணிட்டு ஒரு படத்துல வந்த சண்டைக் காட்சியோட சாயல், இன்னொரு படத்துல வராத மாதிரி பண்ணுவேன். அதுதான் என் பாலிசி" என்கிற பீட்டர், கனல் கண்ணனை ஏகத்துக்குப் புகழ்கிறார். "அந்த மாஸ்டர் மட்டுமில்லைன்னா நான் இந்தளவு வர்றது கஷ்டம்தான்" என்கிறார்.

குருவடக்கம்?!

- மௌலி

படங்கள் : வெங்கடேஷ்



• விஜய்யுடன்



உயிர்ப்பு

அந்த மேடையில் கமலநாதனை சந்திப்பேன் என நான் நினைக்கவேயில்லை. பள்ளித் தோழன். பார்த்துப் பதினெட்டு வருடங்களாகின்றன.

"நீ இங்கேயா இருக்கே. மீட்டிங் முடிஞ்சு பேசுவோம்" என்றான்.

மேடையில் முழங்கி நிறைய கைத்தட்டல்கள் வாங்கினான். இளம் வயதிலேயே பேச்சு அவனுக்கு மூச்சாக இருந்தது. அவனது பேச்சைக் கேட்டு கூட்டம் கைத்தட்ட, எனக்குப் பெருமை.

கூட்டம் முடிந்து வேகவேகமாக வந்தவன், தன்னுடைய விசிட்டிங் கார்டை நீட்டினான்.

"உன்னிடம் விசிட்டிங் கார்டு இருக்கா?"

"இதோ" என்றபடி எனது கார்டைக் கொடுத்தேன்.

"இன்று இரவு ஒன்பதரைக்குத் தொலைபேசியில் பேசுகிறேன்" என்று சொன்னவன், பதிலுக்குக் காத்திராமல் காரில் ஏறினான்.

அதிர்ந்தேன் நான்.

பொதிகை மலை அடிவாரத்தில் இருந்தது நல்லூர் கிராமம். எட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள தனியார் பள்ளியில் படிப்பு.

காட்டுப் பாதை வழியாக கரடு முரடான பாதையில், மூக்கி முனகி சைக்கிள் பயணம். வேடிக்கை வினோதக் கதைகள், பேய்க்கதைகள் தூள் பறக்கும்.

"டேய் போதும்டா. ரீல் அறுந்துடப் போகுது" என்ற கிண்டல் பேச்சு.

நெல்லை காந்திபாலா

"இப்ப கதையில் சொன்னேனே அந்தப் பேயோட கொள்ளுப் பேரன்தான் இவன்" என்று சிரிப்பான் இன்னொருவன்.

''பேசாம வாங்கடா. மோகினி முழிச்சுக்கப் போவுது.''

காடு அமைதியாகத்தான் இருக்கும். எங்கள் மனசு கண்டதையும் நினைக்கும். பேசும்.

இசக்கி அம்மன் கோவிலைக் கடக்கும் போது, அருவி போல பக்தி பெருக்கெடுத்து ஓடும். அச்சம் தரக் கூடிய அந்தக் கண் களைப் பார்ப்பதற்கே மனம் பதறும்.

"பயப்படக் கூடாது. அவளும் தாய்தான்" என்பான் கமலநாதன்.

பள்ளியை விட்டு வரும்போது, நாவல் மரங்களில் வௌவால்களாக ஏறுவோம். நாவல் பழங்கள் டிபன்கேரியரில் நிரம்பும்.

நானும் கமலநாதனும் மண்ணில் விழுந்த பழங்களை விடுவதில்லை. பழங்களை மண் நீங்க வாயில் வைத்து ஊதும் போது கிண்டல் செய்வான்.

"ராமு! பழம் சுடுதா?"

அவ்வளவுதான். மரத்தின் மேலுள்ள நண்பர்கள் கூட்டம், பழங்களால் அவனை அடிக்கும்.

''பெரிய ஔவையார் பேரன்னு நினைப்பு'' என்று கிண்டல் செய்யும்.

"வேணாண்டா! வெள்ளைச் சட்டை வீணாயிடும். சட்டை யைக் கழட்டிக்கறேன்டா" என்று கமலநாதன் சொல்லச் சொல்ல, அவன் மீது நாவல் பழங்கள் விழுந்து கொண்டிருக்கும்.

தன்மீது விழுந்த பழங்களை வாயில் அடக்கி குரங்கைப்போல பழிப்பு காட்டுவான்.

வாழ்க்கைச் சக்கரம் தன் சுழற்சியை நிறுத்துமா? அது வேகமாகச் சுழன்றது. நண்பர்கள் மூலைக்கொருவராய்ப் பிரிந்தோம்.

இன்று கமலநாதனைச் சந்தித்தும் தொலைபேசியில் பேசுவதாகக் கூறிச் சென்றுவிட் டான். நகர வாழ்க்கை அவனை மாற்றியிருக்குமோ?

தொலைபேசி ஒலித்தது.

ஆவலோடு எடுத்தேன். அவனேதான்.

''டேய் ராமு! எப்படிடா? சௌக்கியமாடா? பாவி! பார்த்து வருஷக் கணக்காச்சேடா! வர்ரேண்டா ஒரு நாளைக்கு உன்னை உதைக்க" என்று அவன் பேசப்பேச மௌனமாயிருந்தேன்.

எத்தனை 'டா'க்கள்!

''வாயில கொழுக்கட்டையாடா. பேசேன்.''

''நல்லா இருக்கேன். நீ மேடையில ரொம்ப நல்லாப் பேசினே'' என்றேன்.

"அதான் சின்ன வயசிலே நாவல் பழத் தால அடிச்சு அடிச்சே பழுக்க வச்சிட்டீங் களே. அந்தப் பழம்தான் பேசுது" என்று கமலநாதன் சொன்னபோது, என் மனத்தின் அடி ஆழத்திலிருந்து ஏதோ ஓர் உணர்வு உயிர்த்தெழுந்தது. ○



கல்வி தூரத்தில்

ஆங்கில மீடியம் பள்ளி ஒன்றில், ப்ளஸ் - 2 முடித்ததும் சார்ட்டர்டு அக்கவுண்டென்ட் படிப்பில் சேர விரும்பினான் சேகர். அதற்கான ஃபவுண்டேஷன் கோர்ஸில் இடமும் கிடைத்தது. அதைச் செய்யும்போதே ஒரு டிகிரி படிப்பையும் முடித்து விட்டால் நல்லது என்று தோன்ற, பி.எஸ்.ஸி. கரெஸ்பான்டென்ஸ் கோர்ஸில் சேர்ந்தான். மூன்றே வருடங்களில் பட்டதாரி ஆனான். ஆடிட்டர் நிறுவனத்தில் முறையாக ஆர்ட்டிகிள்ஷிப் முடித்து, தேர்வுகள் எல்லாவற்றிலும் தேறி சார்ட்டர்டு அக்கவுண்டென்ட் ஆனான்.

சேகர் ஓர் உதாரணம்தான். அவர் போன்ற இளைஞர்கள் இன்று நிறையப் பேர், கரெஸ்பாண்டென்ஸ் படிப்பில் சேர்ந்து எம்.பி.ஏ., எம்.சி.ஏ. என்று டிகிரிகளைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு வேண்டிய ஆர்வமும், துடிப்பும், முயற்சியும் இருந்தால் போதும்!

'தபால் மூலம் கல்வி' என்ற முறை வழக்கத்துக்கு வந்தபோது, ஆசிரியரைப் பார்க்காமலே பாடங்கள் படிக்க முடியுமா?' என்று கேட்டார்கள். அது ஒரு காலம்.

'பாடம் சொல்லிக் கொடுப்பவரும் பாடம் படிப்பவரும் காலத்தாலும், தூரத்தாலும் பிரிக்கப்பட்டபோதும் தொடரும் கல்விதான் தொலைதூரக் கல்வி' என்பார்கள். முன்பு கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் என்ற பெயர் இருந்தது. இப்போது 'டிஸ்டன்ஸ் எஜுகேஷன்' என்ற புதுப் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

பாடங்கள் முழுதும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மாணவருக்குத் தபால் மூலம் கிடைக்கச் செய்தார்கள். இப்போது இன்டர்நெட் வந்த பிறகு, தொழில் கல்வியாகட்டும், சாதாரணப் பட்டப் படிப்பாகட்டும், விரல் நுனியில், கம்ப்யூட்டர் திரையில் பாடங்களைப் பெற்றுவிடும் அளவுக்கு முன்னேறி இருக்கிறோம்.

முன்பு தபால் கல்வி என்றால் நிரந்தரமான கல்வி முறை அல்ல என்ற கருத்து நிலவியது. நேரடியாகக் கல்லூரிக் கல்வி பெற முடியாதவர்களுக்கு இது ஒரு வரப் பிரசாதமாக இருந்தது. இப்போது தொலைதூரக் கல்வி மூலம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. கல்லூரிக் கல்வி இயக்ககம் போலவே, தொலைதூரக் கல்வி இயக்ககமும் இப்போது பல மாநிலங்களில் இயங்கத் தொடங்கி விட்டது. எம்.சி.ஏ. படிக்கும் மாணவ - மாணவிகளின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது.

தொலைதூரக் கல்வித் திட்டத்தில் மாணவர்கள் ஏன் அதிகம் சேருகிறார்கள்? சில அனுகூலங்கள் :

வீட்டில் இருந்தே படிக்கலாம். பாடங்கள் வீடு தேடி வந்துவிடும்.

வசதியான நேரத்தை ஒதுக்கிக் கொண்டு படிக்கலாம்.

வேறெங்கு குடி பெயர்ந்தாலும் படிப்பையும் தொடர முடியும்.

சம்பாதித்துக் கொண்டே படிக்கலாம்.

கூடுதலாக ஒரு டிகிரியை, படிப்புத் தகுதியோடு சேர்த்துக் கொள்ளலாம்.

தொலைக் கல்வித் திட்டத்தில் மாணவர்களுக்குச் சிரமங்களே இல்லையா? என்று கேட்கலாம். இருக்கின்றன.

1. படிப்பவர் தனியாக இருப்பார். உடன் படிக்கிறவர்களின் போட்டியும், தொடர்பும் இருக்காது. ஆசிரியரின் நேரடி மேற்பார்வை இருக்காது. அவ்வப்போது எழும் சந்தேகங்களை அவ்வப்போதே எழுப்பி விடை பெற முடியாது.

2. தனியான கவனிப்பு தொடர்ந்து கிடைக்காது. கான்டாக்ட் வகுப்புகளின்போது கிடைக்கிற கவனிப்பு மட்டுமே உண்டு. இதனால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயான தொடர்பு உறுதி பெறக் கொஞ்ச காலம் ஆகும்.

3. தொழில் நுட்பத்தின் மூலமே தகவல் தொடர்பு எளிதில் நடைபெறும் இன்றைய சூழலில், ஆசிரியரும் மாணவரும் இவற்றைக் கையாளுவதில் திறமை வேண்டும்.

அப்படியானால் தொலைதூரக் கல்வி முறையில் அதிகபட்ச பலன்கள் பெறுவது எப்படி?

உங்களுக்கு உள்ளேயே தூண்டுதல் இருக்க வேண்டும். சுய கட்டுப்பாட்டுடன் படிக்க வேண்டும். வசதிப்படுகிற நேரத்தில் படிக்கும் சுதந்திரம் இருப்பதால், உங்கள் பொறுப்பு அதிகம். இதுவே விடாமல் கல்வியைத் தொடரத் தூண்ட வேண்டும். தொலை தூரக் கல்வியின் தாக்கத்தை நீங்கள் மட்டுமே உணர முடியும்.

கோர்ஸில் சேரும் முன்னால், அதற்கு எல்லா வகையிலும் தயாராக இருங்கள். பாடத் திட்டம் என்ன என்று படித்துப் புரிந்து கொள்ளுங்கள்.

கல்வித் தேவைகள்.

அசைன்மென்ட்டுகள் சமர்ப்பிக்க வேண்டிய தேதிகள்.

அசைன்மென்ட்டுகளின் அமைப்பு.

அவற்றை முடிக்கத் தேவைப்படும் கால அவகாசம்.

இல்லை!



கான்டாக்ட் வகுப்புகள் பற்றிய விவரங்கள்.

இவை எல்லாம் திட்டவட்டமாகத் தெரிந்ததும், தேதிகளைக் குறித்து வையுங்கள். ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை, வகுப்பு வேலைகளுக்காக ஒதுக்குங்கள். ஓர் அட்டவணை தயாரித்துக் கொண்டு, அதன்படியே நடக்க முயலுங்கள். குறைந்தபட்சம் பத்து முதல் பதினைந்து மணி நேரம் ஒரு வாரத்துக்கு, இதற்காக ஒதுக்கிவிடுங்கள்.

வகுப்புகளுக்குத்தான் போக வேண்டியதில்லையே என்று பாடங்களை ஒதுக்கி வைத்து விடாதீர்கள். வகுப்புகள் நடந்தால் எப்படிச் செயல்படுவீர்களோ, அதுபோலவே செயல்படுங்கள்.

அசைன்மென்ட்டுகளைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள். சரியான முறையில் உங்கள் முன்னேற்றத்தை அளவிட இதுவே சிறந்த வழி.

கான்டாக்ட் வகுப்புகளில் சீரியஸாகப் பங்கு கொள்ளுவது நல்லது. அப்போதுதான் உங்கள் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள முடியும்.

தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக, தொலைதூரக் கல்வி ஊக்கமூட்டுவதாகவும், உற்சாகம் தருவதாகவும் அமைந்திருக்கிறது.

பி.ஸி. எனப்படும் பர்சனல் கம்ப்யூட்டர், மல்ட்டி மீடியா சாதனங்கள், இன்டர்நெட், இவை எல்லாமே தொலைதூரக் கல்வி கற்பிப்பதில் இன்றியமையாதவையாக ஆகிவிட்டன.

இந்தப் பின்னணியில், ஒரு கம்ப்யூட்டரும், இன்டர்நெட் இணைப்பும் மிகவும் அவசியம் என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

அடுத்த வாரம் : படிக்கும்போது கவனம் செலுத்துவது எப்படி?

ஆர்.கண்ணன்

வேலைக்குப் போகும் எம்.எல்.ஏ!



மதுரா கோட்ஸில் தாம் பார்த்த வேலையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார், அம்பாசமுத்திரம் தொகுதி எம்.எல்.ஏ. சக்திவேல் முருகன்.

"எங்கள் அம்பைப் பகுதியைப் பொறுத்தவரை பொருளாதார நிலையை உயர்த்தியதில் மதுரா கோட்ஸ் மில்லுக்குப் பெரும்பங்கு உண்டு. அந்த வகையில் எங்கள் குடும்பத்துக்கு ஓரளவு நில வசதி இருந்தாலும், எனது அப்பா, அம்மா இருவரும் மில்லில் வேலை செய்தவர்கள்தான். எனது பந்தம் தொடர்கிறது. குழந்தையாயிருந்தபோது மில்லுக்குள் என்னை, தொட்டில் கட்டி, தூங்க வைத்துவிட்டு அம்மா வேலை செய்வாராம். இளைஞனான நான் அரசியலில் ஈடுபட்டு எங்கள் ஊரான அடையக் கருங்குளத்தில் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இயற்பியலில் பட்டமேற்படிப்பு முடித்த எனக்கு, முயற்சி செய்திருந்தால் அரசு வேலை கிடைத்திருக்கும். ஆனால் அரசு வேலை செய்தால், பஞ்சாயத்துத் தலைவர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டியிருக்கும். எனவே சமுதாய சேவை செய்ய வேண்டுமென்ற லட்சியத்தோடு, அரசு வேலைக்கு முயற்சி செய்யவில்லை. இந்த நிலையில் மில்லில் வேலை கிடைத்தது. அதைத் தயங்காமல் ஏற்றுக் கொண்டேன்" என்று சொல்கிறார் சக்திவேல் முருகன்.

கிட்டத்தட்ட நான்கைந்து மாதங்கள் தொழிலாளியாக இருந்து, மில் வேலையின் நுட்பங்களைக் கற்றுக் கொண்டு பரீட்சையில் தேறியபின், குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டாராம்.


"இரண்டு காரணங்களுக்காகத் தொடர்ந்து வேலைக்குச் செய்கிறேன். அரசியலில் பொறுப்புக்கள் எப்போது வரும் போகும் என்று சொல்ல முடியாது. கட்சிப்பணி எப்போதும் இருக்கிறது. இந்த நிலையில் குமாஸ்தா வேலை நிரந்தரம். மேலும் இந்த மில் வருமானம், மற்றொரு வகையில் மிகவும் உதவியாக இருக்கிறது. எம்.எல்.ஏ. ஆகிவிட்டதால் கோயில் கொடை, கும்பாபிஷேகம் என்று பலர் என்னை நம்பி நன்கொடைக்கு வருகிறார்கள். இந்த வருமானம் அந்த வகையில் மிகவும் உதவியாக இருக்கிறது."

- கௌசி

படம் : ராஜன்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY



GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ரூ.400/-க்கு ராசிக்கல் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

ராசி	ராசிக்கல்	வெள்ளி மோதிரம் விலை	
மேஷம், விருச்சிகம்	பவழம் -	2 CARAT	400/-
ரிஷபம், துலாம்	வைரம் -	5 CENT	2250/-
மிதுனம், கன்னி	மரகத பச்சை -	20 CENT	400/-
கடகம்	முத்து -	2 CARAT	400/-
சிம்மம்	மாணிக்கம் -	20 CENT	400/-
தனுசு, மீனம்	புஷ்பராகம் -	1 CARAT	400/-
	கனகபுஷ்பராகம் -	½ CARAT	1000/-
மகரம், கும்பம்	நீலம் -	20 CENT	400/-

எங்களிடம் நியூமராலஜிபடியும் கல் மோதிரங்கள் கிடைக்கும்.

TOPAZ, MOONSTONE, AMETHYST, TARQUISE, TIGER EYE, BLOOD STONE, OPAL, AQUAMARINE.

ராசிக்கல் மோதிரம் வாங்க அட்சயதிதி
மே 4 மிகச் சிறந்த நாள்.

தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும்.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும்.

தபால் மூலம் மோதிரம் 1க்கு ரூ 450/-

M.O. (or) D.D. அனுப்பவும்.

தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

கடகராசி - முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசு ராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

குறிப்பு : தினசரி காலை ராஜ் டிவியில் 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியை பார்க்கவும்



ஜீவநதி

காட்சி : 18

இரவு நேரம் / கீழ் மத்திய தர மக்கள் பகுதியில் ஒரு வீடு. பாத்திரங்கள் : சரோஜா, சேது.

சமையலில் ஈடுபட்டிருக்கிறாள் சரோஜா. (சாத்தியப் பட்டால்) மீன் ஆய்ந்து கொண்டிருக்கிறாள் என்று இருப்பது மிகவும் நல்லது. ஒரு சாய்வு நாற்காலி. ஒரு ஒயர் நாற்காலி. ஒரு தடுப்பு. மிகவும் சின்ன வீடு. வெளியில் ஆட்டோ சத்தம் கேட்டு, வெளியே வருகிறாள் சரோஜா. ஆட்டோவை நிறுத்தி விட்டு வரும் சேதுவைப் புன்னகையுடன் வரவேற்கிறாள்.

சரோஜா: வா... இப்பத்தான் வழி தெரிஞ்சுதா...?

சேது: வேலை அதிகம், சரோஜா.

ஒரு சாதா சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, கூடை நாற்காலியில் அமர்கிறான் சேது. சரோஜா வேலையைத் தொடர்கிறாள்.

சேது: இன்னா மீனு...?

சரோஜா: கெளுத்தி. கானாம் கழுத்த... இது கெட்ட கேடு, இன்னா வெல்லைங்கிறே... மீனவங்க கடலுக்குப் போகலையாம். இதுங்களுக்கு மவுசு வந்துடுச்சு...

சேது: எங்க உன் அப்பா? 'அந்த' வீட்டுலயா?

சரோஜா: அத வுடு. உனக்கெதுக்கு அந்தக் கேள்வியெல்லாம்... யாருக்காவது, எவளுக்காவது சேவை செய்யலைன்னா, ஆம்பிளைகளுக்கு பொழுதே போகாதே...

சேது: (பூப்பொட்டலத்தைத் தருகிறான்) இந்தா...

சரோஜா, கையைக் கழுவிக் கொண்டு வந்து, அதை வாங்கித் தலையில் வைத்துக் கொள்கிறாள்.

சரோஜா: பரவாயில்லை... என் நினைப்பும் இருக்கு போல...

சேது: இல்லாமையா கன்னன் கிட்ட பேசினேன்?

சரோஜா: (என்ன என்பது போலப் பார்க்கிறாள்)...ம்?

சேது: நம்ம கல்யாணம் பத்தி. உங்க அப்பா பத்தி.

சரோஜா: இன்னா சொன்னாரு?

சேது: உன்னைச் சிறை எடுக்கச் சொன்னான்.



5

சரோஜா: சிறை எடுக்கிறவன், வெள்ளைக் குதிரையில, பட்டாக் கத்தியோடில்லே வருவாம்பாங்க - ஆட்டோவிலயா வருவான்?

சேது: அது மதுரைவீரன் காலம்மா... எதுக்கு ஆட்டோ? சும்மா தோளில தூக்கிட்டுப் போவேன் -

சரோஜா: போவ... போவ... கேவலம், ஒரு ஜாக்கெட் தைச்சுக் கொண்டான்னு கொடுத்து ஒரு மாமாங்கம் ஆவுது.

சேது: (எழுந்து போய் சிகரெட்டைப் போட்டு விட்டு வருகிறான்) வேலை ஒழியவே இல்ல சரோஜா... நாளைக்கு நிச்சயம் வாங்கியாந்துடறேன்.

சரோஜா: அது சரி. யார் யாருக்கோ வீடு பார்த்துட்டு அலைவே... எனக்குன்னா, உனக்கு நேரம் இல்லாமே போயிடும்!

சேது: (இலேசான திகைப்பு) யார் சொன்னா, உனக்கு?

சரோஜா: யார் சொன்னா என்ன? உண்டா, இல்லியா?

சேது: ரேணுவைப் பத்தி நான்தானே உனக்கு சொன்னவனே... பாவம்மா அது. எங்களுக்கு அக்கா மாதிரி.

சரோஜா: வேறு யாருக்கு 'அக்கா'?

சேது: எனக்கும் கண்ணனுக்கும்...

ஆய்ந்து எழுகிறாள். சட்டியில் போடுகிறாள்.

சரோஜா: சேது... அப்பா ஒரு மாதிரியா பேசுது.

சேது: என்ன சொல்றாரு?

சரோஜா: கல்யாணத்துக்கு முன்னாடி, அடிக்கடி வர வேண்டாம்னு சொல்லுது.

சேது: வந்தா இன்னாவாம்?

சரோஜா: நாலு பேரு நாலு விதமா பேசுவாங்களாம்.

சேது: உங்க அப்பா புளியந் தோப்பு காளியை வச்சுக்கிட்டு இருக்கிறதைப் பத்தியும்தான் எட்டு விதமா, அந்த நாலு பேரும் பேசறாங்களாம்.

சரோஜா: தோ பாரு சேது. அனாவசியமான பேச்சு எதுக்கு? இன்னொருத்தர் சங்கதி நமக்கு எதுக்கு?

சேது: ரைட்.... நானும் இதைத்தான் சொல்கிறேன்... என்னைப் பத்தி எவன் பேசலாம்? நாம கல்யாணம் பண்ணிக்கப் போறோம்....(குரல் நெகிழ) உன்னைப் பார்க்காம என்னால எப்படி இருக்க முடியும்?

(அவன் பக்கத்துக்கு வந்து,அவன் பின்னால் நின்று, அவன் தலைமுடியைக் கலைத்துக் கொண்டே பேசுகிறாள் சரோஜா.)

சரோஜா: இங்கு வந்தாத்தானா? நான் உன்னைப் பார்க்க வர்றேன்.

(சந்தோஷமான முகத்துடன் அவளைத் திரும்பிப் பார்க்கிறான்.

சேது: நாளைக்கு வர்றியா?

சரோஜா: (முகத்தைத் திருப்பிக் கொண்டு)... உம்.

சேது: எத்தனை மணிக்கு?

சரோஜா: சாயங்காலம் மூணு நாலு மணிக்கு...

சேது: அப்போ, கண்ணனை ஆறு மணிக்கு மேல வரச் சொல்றேன்...

பிரபஞ்சன்

சரோஜா: அது என்ன, ஆறு மணிக்கு மேலே... *(புரிந்துகொண்டு)* தூ...

இந்த 'தூ'வைச் சொல்லும்போது அவள் முகம் வெறுப்படையவில்லை.

காட்சி : 19
தெரு / பகல்/
தெருவிலிருந்து வீட்டுக்கு
பாத்திரங்கள்: கீதா, சுசீலா,
கண்ணன், செல்வம், தெய்வநாயகி

சுசீலா, அரிசி ஆய்ந்து கொண்டிருக்கிறாள். வாசலிலிருந்து அழைப்பு மணி சப்தம் கேட்கிறது. முறத்தை வைத்து விட்டுப் போய்த் தெருக் கதவைத் திறக்கிறாள்.



''ஏண்டா இன்னிக்குக் கைல கடிகாரம் கட்டிட்டு வரலை?''
''அது சந்தோஷத்துல ஆழ்ந்து போய்க் கிடக்கு!''
''என்னது...?''
''ஆமா, பெரிய முள்ளும் ஓடல; சின்ன முள்ளும் ஓடல!''
– ஆர். பிருந்தா

கீதா: இங்க, மிஸ்டர் கண்ணன் இருக்காரா? அவரைப் பார்க்கணும்....

சுசீலா: மாடியில இருக்கார்... *(வெளியே வந்து கதவைப் பார்க்கிறாள். வெறுமனே சாத்தப்பட்டிருக்கிறது.)*

இங்கதான், பக்கத்துல டீ சாப்பிடப் போயிருப்பார். வாங்களேன்.

(மாடிக் கதவைத் திறந்து கொண்டு, படியேறுகிறாள் சுசீலா. கீதா, அவளைப் பின் தொடர்கிறாள். அறைக் கதவு திறந்தே கிடக்கிறது. கட்டிலை அடைத்துக் கொண்டு கைலி, அழுக்குச் சட்டைகள் மற்றும் புத்தகங்கள், பத்திரிகைகள். அனைத்தையும் ஒழுங்கு படுத்துகிறாள், சுசீலா.)

ஆம்பிளைங்க, 'ரூமை' எப்படி வச்சிருக்காங்க பாருங்க....

கீதா சிரித்தபடி நாற்காலியில் அமர்கிறாள்.

கீதா: ஏன், நாமளும் அப்படித்தான். லேடீஸ் ஹாஸ்டல் உள்ளே போனதில்லையா, நீங்க?

சுசீலா: எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை. அவசரம் அவசரமா கல்யாணம். அவசரம் அவசரமா புக்ககம். அவசரம் அவசரமா அம்மா வீடு.

சிரிக்கிறாள். இதற்கு எந்தவித எதிர் வினைவைக் காண்பிப்பது என்று தெரியாமல், விழிக்கிறாள் கீதா. (தொடர்ந்து)

ஏதாவது காபி, டீ சாப்பிடறீங்களா? ரொம்ப அவசரம்னா, எங்கிட்டயே தகவல் சொல்லலாம்.

கீதா: நீங்க கண்ணனுக்கு...

சுசீலா: அக்கா. என்னை அவன் அப்படித்தான் கூப்பிடுவான். கூடப் பிறக்கலை. பிறந்தாதானா? வாடகைக்கு இடம் கேட்டு வந்தான். இந்த அறையைக் கொடுத்தோம். தங்கிட்டான். ரொம்ப நல்ல பையன்.

கீதா: நானும் அவரும் ஒரே வேலைக்கு போட்டி போட்டோம். எனக்கு கிடைச்சிருச்சு. அவருக்கு வேற ஒரு இடத்துல.

சுசீலா: ஓ.... நீங்கதான் அந்த 'தொண்டியா?'

கீதா: தொண்டி?

சுசீலா: பிறத்தியாருக்குத் தொண்டு செய்யற ஆண், தொண்டர். பெண் தொண்டி. அவன்தான் சொன்னான்.

(கண்ணன் பிரவேசிக்கிறான்... கைலி, டீ ஷர்ட்டுடன்.)

கண்ணன்: அட.... நீங்களா... வாங்க வாங்க... அக்கா... இவங்க கீதா....

சுசீலா: தெரியுமே. தொண்டின்னு சொன்னியே... அவங்க தானே? *(கண்ணன் திகைப்பு...)*

(கீதா கண்ணனிடம் பையைத் திறந்து ஒரு அஞ்சல் உறையை நீட்டுகிறாள்.)

கீதா: நாளைக்கே இந்த ஆபீசுக்குப் போறீங்க... வேலையில ஜாயின் பண்றீங்க...

சுசீலா: பேசிக்கிட்டு இருங்க... தோ... வந்துட்டேன். *(கட்டிலில் அமர்ந்து கொள்கிறான். கண்ணை மூடியபடி யோசிக்கிறான்.)*

கீதா: என்ன யோசனை?

கண்ணன்: என்னை மாதிரி வேலை இல்லாதவங்களுக்கு ஒரு பெரிய பிரச்னை... தூங்கி எழுந்ததும் எங்க போறதுங்கறது. படுக்கையிலேயே யோசிப்போம். போறதுக்கு ஒரு இடமில்லை. எதுக்குக் காலைலே எழுந்திரிக்கணும்னு சோம்பல் வந்துடும்...

நிழல் மாதிரி, ஒரு தாழ்வு மனப்பான்மை, யாரைப் பார்த்தாலும். எரிச்சல், கோபம். யார் மேலன்னு தெரியாமலே எல்லார் மேலயும் கோபம் கோபமாய் வரும்.

கீதா: கோபம் வரணும், கண்ணன். முட்டாள்கள் சம்பாதிக்கிறதைப் பார்த்தா கோபம் வரணும். நம்ம திறமையில பத்து சதம் இல்லாதவன், ஒரு கம்பெனி எம்.டி.யா இருந்து, அவன் கீழ நாம் வேலை செய்யறோம்னா, கோபம் வராமே எப்படி இருக்கும். லஞ்சம், ஊழல், ஓ.பி.அடிக்கிற குணம், தேசிய குணமாகப் போயிட்டது. சுரணை இருக்கிறதுதான் நம்ம பிரச்னை. நீங்க செல்வத்தை 'மீட்' பண்ணணும்.

காட்சி மாறுகிறது. கீதாவும் தெய்வநாயகியும் நடக்கும் காட்சி – செல்வத்தின் பாடசாலை – இருவரும் அவனுக்காகக் காத்திருக்கும் காட்சி – செல்வம் பேசுதல்:

செல்வம்: இந்த 'ஏரியாவில' சங்கரன்னு ஒரு தாதா – இந்த இடத்தை, இது புறம்போக்கு நிலம் – சுருட்டலாம்னு நினைக்கிறார் – பள்ளிக்கூடத்தைக் காலி பண்ணச் சொல்றார். குடிசைகளையும், காலி பண்ண ஏற்பாடு பண்றார். பணம், எந்த இடத்திலும் பாயக் கூடிய ஆயுதம் இல்லையா?

தெய்வநாயகி: *(பதற்றமுடன்)* என்ன செய்யப் போறீங்க?

செல்வம்: நான் தொடர்ந்து இந்தப் பள்ளிக் கூடத்தை நடத்துவேன். வன்முறை நடக்கும். நான் தாக்கப்படலாம். இந்த இடம் கைப்பற்றப்படலாம். அந்த மரத்தடியில, பிளாட்பாரத்துல என் வேலை நடக்கும்...

(காட்சி மாறுகிறது...)

கண்ணன்: கிரேட் சோல்... இந்த மாதிரி மனிதர்கள் இருக்கிறதாலதான், வாழ்க்கை மேல நம்பிக்கையே ஏற்படுது...

(இரண்டு கப் வைத்த தட்டை ஏந்திக் கொண்டு வருகிறாள் சுசீலா.)

சுசீலா: *(கீதாவிடம் நீட்டுகிறாள்.)* சாப்பிடுங்க.

கண்ணன்: காபியா, டீயான்னு சொல்லிருக்கா... அதை நினைச்சுக்கிட்டே சாப்பிட்டா, அது மாதிரியே இருக்கும், இல்லியா?

(சுசீலா, மேசை மேல இருக்கும் புத்தகம் ஒன்றை எடுத்து அவன் மேல் விட்டெறிகிறாள்.)

காட்சி : 20

மாலை / கடற்கரை, அல்லது பூங்கா.
பாத்திரங்கள்: தேவயானி, அம்சா, கீதா.

எல்லோர் முகத்திலும் தீவிரமான 'பாவம்.' எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

அம்மா: நான் என்ன சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்க?

கீதா: தேவா, என்ன பண்ணலாம்னு நீங்க சொல்லணும்.


அம்சா: அதான் பண்ணிட்டாளே. ஜாம் ஜாம்னு காதல் பண்ணியிருக்கா... எப்படியோ சங்கதி இவ வீட்டுல கசிஞ்சிருக்கு. இவ அப்பா, ஜாதகத்தை எடுத்துக்கிட்டு அலையுது. நாட்டு நடப்பு புரியாத கிழம்! இதுல நான் என்ன பண்ணட்டும்?

தேவயானி: என் அப்பாகிட்ட பேசுங்க. அம்மாகிட்ட பேச வேண்டாம்.

''மெகா தொடர் பார்க்கும்போது என் பெண்டாட்டி அழாதுக்குப் போய் எதுக்கும்மா பெரிசா கவலைப்பட்டுக் கிட்டிருக்கே?''

''இவ்வளவு கல் நெஞ்சுக்காரி நம்ம குடும்பத்துக்கு சரிப்பட்டு வருவாளான்னுதான்!''

– உ. ராஜாஜி



அம்சா: ஏன்?

தேவயானி: அம்மாவுக்குன்னு ஒரு ஐடியாவும் சொந்தத்துல கிடையாது. அப்பா அவங்களை, அம்பது வருஷமா சிந்திக்க விடாமப் பண்ணி, தனக்கு மூளைன்னு ஒன்று இருக்கறதையே அவங்க மறந்துட்டாங்க...

அம்சா: பெரும்பாலும் ஆம்பளைங்க பண்றதுதான்.

தேவயானி: அதனால, காதல் விஷயத்துல, தீவிரமா மறுப்பைக் காண்பிக்கிறது தான், தன்னோட 'அம்மா' கேரக்டருக்குப் பொருந்தும்னு அவங்க நினைப்பாங்க. அப்பாவுக்கு இந்த 'டயலாக்' சந்தோஷத்தைக் கொடுக்கும்னு அவங்களுக்குத் தெரியும்.

அம்சா: பொம்மனாட்டிகளுக்கு

இளைய தலைமுறையின் இசை அஞ்சலி!

''சுவாதித் திருநாள் மகாராஜாவின் சாகித்தியங்கள் சிலவற்றை அவரது பிறந்த நாளான மே இரண்டாம் தேதி பாடுங்களேன்!'' என்று கிருஷ்ணா கான சபா செயலர் யக்ஞராமன், செம்மங்குடியின் சீடர் வி.சுப்பிரமணியத்திடம்



கேட்டுக் கொண்டார்.

''நான் பாடுவதைவிட, என் இளம் சீடர்கள் பாடினால் இன்னும் நன்றாக இருக்குமே? நானே நிகழ்ச்சியை நடத்தித் தருகிறேன்!'' என்றாராம் சுப்பிரமணியம்.

அநசூயா, அபர்ணா, பவனா, மீனாட்சி கணேஷ், ஹரிசுதன், ராஜேஷ், அபர்ணா கணேஷ், ஸ்ரீநிதி, அனுஷா, சரஸ்வதி என்று தம் சீடர்களை இரண்டு மாதம் தயார் செய்தார்.

'சரஸிஜனாப' என்ற காம்போஜி ராக வர்ணத்துடன் நிகழ்ச்சியைத் துவக்கி, தேவ தேவ கலயாமிதே, கிருபயா பாலய, பங்கஜ லோசன,பாவயாமி ரகுராமம் போன்ற எல்லோருக்கும் தெரிந்த பிரபலமான பாடல்கள். அதிகம் கேள்விப்படாத உத்சவ பிரபந்த கிருதியான கனகமயம், நவராத்ரி கிருதியான பாரதி மாமவ, மற்றும் ஆஞ்சநேய பக்த பராயண என்று அதிகம் பாடப்படாத பாடல்கள் இவற்றைத் தேர்ந்தெடுத்து, பன்னிரண்டு பேருக்கும் பயிற்சி கொடுத்தார் சுப்பிரமணியம். மொத்தம் பதினெட்டுப் பாடல்கள். இரண்டு மணி நேர நிகழ்ச்சி. ஆலாபனையோ, நிரவல்களோ, சுவரம் பாடுவதோ இல்லை. அடுத்தடுத்துப் பாட்டுக்கள்தாம். அதனாலேயே அவற்றை வெகு கவனத்தோடு வரிசைப் படுத்தியிருந்தார்.

ஒரு முறை சிருங்கேரி சுவாமிகள், தன் பாடல்களை இவரது இசைக் குழு பாடியபோது, ''உங்கள் குழுவுக்குப் பக்தி குஸுமம் மஞ்சரி என்று பெயர் வைத்துவிடுங்கள்'' என்றாராம்.

வி. சுப்பிரமணியத்தின் இந்த இளைய இசைக் குழுவுக்கு அந்தப் பெயரே நிலைத்து விட்டது!

— **எஸ்.வி.என்.**

புருஷாள் கொடுக்கிற குணச்சித்திர வேஷம் அதுதான்.

தேவயானி: அதனால, அப்பாகிட்டயே டைரக்டா பேசுங்க.

அம்சா: *என்ன பேசறது?*

தேவயானி: உங்க பொண்ணு லாரன்சை நேசிக்கிறா; அவனைத்தான் கட்டிக்கப் போறா. நீங்களே இருந்து கல்யாணம் பண்ணி வைக்கிறதுதான் நல்லதுன்னு சொல்லுங்க.

அம்சா: *நல்லா இருக்குடி கதை... இதைச் சொல்லிட்டு அந்தக் கிழத்துக்கிட்டே யிருந்து நான் தப்பிச்சு வர முடியுமா? ஏற்கெனவே, இந்த குவார்ட்டர்ஸிலே இருக்கிற ஆம்பிளைக் கிழம், பொம்பிளைக் கிழம் ஜாடா என்ன சொல்லுது தெரியுமோ? இங்க இருக்கிற குட்டிகளை எல்லாம் நான்தான் கெடுத்துக்கிட்டு இருக்கிறேனாம்... போதாக்குறைக்கு இதுவேற...*

கீதா: *ஓஷோ மேல கூட இப்படிக் குற்றச் சாட்டு இருக்குது மாமி. ஏன்? சாக்ரடீஸ் மேல கூட, இளைஞர்களை அவர் கெடுக்கிறதாத்தான் குற்றச்சாட்டு. வெள்ளைக்காரன் பார்வையில, காந்தியே குற்றவாளிதானே, மாமி.*

அம்சா: *போறுண்டி... சின்ன கட்டியா வைச்சா சரி... ஐஸ் பாறையே என் தலையில வைக்காதே. என்னால தாங்க முடியாது. சரி. நான் சொல்லலைன்னா, என்ன செய்யறதா உத்தேசம்?*

தேவயானி: லாரன்சோட ஓடிப் போயிடுவேன்....

அம்சா: *வெரிகுட்... அதை இப்பவே பண்ணேன். எதுக்கு ஓடணும்? அழகா, பெட்டி படுக்கையோட ஜம்னு கால் டாக்சியில போயி அவன் வீட்ல இறங்கு.*

கீதா: *ஒரு வாய்ப்பு... தந்தைக்கும் தாய்க்கும் சிந்திக்க ஒரு வாய்ப்பு தரலாம்னுதான்...*

அம்சா: *அடடா.... பெரியவங்க மேல நீங்க காட்டற மரியாதை, அபாரம்மா. அபாரம்! சரி... உன் சமாச்சாரம் எப்படி? கண்ணனுக்கு வேலை கிடைச்சாச்சு... அப்புறம்?*

கீதா: *ஒண்ணும் இல்லை. சினேகம் தொடரும்...*

அம்சா: *பார்ப்போம்...*

(தொடரும்)



• விஜேதா

பெருமூச்சுதான்...

✉ வாண்டுகளை அழைத்துக் கொண்டு எங்கெங்கே டூர் போகலாம் என்று தலையைப் பிய்த்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இலவச இணைப்பு சரியான வழிகாட்டி. சபாஷ்!

கும்பகோணம்,
புலவர் எஸ்.கே.மூர்த்தி

✉ விஜேதாவின் தெளிவான புகைப்படத்தை வெளியிட்டு டிராவிட்டின் லட்சக்கணக்கான பெண் ரசிகைகளின் வயிற்றெறிச்சலைக் கொட்டிக் கொண்டீர்கள். கொடுத்து வைத்தவர்தான் விஜேதா. எங்களுக்கெல்லாம் பெருமூச்சுதான் மிஞ்சியது!

மொரட்டுப்பாளையம்,
இரா.வி.சௌந்தர்யா

✉ வக்கிரமான முறையில் குரூரமுடன் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் ஜெயலலிதா, புஷ், முலாயம்சிங், மாயாவதி கோஷ்டிகளின் முகத்திரைகளை கிழித்துக் காட்டியிருந்த மூன்று கார்ட்டூன்களும் முதல்தரமாக சித்திரிப்புகள்!

திருவண்ணாமலை,
லெ.சூரியன்

✉ "லாரி ஸ்டிரைக்" போன்ற போராட்டங்களுக்கு மூல காரணமே ஆட்சியாளர்களின் அலட்சியம் தான், என்பதை தலையங்கம் நன்றாக உணர்த்தியது. ஆட்சியாளர்களும் லாரி உரிமையாளர்களும் இந்தப் போராட்டத்தினால், மக்களின் பொறுமையை சோதித்தது தான் மிச்சம்!

திருச்சி,
ஆர்.அப்துல் சலாம்

✉ ''சூப்பர் ப்ராஸிக்யூட்டர்'' என்ற தலைப்பில் பல பத்திரிகைகள், அரசியல்வாதிகள் மீதான வழக்குகள் பற்றிய பட்டியலைத் தொகுத்து வெளியிட்டுள்ளீர்கள். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ 'பொடா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு முந்நூறு நாட்கள் சிறைவாசத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றார் என்பது உங்களால் சேகரிக்க முடியாத செய்தியாக இருந்திருக்க முடியாது. 'பொடா'வின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் அரசியல் கட்சித் தலைவர் வைகோ. எங்கள் கொள்கை விளக்க அணிச் செயலாளர் நாஞ்சில் சம்பத், மற்றும் எங்கள் இயக்கத்தின் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை - 8,
கோ. நன்மாறன்,
செய்தித் தொடர்பாளர், ம.தி.மு.க.

✉ இரண்டு வருட ஜெயலலிதா ஆட்சியின் அணுகுமுறையை பல்வேறு பத்திரிகை மீதான வழக்குகளே அப்பட்டமாகப் பிரதிபலிக்கின்றன. இரண்டு பக்க 'குல்லூர் செய்த லொள்ளு' கல்கியையும் வழக்கு பட்டியலில் சேர்த்துவிடுமோ என்று யோசிக்க வைத்தது.

சென்னை,
ஆர்.நாகராஜன்

✉ தலையங்கம் படித்தேன். விற்பனை வரி ஏன் வேண்டும் என்பதை மிகத் தெளிவாக வியாபாரிகளிடம் எடுத்துரைத்த ராஜாஜியின் சாதுர்யம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. 'லாரிகள் வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு முன்பே சம்பந்தப்பட்டவர்களை அழைத்து' அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் ஸ்டிரைக்கைத் தவிர்த்திருக்கலாமோ' என எண்ணினேன்.

மணியக்காரன்பாளையம்,
ஏ.ஜி.கல்யாணசுந்தரம்

வட்டமேஜை

ஆறே மாதத்தில் இந்தி பேச கற்போம், அஞ்சல் வழியில் இமயத்தை வெல்வோம்!

எல்லா கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பினும் பேச்சுக் கலையில் தேர்ச்சி பெற்றவரே எங்கும் பிரபலமாக இருக்கிறார். ஆம், இனிய பேச்சுக்கு ஈடில்லை. உப்பில்லாத கூழைக்கூட, இனிய உபசரிப்புடன் பரிமாறும்போது சுவையாக உள்ளது.

தமிழ் நாட்டுக்காரர்கள் பேச்சில் கெட்டிக் காரர்கள். சிந்தனை சக்தியும் அவர்களிடம் அபரிமிதமாக உள்ளது. தமிழில் பேச மட்டுமல்ல, எல்லா மொழிகளையும் சுலபத்தில் கற்பதும், அம் மொழிகளில் அநாயாசமாக பேசுவதிலும் நம்மவர்களுக்கு இணை நம்மவர்களே.

இவ்வளவு திறமைகள் இருந்தும், புதியதாக ஏதாவது ஒன்றை துவங்க வேண்டுமானால், ஏதோ ஒரு பயம் அவர்களை தடுத்து விடுகிறது. ''என்ன நடந்துவிடும், எது வந்தாலும் நம்மால் சமாளிக்க முடியும்'' என்ற தன்னம்பிக்கை குறைவாக உள்ளது. இந்த தன்னம்பிக் கையை நாம் அடைந்து விட்டால் நம்மை ஜெயிக்க யாராலும் முடியாது.

தன்னம்பிக்கையை பெற முதல் வழி — பல தரப்பட்ட மக்களுடன் பழகுவதே ஆகும். பல விஷயங்களை அறிய வேண்டும். 'Knowledge is strength' (அறிவே வலிமை) என்பர். 'Knowledge' என்பது புத்தகங்களை படித்து வருவதல்ல. பலருடன் பேசி, பழகி வருவதாகும். பலருடன், பல மாநிலங்களை சேர்ந்தவர்களுடன் பேச வேண்டும். பல பழக்க வழக்கங்களை அறிய வேண்டும். அப்போதுதான் அறிவு வளரும்.

இந்தி மொழி, பொதுவாக, பரவலாக எல்லா மாநிலங்களிலும் பேசப்படுகிறது; புரிந்து கொள்ளப் படுகிறது; எனவே இந்தி மொழியில் பேச கற்றால், எல்லா மாநிலங்களுக்கும் எளிதாக சென்று வரலாம். அம்மாநிலங்களில் உள்ள பல சிறப்புகளை கற்கலாம். அறியலாம், பயனடையலாம். தவிர இந்தி மொழி கற்றால் மற்ற இந்திய மொழிகளைக் கற்பது எளிதாகி விடுகிறது. ஏனெனில் இம்மொழிகள் அனைத்திலும் உச்சரிப்புகள் அனைத்தும் ஒன்று போல அமைந்துள்ளது.

''தமிழ்காரர்களுக்கு இந்தி உச்சரிப்பு கடினம்'' என்ற தவறான அபிப்பிராயம் நம்மிடம் உள்ளது. கிட்டத்தட்ட 5000க்கும் மேலான சொற்கள் தமிழிலும் இந்தியிலும் பொதுவாக உள்ளன. சில உதாரணங்களை இங்கு தருகிறோம்.

अनुकूल	(அனுகூல்)	அனுகூலம்
अनुदिन	(அனுதின்)	அனுதினம்
अनुमति	(அனுமதி)	அனுமதி
उपकार	(உபகார்)	உபகாரம்
असल	(அஸல்)	அசல்
उग्र	(உக்ர)	உக்கிரம்
उत्पत्ति	(உத்பத்தி)	உற்பத்தி
कच्चा	(கச்சா)	கச்சா (பொருள்)
कठिन	(கடின்)	கடினம்
वचन	(வசன்)	வார்த்தை
पोटली	(போட்லி)	பொட்டலம்
चाबी	(சாபீ)	சாவி
कौतूहल	(குதூகல்)	குதூகலம்

எனவே தமிழ்காரர்கள் இந்தியை கற்பது மிக எளிது. நாம் இந்தியைக் கற்றுக் கொண்டு விட்டால், நமக்கிருக்கும் அறிவையும், திறமையையும் பயன்படுத்தி, இமயத்தை என்ன? இந்தியாவில் உள்ள அனைத்தையும் அநாயாசமாக (அநாயாசம்) என்ற சொல் இந்தியிலும் உள்ளது! ஜெயிக்கலாம்.

இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு, பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்கப் பயிற்சி மையம் (State Bank of India Officers Association Institute, Chennai) எல்லோருக்கும் உதவும் நோக்கில் தபால் (post) மூலம் பேச்சு மொழி இந்தி பயிற்சி அளித்து வருகிறது.

'Diploma in Conversational Hindi' என்று அழைக்கப்படும் இப் பயிற்சி மூலம் அஞ்சல் வழியில் இந்தியில் பேசக் கற்றுக் கொள்ளலாம். அதாவது பயிற்சியில் சேருபவர்களின் விலாசத்திற்கு ஒவ்வொரு மாதமும் பாடங்கள் கூரியர் மூலம் அனுப்பப்படும். இப் பாடத்தைத் தவிர பேச்சு மொழி சம்பந்தப்பட்ட புத்தகங்களும் மற்றும் தமிழ் மூலம் பயிலுபவர்களுக்குப் 'பேச்சு மொழி இந்தி சொற்களஞ்சியம்' என்ற புத்தகமும் ஆங்கிலம் மூலம் கற்பவர்களுக்கு 'Conversational Word finder' என்ற புத்தகமும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர மாதா மாதம் நடக்கும் நேர்முக வகுப்புகளில் இந்தி

யில் பேச பயிற்சி அளிக்கப்படுகின்றது.

நேர்முக வகுப்புகள் மாதம் ஒருமுறை ஞாயிற்றுக் கிழமைகளில் (மதிய உணவுடன்) நடத்தப்படுகிறது. நேர்முக வகுப்புகளுக்கு வர முடியாதவர்களுக்கு உதவியாக Resource Centres (மொழிவள மேம்பாட்டு மையங்கள்) திருச்சி, கோவை, மதுரை, தில்லி, ஐதராபாத், மும்பை போன்ற பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பயிற்சி காலம் : 6 மாதம்

பயிற்சி கட்டணம் : ரூ. 500/-மட்டுமே

(தேர்வு, நேர்முகப் பயிற்சிக் கட்டணம் உட்பட)

மொழி ஆர்வம் உடைய எவரும் இந்தப் பயிற்சியில் சேரலாம். இந்தி மொழி ஆரம்பம் முதல் கற்பிக்கப்படுவதால் அடிப்படை கல்வித் தகுதி, வயது வரம்பு எதுவும் தேவையில்லை. (பள்ளி சிறுவர்கள் முதல் ரிடையர்

எரும், கல்கி பத்திரிக்கையின் நிறுவனருமான கல்கி கிருஷ்ணமூர்த்தியின் மகள் திருமதி ஆனந்தி ராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு பல மொழிகள் கற்பதின் அவசியத்தை ஜனரஞ்சக பாணியில் கூறினார்.

ஜூலை 2003ல் துவங்கவிருக்கும் பயிற்சியில் சேர விரும்புவர்கள் ரூ.100க்கான டிமாண்ட் டிராப்ட் SBIOA Institue, Chennai என்ற பெயரில் எடுத்து, சுயவிலாசமிட்ட, தபால் தலையுடன் (Rs. 6) கூடிய உறையுடன் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும். உரையின் மேல் English Medium/Tamil Medium என்ற பயிற்சி மொழியைக் குறிப்பிடவும். இந்த ரூ.100/- பயிற்சிக் கட்டணத்திலிருந்துக் கழித்துக் கொள்ளப்படும்.

ஒலி நாடாக்கள்: அகர உச்சரிப்பிலிருந்து



* 13.09.2002 அன்று நடந்த ஆறாவது பட்டமளிப்பு விழாவில் திருமதி ஆனந்தி ராமச்சந்திரன் அவர்கள் ஹிந்தி படிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசுகிறார். அவரது அருகில் (இ-வ) டாக்டர் எஸ்.சுப்ரமணியன், திரு. கே. பார்த்தசாரதி தலைவர், டாக்டர் ஔவை நடராஜன், திரு. எஸ்.சி. தாஸ், டாக்டர் என். மகாலிங்கம், திரு. எம். தருமராஜன் நிர்வாக இயக்குனர், திரு. டி.எஸ்.ரிஷபதாஸ், இயக்குனர்.

ஆகி வீட்டில் இருப்பவர் வரை ஆர்வமுடைய அனைவரும் சேரலாம்!

இப் பயிற்சி தமிழ் மற்றும் ஆங்கிலம் மூலம் நடத்தப்படுகிறது.

பயிற்சியில் தேறியவர்களுக்கு வருடா வருடம் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் 'Diploma in Conversational Hindi சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப்பட்டமளிப்பு விழாவில் இதுவரை ஆற்காடு இளவரசர், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், மறைந்த பாரத ரத்னா சி. சுப்ரமணியம், டாக்டர் கிரண் பேடி I.P.S பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திரு R.C. ஷர்மா, அருட்செல்வர் Dr. N. மஹாலிங்கம் போன்றவர்கள் முக்கிய விருந்தினராக உரை நிகழ்த்தியுள்ளனர். 2002, செப்டம்பர் மாதம் நடந்த பட்டமளிப்பு விழாவில் எழுத்தா

பலவகை சூழ்நிலைகளில் பேசும் பயிற்சிகளைக் கொண்ட இரட்டை ஒலி நாடாக்கள் (Twin Cassettes) வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுடன் வழங்கப்படும் துணை நூலை படித்த வண்ணம், ஒலிநாடாக்களை கேட்டால் மிக விரைவில் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். இந்த ஒலி நாடாக்களை பெற விரும்புவர்கள் ரூ. 150/-க்கான டிமாண்ட் டிராப்ட் SBIOA Institue, chennai என்ற பெயரில் எடுத்து தனியாக அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

The Executive Director,
SBIOA Institute,
229, N.S.C. Bose Road,
P.B.No. 1279,
Chennai 600 001. PH. 25340226

ADVT

சுட்டெரிக்கும் வெயிலில் மண்டை கலங்கிப் போய்க்கிடக்க, டி.வி. காம்பயர்கள் சிலரின் மண்டையைச் சோதிக்க முடிவெடுத்தோம். (உங்களையும்தான்! ட்ரை பண்ணுங்களேன்.)

சீதா, லக்ஷ்மி, சுஜாதா, இவங்களோட வீடு, 'அடையார்', 'மயிலாப்பூர்', 'போரூர்' ஆகிய இடங்களில் இருக்கிறது. இவர்கள் இருக்கும் அபார்ட்மெண்ட்களின் பெயர்கள் 'அம்பிகா', 'அமலா', 'ராணி'. இதனோட கலர்கள் 'சிவப்பு', 'வெள்ளை', 'பச்சை'.

இதெல்லாம் வரிசையாக இல்லாமல் கலந்திருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 'க்ளூ' மூலம் மூன்று பேர் வீடுகளின் ஏரியா, அபார்ட்மெண்ட், அதன் கலரை கண்டுபிடிக்க வேண்டும்.

1. ராணி அபார்ட்மெண்ட் அடையாறில் இருக்கிறது. ஆனால் அது சிவப்பு கலர் அல்ல; சீதாவின் வீடும் இல்லை.

2. லக்ஷ்மியின் வீடு அமலா அபார்ட்மெண்டில் இருக்கிறது.

3. அம்பிகா அபார்ட்மெண்ட் வெள்ளைக் கலர்.

4. போரூரில் இருக்கும் அபார்ட்மெண்ட் சிவப்பு கலரில்லை.

இது ஒரு சின்ன கணக்கு. இதைக் கொண்டு போய் டி.வி. தொகுப்பாளிகள் சில பேரிடம் நீட்டினோம்.



• பிரீத்தி





• கிருத்திகா

காம்பயர்களிடம்

'விண்'டி.வியில் 'மறக்க முடியுமா?', நியூ ரிதம்ஸ் போன்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் பிரீத்திதான் முதலில் மாட்டினார்.

'ஸ்கூல் போய்ட்டு வந்தா மாதிரி இருக்கிங்களே எப்படி?'' என்றோம்.

''அய்யோ சாமி! நான் நிஜமாகவே ஸ்கூல் போய்ட்டுதான் வந்திருக்கேன். 'ப்ளஸ் டூ' எக்ஸாமே இப்பத்தான் எழுதி இருக்கேன். என்னைப் பார்த்து இப்படி சந்தேகமா கேக்கறிங்களே அங்கிள்?''

பிரீத்தி கோபமாகப் பொரிந்தார். அவரைச் சமாதானப்படுத்திய பிறகு, ''இதுக்கு விடை கண்டுபிடிங்க பார்க்கலாம்'' என்று சவால் விட்டோம். சுமார் அரைமணி நேரம்

பேப்பர், பேனாவை வைத்துக் கொண்டு போராடியவர், கடைசியாக விடையை நம்மிடம் நீட்டினார். "தப்பா இருந்தா என்னைத் திட்டாதீங்க ப்ளீஸ்" என்று பவ்யமாக கேட்டு கொண்டார்.

என்ன ஆச்சரியம்! மூன்று விடைகளையும் சரியாக எழுதி இருந்தார். அவ்வளவுதான்! அடுத்த நிமிடமே "ஹையா... நான் 'வின்' பண்ணிட்டேன்" என்று துள்ளிக் குதித்தார்.

"பிரீத்தி, நீங்க கணக்குல எப்படி?" என்றோம்.

"செலவு பண்றத்துலயும் வீக், யாரையாவது செலவு பண்ண வைக்கிறதிலும் வீக்" என்றார். நம்ம பாக்கெட்டை பத்திரப்படுத்தி விட்டு, அடுத்த நிமிஷமே அங்கிருந்து எஸ்கேப் ஆனோம்.



• மகாலட்சுமி





• சோபியா



'ராஜ் டி.வியின் 'ஓடி விளையாடு பாப்பா' நிகழ்ச்சிக்காக, குழந்தைகளோடு குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்த மகாலட்சுமி சிக்கினார் அடுத்து. கணக்கை அவரிடம் நீட்ட, "ஒரு நிமிஷம் இருங்க, குழந்தைகளை அனுப்பிட்டு வந்துடுறேன்னு" அந்த மழலைகளிடமிருந்து பிரியா விடைபெற்று கொண்டு வந்தார்.

கணக்கு கலாட்டா!

"கணக்கு எல்லோருக்கும் எட்டிக் காய்ன்னா, அது எனக்கு லட்டு" என்றவர், கோலம் போடுவது போல அங்கேயும் இங்கேயுமாக கோடுகளை இழுத்தார். அடுத்த பத்தாவது நிமிடம் "விடை ஓ.கே.வான்னு பாருங்க" என்று பேப்பரை நம்மிடம் காட்டினார்.

"டபுள் ஓ.கே." என்றோம்.

முகத்தில் எந்த ரியாக்ஷனும் காட்டாமல், "அடுத்த முறை இதைவிட ரொம்பக் கஷ்டமான கணக்கா கொண்டு வாங்க என்றார் கேஷுவலாக.

"அடடா, 'எல்லோரும் இவ்வளவு ப்ரில்லியண்'டா இருக்காங்களே' என்று நொந்து போய், 'லைவ் சாய்ஸ்' நிகழ்ச்சி முடித்து விட்டு சோர்வாக வந்து கொண்டிருந்த சோபியா முன் ஆஜரானோம். 'கரப்பான் பூச்சி'யைப் பார்த்து பயந்தவரைப் போல, ஒரே அலறு அலறினார். "தினமும் மூணு மணி நேரம் ஃபோன் முன்னாடி உட்கார்ந்துகிட்டு இருக்கும் இந்த நிகழ்ச்சிகூட எனக்குக் கஷ்டம் கிடையாதுங்க. ஆனா கணக்கு விவகாரமெல்லாம் நமக்கு ஒத்து வராதுங்களே" என்று இழுத்தவர்... "சரி முயற்சி செய்து பார்க்கிறேன்" என்று வாங்கினார். ஏதேதோ கிறுக்கிப் பார்த்துவிட்டு, "ஸோ ஸாரி,



''உங்க வாழ்க்கைல மறக்க முடியாத இடம் எது?''
''சென்ட்ரல் ஸ்டேஷன்...''
''ஏன்...?
''என்னை வைச்சு படம் எடுத்த நாலு பேர் அங்கதான் மூட்டை தூக்கிட்டு இருக்காங்க!''

— வீ. சாரதி டேச்சு

''எங்க மெகா தொடரை இயக்கற வாய்ப்பு கேக்கறீங்களே... முன் அனுபவம் ஏதும் உண்டா உங்களுக்கு?''
''பத்து வருஷம் 'ஜவ்'வரிசி வியாபாரம் செய்திருக்கேன்!''

—புளியரை கணேசன்



என்னால விடை கண்டுபிடிக்க முடியலை'' என்றார். ''தினமும் இப்படி ஃபோன் முன்னாடி உட்கார்ந்துகிட்டு பேசிக்கிட்டே இருக்கீங்களே, போர் அடிக்கலையா?'' என்றோம்.

''எனக்குன்னு ஒரு ஃபே(ா)ன்ஸ் கூட்டம் இருக்கு. எப்படியும் தினமும் ரெண்டு பேராவது லைன்ல வந்துடுவாங்க. இவங்க கூட பேசினா போதும், எந்த சோர்வாக இருந்தாலும் பறந்து போய்விடும்'' என்றார்.

இனி, நமக்கு அங்கென்ன வேலை?

ஜெயா டி.வியில் 'திரை திங்கள்' நிகழ்ச்சியின் தொகுப்பாளினி கிருத்திகா முன் கணக்கும் கையுமாக நின்றோம். ஒரு தனியார் இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்து கொண்டு, காம்பயரிங் பார்ட் டைம் ஜாப்பாக செய்து வருகிறாராம்.

''கணக்குல நான் பெரிய 'சூரப்புலி'ன்னு சொல்ல முடியாது. அதுக்காக மக்குன்னும் தள்ள முடியாது' என்று எடுத்தவுடனே எதுகை, மோனையில் பேசினார்.

முதலில் கால்குலேட்டரை எடுத்து மடியில் வைத்து கொண்டவர், பிறகு, ''சே, இதுக்கு கால்குலேட்டர் தேவையில்லையே'' என்று பேப்பரும் பேனாவுமாக உட்கார்ந்தார். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஏதேதோ எழுதி எழுதிப் பார்த்துப் பேப்பரை கசக்கி கசக்கிப் போட்டுக் கொண்டிருந்தார். 'முதல் முதலா கேமரா முன்னாடி உட்கார்ந்த டென்ஷனைவிட இது ரொம்ப அதிகமாக இருக்கே'' என்றவர், 'என்னால விடை கண்டுபிடிக்க முடியலை' என்று பின் வாங்கிக் கொண்டார்.

நம்மிடமிருந்த விடையைக் காட்டியவுடன், ''அய்யோ! இவ்வளவுதானா மேட்டர். மை காட்! எவ்வளவு சிம்பிளா இருக்கு, இதை மிஸ் பண்ணிட்டேனே'' என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

நீங்க எப்படி? விடை கண்டுபிடிச்சீங்களா? இல்லையா?

இதுதாங்க விடை:

1) சீதா வசிப்பது அம்பிகா அபார்ட்மெண்ட், வெள்ளைக் கலர், போரூர்.

2) லக்ஷ்மியின் வீடு அமலா அபார்ட்மெண்ட், சிவப்பு நிறம், மயிலாப்பூர்.

3) சுஜாதா வீடு ராணி அப்பார்ட்மெண்ட், அடையார், பச்சைக் கலர்.

— செய்யாறு வி.பாலு

படங்கள் : டிஜிட்டல் சண்முகம்

ஆத்ரேயா

★ ரெடிமேட் ரவிக்கைகள்

★ பெட்டி கோட்ஸ்

★ நைட்டீஸ்

★ Childrens Nighties and Tops



நல்ல
தரம்!



சரியான
விலை

வாருங்கள்.

அணிந்து மகிழுங்கள்!

ATHREYA GARMENTS
House of Blouses

No.1, Jambulingam Street, (Valluvar Kottam High Road),
Nungambakkam, Chennai - 600 034.
☎ 8226586 Fax : 091-044-5360076
Website : www.athreyawoman.com E-mail : ols@md3.vsnl.net.in

SINGAPORE	:	MUSTAFFA (OLD) NALLI Pvt. Ltd.,
UAE	:	LULUCENTRE
KARAIKAL	:	EVE'S PARK, BARATHIYAR STREET,

CHARY'S



டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்,
நிர்வாகி, பயிற்சியாளர்.

ஆல்ஃபா மைண்ட் பவர்

'சக்திகளிலேயே பெரிய சக்தி ஆழ்மனதின் சக்தி'

உங்களை வியக்க வைக்கும் அளவுக்கு ஒரு பெரிய சக்தி உங்களுக்குள், உங்கள் ஆழ்மனதில் புதைந்திருக்கிறது. இந்த சக்தியை அன்றாட வாழ்க்கைக்கும் பயன்படுத்த முடியும். அதற்கான திறவுகோல்தான் 'ஆல்ஃபா மைண்ட் பவர்!'

சுலபமான ஆல்ஃபா தியானத்தின் மூலம் இந்த சக்தியை தூண்டி விட்டு வாழ்க்கையில் எந்த பிரச்சினைக்கும் விடை காணலாம்.

* மன அழுத்தம் குறைக்கலாம்.
* பண வரவை அதிகரிக்கலாம்.
* உறவுகளை சீர்படுத்தலாம்.
* குடும்பத்தில் அன்பு நிலவ செய்யலாம்.
* நோய் தீர்க்கலாம்.
* பரீட்சையில் அதிக மார்க் வாங்கலாம்.
* மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழலாம்.

இன்னும் பல வழிகளில் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

* ஒரு வருடத்திற்கு முன் ஒரு விபத்தில் என் காலில் அடிபட்டு ஆபரேஷன் செய்யப்பட்டது. அதன் பிறகு கால் சரியாக ஊன்றி நடக்க முடியாமல் இருந்தேன். ஆல்ஃபா மைண்ட் பவர் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட ஒரு வாரத்திலேயே என் உடம்பிலும் மனதிலும் மிகப் பெரிய அளவில் தெம்பு பிறந்துள்ளதை உணர்கிறேன். என் நடையிலும் மிகப் பெரிய முன்னேற்றத்தை இப்பொழுது காண்கிறேன். மாலையில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியதும் மிகச் சோர்வாக இருப்பது மாறி, இப்பொழுது புத்துணர்வுடன் இருப்பதை உணர்கிறேன். நன்றி ஆல்ஃபா.

பயிற்சி வகுப்புகள் மாதந்தோறும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித்தனியாக சென்னையில் நடத்தப்படும். பெங்களூர், கோயம்புத்தூர், பாண்டிச்சேரி, மதுரை மற்றும் திருச்சியிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தபால் மூலம் கற்க :

ஆல்ஃபா மைண்ட் பவர் ஆடியோ காஸட்/சிடி மற்றும் பயிற்சி புத்தகம் ஆங்கிலம் மற்றும் தமிழில் தபால் மூலம் பெற தொலைபேசி, ஈமெயில், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தினத்தந்தி போன்ற பத்திரிகையில் வெளிவந்த ஆல்ஃபா மைண்ட் பவர் கட்டுரைகள் புத்தகமாக தமிழில் மட்டும் கிடைக்கும்.

ஆல்ஃபா மைண்ட் பவர் பிரைவேட் லிமிடெட்

* 11, அருணாசலம் சாலை, சாலிகிராமம்,
சென்னை -93. இந்தியா.
சென்னை +91-44-23761880/23760283
பெங்களூர், கோவை, மதுரை, திருச்சி, பாண்டிச்சேரி, சேலம், திருப்பூர் ஆகிய அனைத்து ஊர்களிலும் இப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.
(எமது நிறுவனத்தில் பயிற்சியாளர்கள் வேறு யாரும் இல்லை)
email: alphamindpower@hotmail.com.
www.alphamindpower.net

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது. இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)** இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க.
தொலைபேசி
0413 - 2346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ரமன் திபெட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சுன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683

இணையதளம் (Website) உங்களுக்காகவே!

இணையதளம் செய்து தர நாங்க ரெடி! முழுமையாக பயனடைய நீங்க ரெடியா!!

இன்றைய தேதியில் இணையதளம் வைத்திருந்து பயன் பெறுவோர் பற்றிய விவரம் :-

ஏறத்தாழ
90 சதவிகித உற்பத்தியாளர்கள்
60 சதவிகித சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள்
50 சதவிகித சேவை நிறுவனங்கள், உதாரணமாக : Travel Agency, Doctors, Consultants, Hotels, Book Publishers, ஜோதிடர்கள், வாஸ்து மேதைகள், etc.

இன்று தகவல் தொழில்நுட்பம் முழு வீச்சாக வளர்வதை கண்கூடாக காண்கிறோம்.
நாளை அனைத்து தொழில்களும் Internet மயமாக்கப்படுவது நிச்சயம். அதற்கு சான்றாக பல அரசு சார்ந்த சேவைகள் Internet மயமாக்கப்பட்டுவிட்டது. வீட்டுக்கு ஒரு Website என்ற நிலையும் உறுதி.

எங்களது தனித்துவம் :

- உங்களுடைய Catelogue மற்றும் Product பற்றிய விவரங்களை சிறந்த முறையில் Hosting செய்து தருகிறோம்.
- நம்பகமான சேவை. நிறைந்த தரம்.

நீங்கள் செய்ய வேண்டியது. உங்கள் Product Catelogue, Company Details மற்றும் Hosting செய்வதற்கான உரிய தொகையை DD/MO வாக எங்களுக்கு அனுப்பவும். இவை கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் Design செய்து Hosting செய்து தருகிறோம்.

மற்ற விவரங்களுக்கு :

PARADOX TECHNOLOGIES, AG-95, Ist Floor, 7th Main Road, Anna Nagar,
Chennai - 600 040. Ph : 044-52170042, Cell : 98411 22944.
E-mail: adkalki@businessparadox.com, Site : www.businessparadox.com

எங்களால் உருவாக்கம் பெற்ற இணையதளங்கள் சில :

www.sooriyatravels.com
www.frmsindia.com
www.raagaleela.com
www.kodiinet.com
www.bushrahaj.com
www.raazint.com

சிவகாமியின் சபதம்

நாலாம் பாகம்

சிதைந்த கனவு



முதல் அத்தியாயம்

அரண்ய வீடு

ஆயனரின் அரண்ய வீட்டைச் சுற்றி மீண்டும் மரங்கள் செழித்து வளர்ந்து வானோங்கி நின்றன. நெடுந்தூரம் படர்ந்திருந்த கிளைகளில், பசுந்தழைகளும் இளந் தளிர்களும் அடர்ந்திருந்தன. சில விருட்சங்களில் மலர்கள் கொத்துக் கொத்தாய்க் குலுங்கின. இளங்காற்றில் மரக்கிளைகள் அசைந்து ஒன்றோடொன்று மோதியபோது, உதிர்ந்த மலர்கள் பூமியில் ஆங்காங்கு புஷ்பக் கம்பளம் விரித்தது போல் கிடந்தன. அந்த மலர்களின் நறுமணம் நாலாபுறமும் 'கம்' என்று நிறைந்திருந்தது.

கானகத்துப் பறவைகள் அவ்வப்போது கலகலவென்று ஒலி செய்து, அங்கே குடிகொண்டிருந்த நிசப்தத்தைக் கலைத்தன.

ஆயனர் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த தாமரைக் குளத்தில் தண்ணீர் ததும்பி அலைமோதிக் கொண்டிருந்தது. தாமரை இலைகள் தளதளவென்று விளங்கின. அந்த இலைகளின் மீது தண்ணீர்த் துளிகள் முத்துக்களைப்போல் தத்தளித்துக் கொண்டிருந்தன. இளங்காற்றில் தாமரை இலைகள் அசைந்த போது, அந்த ஒளி முத்துக்கள் அங்குமிங்கும் ஓடியது, கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

இந்த இயற்கை அழகையெல்லாம் பார்த்து அனுபவிப்பதற்கு மனிதர்கள் மட்டும் அங்கே இல்லை.

ஆயனரின் அரண்ய வீட்டைச் சுற்றி முன்னொரு காலத்தில் நூற்றுக்கணக்கான சிற்பக்கலைச் சீடர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தற்சமயம் அங்கே சீடன் எவனும் காணப்படவில்லை.

அங்கே இப்போது குடிகொண்டிருந்த சூனியத்தின் வேதனையை இன்னும் அதி

அமரர் கல்கி



முன்னே, நாம் அந்தச் சிற்பக் கிரஹத்தில் பார்த்ததைக் காட்டிலும் இப்போது அதிக மான நடனச் சிலைகளைப் பார்க்கிறோம். சிலை வடிவம் ஒவ்வொன்றும் சிவகாமியை நினைவூட்டுகின்றன.

மண்டபத்தின் சுவர்களிலே அந்த நாளில் நாம் பார்த்த சித்திரங்கள் எல்லாம் இப் போது நிறம் மங்கிப் போயி ருக்கின்றன.

இதிலிருந்து அஜந்தா வர்ண இரகசியத்தை இன்னும் ஆயனர் தெரிந்து கொள்ளவில் லையென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

ஆயனரின் உருவத் தோற் றத்திலும் பெரிய மாறுதலைக் காண்கிறோம். அவருடைய தலை ரோமம் தும்பைப் பூவைப்போல் வெளுத்துப் போயிருக்கிறது. கண்கள் குழி விழுந்திருக்கின்றன. முகத்திலே சுருக்கங்கள் காணப்படுகின்றன. அவரை இப்போது ஆயனக் கிழவர் என்று கூறினால் யாரும் ஆட்சேபிக்க முடியாது.

கப்படுத்தும்படியாக அரண்ய வீட்டுக் குள்ளிருந்து ஒரே ஒரு தனிக் கல்லுளி யின் சத்தம் 'கல் கல்' என்று கேட்டுக் கொண்டிருந்தது.

ஆம்; வீட்டுக்குள்ளே ஆயனச் சிற்பியார் மீண்டும் கையில் கல்லுளி எடுத்து வேலை செய்து கொண்டிருந் தார்.

அருமைப் புதல்வியை ஆயனர் பறிகொடுத்து இப்போது ஒன்பது ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன. இத்தனை காலமும் அவர் உயிர் வாழ முடிந்தது மீண்டும் சிற்பத் தொழிலில் கவனம் செலுத்திய காரணத்தினாலே தான்.


பன்னிரண்டு வருஷங்களுக்கு

ஆயனர் தமது வேலையில் முழுக் கவனத்தையும், செலுத்திக் கொண்டிருந்த படியால், வீட்டின் வாசலில் இரட்டைக் குதிரை பூட்டிய ரதம் வந்து நின்ற சத்தம் அவர் காதில் விழவில்லை.

"தாத்தா!" என்ற மழலைக் குரலைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தார். மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியும் அவருடன் இரு குழந்தைகளும் வாசற் படியைத் தாண்டி வந்து கொண்டிருந் தார்கள்.

மாமல்லரின் உருவமும் ஓரளவு மாறியிருந்தது. அவருடைய முகத்தில்







யௌவனத்தின் தளதளப்புக்குப் பதிலாக முதிர்ச்சி பெற்ற கம்பீர தேஜஸ் குடி கொண்டிருந்தது. படபடப்புக்குப் பதிலாகத் தெளிந்த அறிவும் முரட்டுத் துணிச்சலுக்குப் பதிலாக வயிர நெஞ்சத்தின் உறுதியும் அவருடைய கண்களிலே பிரகாசித்தன.

அவருடன் வந்த குழந்தைகளின் முகத்தோற்றத்திலிருந்து அவர்கள் அண்ணனும் தங்கையுமாக இருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிந்தது. அண்ணனுக்கு வயது எட்டு இருக்கும்; தங்கைக்கு ஆறு இருக்கும்.

மாமல்லருடைய சாயல் இருவர் முகத்திலும் காணப்பட்டது.

"தாத்தா!" என்று கூவிக் கொண்டு இரு குழந்தைகளும் ஆயனரிடம் ஓடினார்கள். ஆயனர் அவர்களை, "என் கண்மணிகளே வாருங்கள்!" என்று சொல்லி வரவேற்றார். அவர்களைத் தம் தோளின் மேல் சாய்த்துக் கொண்டு கொஞ்சிச் சீராட்டினார். அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது. அது குழந்தைகளைக் கண்டதனால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரா, அல்லது நடந்திருக்கக் கூடியதையும் நடக்காமற் போனதையும் நினைத்துக் கொண்டதனால் ஏற்பட்ட தாபக் கண்ணீரா என்று யாரால் சொல்ல முடியும்!

குழந்தைகள் சற்று நேரம் ஆயனருடன் விளையாடிக் கொண்டிருந்த பிறகு, மாமல்ல சக்கரவர்த்தி அவர்களைப் பார்த்து, ''குந்தவி! மகேந்திரா! இரண்டு பேரும் வெளியே ஓடிப்போய்ச் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருங்கள். நான் தாத்தாவுடன் கொஞ்சம் பேசிவிட்டு வருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே குழந்தைகளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் வெளியில் விட்டார். "கண்ணா! குழந்தைகளைப் பார்த்துக் கொள்!" என்று சாரதியைப் பார்த்துச் சொன்னார்.

அதோ குதிரைக் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டு நிற்பவன் கண்ணபிரான்தான். அவன் முகத்தில் இப்போது கறுகறுவென்று மீசை வளர்ந்திருந்தது.

குழந்தைகளை வெளியில் விட்டு விட்டு வீட்டுக்குள்ளே திரும்பி வந்த மாமல்லரைப் பார்த்து, "பிரபு! தாங்கள் எனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றிவிட்டேன். நூற்றெட்டாவது நடனச் சிலை இன்றோடு வேலை முடிகிறது" என்றார்.

சிவகாமியின் பிரிவினால் ஆயனரின் அறிவு நாளுக்கு நாள் சிதறிப்போய் வருவதைக் கண்ட நரசிம்மவர்ம சக்கரவர்த்தி, அவரை நூற்றெட்டு நடனத் தோற்றச் சிலைகளையும் பூர்த்தி செய்யும்படி கட்டளையிட்டிருந்தார். ஆயனர் வேலை செய்யத் தொடங்கிய நாளிலிருந்து அவருடைய அறிவு பாதுகாக்கப்பட்டு வந்தது.

"ஆயனரே! என்னுடைய ஆயத்தங்களும் முடிந்து விட்டன. விஜயதசமியன்று யுத்தத்துக்குப் புறப்படுகிறோம். காலையில் ஆயுத பூஜை நடத்திவிட்டு மாலையில் வாதாபி யாத்திரை தொடங்குகிறோம்!" என்றார் மாமல்லர்.

"ஐயா! நானும் கேள்விப்பட்டேன். திருக்கழுக்குன்றம் மலைச்சாரலில் வந்து சேர்ந்திருக்கும் மாபெருஞ் சைனியத்தைப் பற்றிக் குண்டோதரன் கூறினான். கண்ணுக்கெட்டிய தூரம் யானைப் படையும், குதிரைப்படையும், காலாட் படையும் ஒரே சேனா சமுத்திரமாய் இருக்கிறதாமே? இன்னமும் வீரர்கள் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்களாமே? வாளும் வேலும் ஈட்டியும் மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றனவாமே? குண்டோதரன் வந்து சொன்னதைக் கேட்டதும் எனக்கே திருக்கழுக்குன்றம் போய்ப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது!"



"ஆயனரே! திருக்கழுக்குன்றத்தில் இறங்கியிருக்கும் படைகள் நமது சைனியத்தில் மூன்றில் ஒரு பங்குதான்; வடக்கே பொன் முகலி நதிக்கரையில் ஒரு பெரிய சைனியம் நமது சேனாபதி பரஞ்சோதியின் தலைமையில் காத்திருக்கிறது. தெற்கேயிருந்து பாண்டியனுடைய சைனியம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. வராக நதிக்கு அருகில் வந்துவிட்டதாக இன்று தான் செய்தி கிடைத்தது."

"பிரபு! என்னை மன்னிக்க வேண்டும், தாங்கள் காலங்கடத்திக் கொண்டிருப்பதாக எண்ணி நொந்து கொண்டிருந்தேன். எப்பேர்ப்பட்ட பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறீர்கள் என்று இப்போதுதான் தெரிகிறது..."

"பகீரதப் பிரயத்தனம் என்றா சொன்னீர், ஆயனரே!"

"ஆம் ஐயா!"

"ஒரு சம்பவம் ஞாபகம் இருக்கிறதா? மகேந்திர பல்லவரும், நானும், நீங்களும் கடல் மல்லைத் துறைமுகத்தில் பாறைகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. ஒரு பாறை இரண்டாய்ப் பிளந்தது போல் நடுவில் பள்ளமாயிருந்தது. பாறையில் பெய்த மழைத் தண்ணீர் அந்தப் பள்ளத்தின் வழியே தடதடவென்று கொட்டியது. 'ஆகாச கங்கை விழுகிறது!' என்று நான் சொன்னேன். உடனே, மகேந்திர பல்லவர், 'சிற்பத்துக்கு நல்ல விஷயம்; இங்கே பகீரதன் தவத்தைச் சித்திரிக்கலாம்' என்றார். நீங்களும் அதை ஒப்புக் கொண்டு சிற்பிகளை அழைத்து வேலை தொடங்கும்படி சொன்னீர்கள். அப்போது நான் தந்தையிடம் பகீரதன் கதை சொல்லும்படி கேட்டுக் கொண்டேன்."

"பகீரதன் கதையை அன்று மகேந்திர பல்லவரிடம் கேட்டபோது எனக்கு ஒரே வியப்பாயிருந்தது. பகீரதனுடைய தவத்துக்கு என்னென்ன இடையூறுகள் நேர்ந்தன? அவ்வளவையும் சமாளித்து அவன் எடுத்த காரியத்தைச் சாதித்ததைக் குறித்துப் பெரிதும் ஆச்சரியப்பட்டேன். இளம்பிள்ளைப் பிராயத்தில் அப்பாவிடம் கேட்ட அந்தக் கதை இப்போது எனக்கு வெகு உபயோகமாயிருந்தது. ஆயனரே! வாதாபியிலிருந்து நான் உங்கள் குமாரியை அழைத்து வராமல் திரும்பி வந்தபோது, மூன்று வருஷத்துக்குள்ளே படை திரட்டிக் கொண்டு வாதாபிக்குப் போகலாம் என்று எண்ணியிருந்தேன். வரும் வழியெல்லாம் அவ்வாறுதான் நானும் பரஞ்சோதியும் திட்டம் போட்டுக் கொண்டு வந்தோம். மூன்று வருஷத்தில் நடத்த எண்ணிய காரியத்துக்கு ஒன்பது வருஷம் ஆகிவிட்டது."

"பல்லவேந்திரா! ஒன்பது வருஷம் ஆயிற்று என்றா சொன்னீர்கள்? ஒன்பது யுகம் ஆனதாக எனக்குத் தோன்றுகிறது!"

"எனக்கும் அப்படித்தான், ஆயனரே! சிவகாமியைப் பார்த்துப் பல யுகம் ஆகிவிட்ட மாதிரிதான் தோன்றுகிறது. ஆனாலும், நான் என்ன செய்ய முடியும்? இரண்டு வருஷம் நாட்டில் மழையில்லாமல் பஞ்சமாய்ப் போயிற்று. ஒரு வருஷம் பெரு மழையினால் சேதங்கள் நேர்ந்தன. இலங்கை இளவரசன் மானவன்மனுக்கு ஒத்தாசை செய்ய வேண்டி வந்தது. பாண்டியனுக்கும் சேரனுக்கும் மூண்ட சண்டையில் தலையிட்டுச் சமாதானம் செய்விக்க வேண்டியிருந்தது. இத்தகைய காரணங்களினால் மனச் சோர்வு ஏற்பட்ட போதெல்லாம் அடிக்கடி துறைமுகத்துக்குச் சென்று பகீரதனுடைய தவச் சிற்பத்தைப் பார்த்தேன். மீண்டும் ஊக்கமும் தைரியமும் அடைந்தேன். கடைசியில் பகீரதன் முயற்சி பலிதமடைந்தது போல், என்னுடைய பிரயத்தனமும் பூர்த்தியடைந்து விட்டது. அடுத்த வாரத்தில் போருக்குப் புறப்பட்டுப் போகிறேன்."

"பிரபு! இது என்ன? 'புறப்பட்டுப் போகிறேன்' என்று சொல்கிறீர்களே?"



அருள்வாக்கு

யோகிக்கு அடையாளம் என்ன! பரமாத்மாவிடம் சேர்ந்து விட்ட அவனது மனசு வேறு எதையுமே சேர்த்துக் கொள்ள நினைக்காது.

மனசு அதற்கப்புறம் ஓடவே முடியக் கூடாது. அப்படி ஆகி விட்டால்தான் அதற்கப்புறம் இப்போது இந்த மனசினால் நமக்கு உண்டாகியிருக்கிற அத்தனை தொந்தரவுகளும் தொலைந்து போகும். அந்த நிலையைப் பெறுவதற்கு எதைச் சேர வேண்டும்? மனசு எதிலிருந்து உற்பத்தியாயிற்றோ அதைத்தான் சேர வேண்டும். மனசு அதன் மூலத்தில் சேர்ந்து விட்டால், அங்கே அப்படியே கரைந்து போய் விடும். அப்புறம் ஓடாது. அதுவே சகல தொந்தரவுகளிலிருந்தும் விடுபட்ட நிலை. நதி இருக்கிறது. அதன் மூலம் - உண்டான இடம் - என்ன? சமுத்திரம். சமுத்திர ஜலம்தான் ஆவியாகப் போய் வேறொரு இடத்திலிருந்து நதியாக ரூபம் எடுக்கிறது. அந்த ஆறு ஓடாத ஓட்டமில்லை. இப்படி ஓடி ஓடிக் கடைசியில் தன் மூலமான சமுத்திரத்தில் வந்து விழுகிறது. அப்புறம் அதற்குத்தனி ரூபம் உண்டா? ஓட்டம் உண்டா? ஒன்றும் இல்லை. இப்படி நதிகளுக்கெல்லாம் மூலமாக இருந்து முடிவில் அவற்றைத் தன்னிலேயே சேர்த்துக் கொள்கிற சமுத்திரம் மாதிரி, நம் மனசுகளை எல்லாம் முடிவான சேர்க்கையில், யோகத்தில் தன்னோடு கரைத்துக் கொள்கிற ஒன்று இருக்கிறதா என்றால், இருக்கிறது. சமாதி நிலையில் ஞானிகள், யோகிகள் தங்கள் தனி மனசைக் கரைத்து விட்டு வெளிப் பிரக்ஞையே இல்லாமல் இருக்கும் போது இந்த வஸ்துவிடம்தான் சேர்ந்திருக்கிறார்கள். சமாதி நிலைக்கு அப்புறம் ஒரு யோகி அந்த வஸ்துவை விட்டு விட்ட மாதிரி நமக்குத் தோன்றினால் கூட உண்மையில் இது நீங்காத சேர்க்கைதான். உள்ளூர அவருக்கு அந்தச் சேர்க்கையின் அனுபவமேதான் இருந்து கொண்டிருக்கும். அதனால்தான் அவர் வெளிப் பிரக்ஞையோடு இருக்கிற மாதிரி நமக்குத் தோன்றுகிறபோது கூட, அதை அடைய வேண்டும். இதை அடைய வேண்டும், என்கிற ஆசை எதுவுமே அவருக்கு இல்லை. ஏதாவது ஒன்று தனக்கு வேண்டுமென்று கொஞ்சம் கொஞ்சம் ஒருத்தனுக்குத் தோன்றி விட்டால் கூட அவன் யோகியில்லை. அவன் ஸ்வாமியைச் சேரவில்லை என்றுதான் அர்த்தம்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

என்று கேட்டார் ஆயனர்.

"வேறு என்ன சொல்ல வேண்டும், ஆயனரே?"

"'புறப்படப் போகிறோம்' என்று சொல்ல வேண்டும். பல்லவேந்திரா! இன்னும் எத்தனை காலம் நான் உயிரோடிருப்பேனோ, தெரியாது. சிவகாமியை ஒரு தடவை கண்ணாலே பார்த்து விட்டாவது கண்ணை மூடுகிறேன்!"

மாமல்லர் தம்முடைய கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "ஐயா! உம்முடைய மகளுக்காக நீர் உயிர் வாழ்ந்தே ஆக வேண்டும். சாவைப் பற்றி நினைக்கவே வேண்டாம். நீங்கள், வந்தே தீரவேண்டுமென்றால் அழைத்துப் போகிறேன். விஜயதசமியன்று புறப்பட ஆயத்தமாயிருங்கள்!" என்றார்.

(தொடரும்)

ARTHRITIS - மூட்டுவலி

* கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். * கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். * கழுத்து வலி (Cervical Spondylitis) * நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) * இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். * குதிகால் இணைப்புகளில் வலி. * குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வியாதியஸ் தர்கள் வருகிறார்கள்.



ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea (மூச்சுத் திணறல்) 2. Respiratory difficulties (மேல்மூச்சு வாங்குதல்) 3. Dry cough (வறட்டு இருமல்) 4. Cough with sputum (சளியுடன் கூடிய இருமல்) 5. Running Nose (மூக்கில் நீர் வழிதல்) 6. Nasal Block (மூக்கடைப்பு)

WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் நேச்சர் கியூர் சென்டர்

ADYAR NATURE CURE CENTER™

Regd. Hospital

No. 6, Second Cross Street, Kasturbha Nagar, Adyar, Chennai - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ்டெப்போ எதிரில்)
www.adyamaturecure.com E-mail: adyamaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் கலர் டீ.வி. வசதியுடன் கிடைக்கும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

CHALLENGE THE CALCULATOR!
BALANCE THE BRAIN!!



ALOHA

ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC
AN INTERNATIONAL ABACUS TRAINING PROGRAM FROM ALOHA MALAYSIA

★ வாரத்தில் 2 மணி நேர பயிற்சி
★ கல்வி கற்கும் மாணவர்களுக்கு வரப் பிரசாதம்
★ 3வது மாதத்திலேயே பலனை அறியலாம்!
★ அறிவுத் திறன், அபார ஞாபக சக்தி, விரைவில் கணக்கிடும்முறை, குழந்தைகளின் கவனம், சிந்திக்கும் திறன், படிக்கும் பழக்கம், எழுதுவதில் வேகம் ஆகியவை உறுதியாக மேம்பட

The latest ALOHA training, for developing the whole brain at the right age - 5 to 13 years.

Would you like to become an ALOHA Franchisee? Call

ALOHA MENTAL ARITHMETIC INDIA
(A division of KK Academy (P) Ltd.)

32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028. Phone : 24613262, 24616268 Fax : 52108090
E-mail : kkacademy@vsnl.net Web : www.alohama.com

For Registration At Chennai : Adyar : 9884190450, Anna Nagar (E) : 9841032238, Anna Nagar (W) : 9841126275, Avadi : 9841149527, Adambakkam : 9884198948, Ayanavaram : 9840225568, Chetpet : 28202991, Egmore : 31044055, Gopalapuram : 31044055, Nungambakkam : 31044055, Mylapore : 9841044889, Perambur : 9841258244, R.A.Puram : 24613262 / 6268, T.Nagar : 56114590, Thiruvanmiyur : 56107172, K.K.Nagar : 9841074220, Kilpauk : 26443090, Vadapalani : 9841258244, Valasarvakkam : 9840438689 **Other City :** Coimbatore: 2543173, Rajapalayam : 9842156489, Virudhunagar : 9842121744, Tiruvannamalai , **Other States :** Pondicherry : 2346818, 9842322448, *Bangalore* : Basavangudi : 9845124425, Richmond Town : 9845124425, Rajaji Nagar : 5449668, Jaya Nagar : 5320337, Malleswaram : 5449534, Indira Nagar : 9845309396, Koramangala : 5449668, Kammannahalli : 9845124425, Fraser Town:9845042790, Basaveshwar Nagar:9845042790, 3536547, R.T. Nagar :9845124425, Hyderabad (040) : 7001354

Centers coming shortly at : ❒ Chennai : Ashok Nagar, Shenoy Nagar, Aminjikarai, Mugappair, Purasaiwalkam, Nanganallur, Veppery, Chrompet, West Mambalam, Tambaram ❒ Out station : Kanchepuram, Karaikudi, Trichy, Madurai, Cochin, Trivandrum, Port Blair (Andaman)

எய்ட்ஸ் நோய்கூட இந்த அளவுக்கு உலகம் முழுக்கப் பீதியைக் கிளப்பவில்லை. 'சார்ஸ்' கிளப்பியிருக்கிறது. இந்நோய், தாக்கி மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கையை, ஒவ்வொரு நியூஸ் ஏஜென்சியும் ஒவ்வொரு விதமாகத் தருகிறது. மொத்தமாக எத்தனை பேர் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையும் நாளுக்கு நாள், நாட்டுக்கு நாடு, வேறுபட்டுக் கொண்டே இருக்கிறது.

'சிவியர்' என்றாலே தாங்க முடியாத, கொடுமையான என்று சொல்லுவார் கள். அதில் 'அக்யூட்' வேறு சேர்ந்து கொண்டால் கேட்க வேண்டுமா? மூச்சுக்காற்றான சுவாசமே பாதிக்கப்படும்போது, மரண பயம் அச்சுறுத் தாமல் இருக்குமா? (இனி எந்தக் காதலனும், தன் காதலி சார்ஸ் நோயால் பாதிக்கப்படாதவள்தான் என்று அறிந்தால் தவிர, 'என் சுவாசக்காற்றே'



என் சுவாசக் காற்றே!

என்று சுலபத்தில் சொல்லிவிட மாட்டான்!)

சென்ற நவம்பர் மாதம், சீனாவின் தெற்குப் பகுதியான குவாங்டாங்கிலிருந்து தான் சார்ஸ் முதன் முதலாகக் கிளம்பியது என்று தெரிகிறது. ஆனால் அதைச் சீனா அப்போது அலட்சியப்படுத்திவிட்டது. இப்போது நாடு தழுவிய சுகாதார இயக்கத்தைத் தொடங்கப் போவதாகவும், நானூறு மில்லியன் டாலர்களுக்கு மேல் இதற்காகச் செலவிடப் போவதாகவும், துணைப் பிரதமர் வூ யீ அறிவித்திருக்கிறார். இந்தச் சிகிச்சைக்குப் பணம் செலவழிக்க வசதி இல்லாதவர்களுக்கு உதவ, கூடுதலாக இருநூற்றி நாற்பது மில்லியன் டாலர் ஒதுக்கி இருக்கிறது சீன அரசு.

'ஆமாம்! இப்போது விழித்துக் கொண்டு என்ன புண்ணியம்? சார்ஸ் வைரஸ் பற்றித் தெரிந்த உடனேயே அல்லவா சீனா செயல்பட்டிருக்க வேண்டும்?'' என்று குத்தலாகக் கேட்கிறார் ஹேராலி வில்லியம்ஸ். இவர் பிபிஸி செய்தியாளர்.

பெய்ஜிங்கிலிருந்து வந்த செய்தியில், சுமார் ஆயிரத்து இருநூறு பேர் பாதிக்கப்பட்டதாகவும், ஆனால் நூற்றி இருபது பேர் மரணமடைந்ததாகவும் படிக்கிற போது, இது சுமார் பத்து சதவிகிதம்தான் என்று தெரிகிறது. கிட்டத்தட்ட இதே கணக்கைத்தான் ஹாங்காங், சிங்கப்பூர், கனடா முதலிய நாடுகளின் புள்ளி விவரங்களும் தெரிவிக்கின்றன.



இந்த நோய்க் கிருமி எந்த வகைப்பட்டது என்று கண்டறிய, சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னணி இப்போது தெரிய வந்திருக்கிறது.

முப்பத்திரண்டு வயது சிங்கப்பூர் டாக்டர் ஒருவர், நியூயார்க்கில் ஒரு மாநாட்டில் கலந்துவிட்டு, தன் நாட்டுக்குத் திரும்பும் போது, விசித்திரமான சுவாச அனுபவத்தால் பாதிக்கப்பட்டுத் திணறினார். மார்ச் 15ஆம் தேதி, இரவு இரண்டு மணிக்கு, ஜெனிவாவில் உள்ள தொற்று நோய் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் மைக்கேல் ரயானிடம் தூக்கத்திலிருந்து எழுப்பி, தெரிவித்தார்களாம், உலக சுகாதார அமைப்பைச் சேர்ந்தவர்கள். உடனே, அவர் பயணம் செய்து கொண்டிருந்த விமானம் பிராங்ஃபர்ட்டை அடைந்தபோது, சிங்கப்பூர் டாக்டரைத் தனிமைப்படுத்தி, பரிசோதனைகள் மேற்கொள்ள மைக்கேல் ரயான் உத்தரவிட்டார்.

''சென்டர் ஃபர் டிஸீஸ் கன்ட்ரோல்

சார்ஸ் அறிகுறிகள்!

சார்ஸ் அறிகுறிகள் பற்றி டாக்டர் சீனிவாசையா சோமயாஜி கூறுகிறார்.

பல நோய் அறிகுறிகளின் கூட்டுதான் இந்த சார்ஸ். காய்ச்சலில் ஆரம்பிக்கும். 100 டிகிரிக்கு மேல் தொடங்கும் குளிர் நடுக்கம், மூச்சுத்திணறல், தலைவலி, உடல்வலி, பயங்கர அசதி இவை இருக்கும். வறண்ட இருமலும் சிலருக்கு இருக்கலாம். இந்த அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை உடனடியாக அ குங்கள். தும்பும்போதும் இருமும் போதும் பரவ வாய்ப்பிருப்பதால் முகமூடி அணிந்து கொள்ளவும்.

அண்ட் பிரிவென்ஷன் அமைப்பும், பிரபல தொற்று நோய் ஆராய்ச்சியாளர்களும், தங்களுக்குள் இருந்த போட்டி பொறாமை உணர்வுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தங்களில் யார் யாருக்கு நோபல் பரிசு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது, என்ற புகழ்ப் போதையில் சிக்கிவிடாமல் ஒன்றாகச் செயல்பட்டால்தான், இந்த வைரஸ் கிருமியைக் கண்டுபிடிக்க முடியும் என்ற ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டார்கள்" என்கிறார் மூத்த மருத்துவ விஞ்ஞானி க்ளாஸ்டோஹர். அப்புறம்தான் சார்ஸ் நோயின் ஜாதகம் கண்டுபிடிக்கப்பட்டது என்கிறது நியூஸ் வீக்' கட்டுரை.

ஆசிய நாடுகளைத் தவிர, கனடாவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன் தலை நகரான ஆடாவாவில் தமது அமைச்சரவைக் கூட்டத்தை வைத்துக் கொள்ளாமல், வேண்டுமென்றே டொரான்டோவில் வைத்துக் கொண்டிருக்கிறார் பிரதமர். மிகப் பெரிய நகரமான டொரான்டோவில் யாரும் பயணம் செல்ல வேண்டாம் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை செய்தும் கூட, அதை ஒதுக்கித் தள்ளிவிட்டது கனடா. கனடாவில் இதுவரை பத்தொன்பது பேர் சார்ஸ் நோய்க்குப் பலியாகி இருக்கிறார்கள்.

ஹாங்காங்கில் இதுவரை பாதிக்கப்பட்ட ஆயிரத்து நாநூறு பேரில் நூற்றிப் பதினாறு பேர் மரணம் அடைந்துவிட்டனர்.

இந்த நோய்க் கிருமிக்கு இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும், அதனால் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கையையும் பார்க்கிற போது, இது முற்றிலும் சரியல்ல என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் யமதர்மனிடம் கை குலுக்கவில்லை அல்லவா? ஏதோ ஒரு வகை மருத்துவம் அவர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

சிங்கப்பூரில் உள்ள ஒரு பிரெஞ்சு உணவு விடுதியில் அதன் ஊழியர்கள் அத்தனை பேருக்கும், இரண்டாயிரம் மில்லி கிராம் வைட்டமின் - சி மாத்திரைகள் தினசரி விநியோகிக்கிறார்களாம். இந்த ரெஸ்டாரெண்ட் தனது வாடிக்கையாளர்களை வரவழைக்க, தாங்கள் என்னென்ன முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று ஓர் அறிக்கையே வெளியிட்டிருக்கிறார்கள். ஊழியர்களில் யாருக்காவது 37 டிகிரி செல்ஷியஸுக்கு மேல் உடல் சூடு இருந்தால், அவர்களை உடனே மருத்துவரிடம் ஒப்படைத்து விடுகிறார்களாம்!

1918ல் உலகில் ஃப்ளூ ஜுரம் பரவிய போது, சுமார் 25 மில்லியன் முதல் 40 மில்லியன் மக்கள் மரணம் அடைந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நோயைக் குணப்படுத்த முற்பட்ட மருத்துவர்களும், நர்சுகளும் இதனால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்த சோகக் கதை பலருக்கும் நினைவுக்கு வரலாம்.

நல்ல வேளையாக சார்ஸ் அந்த நிலைமையை மருத்துவ உலகில் தோற்றுவிக்கவில்லை என்பது ஓர் ஆறுதல்.

- சாருகேசி

"வழக்கமா ஒரு கோடிதானே கேட்பீங்க, இந்த படத்தை நடிச்சுத் தர இரண்டு கோடி கேட்கறீங்களே. நியாயமா...?"

"நியாயமில்லாம என்ன? 'டபுள்' ரோல் பண்றேனில்ல!"


- சந்தோஷ்




உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.







கோடி அர்ச்சனை

கலியும் கெட கயிலை துறந்து கருவேலி அமர்ந்திருக்கும் ''கருவிலி நாதர்'' எனப்படும், **ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானுக்கும், உடனுறை ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி அம்பிகைக்கும்** குருவருள், திருவருள் துணை கொண்டு (15.10.2002) விஜயதசமி நன்னாள் முதல் **கோடி அர்ச்சனை** ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தஞ்சாவூர் ஸ்ரீ வித்யா கணபதி உபாசனா யோக பீடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ வித்யா கணேச ஸ்வாமிகள் அவர்கள் முன்னின்று ஆரம்பித்து வைத்தார்கள்.

மற்ற இடங்களில் நடைபெறும் கோடி அர்ச்சனைகளைக் காட்டிலும் இத்திருத்தலத்தில் நடைபெறும் கோடி அர்ச்சனைக்கு சிறப்புகள் அதிகம்.

1. **இறைவன், இறைவி இருவருக்கும் இணைந்து நடைபெறுகிறது.**
2. **இறைவனுக்கு ஸ்ரீருத்ர த்ரிசதி மூலமும், அம்பிகைக்கு – ஸ்ரீ லலிதா த்ரிசதி மூலமும் அர்ச்சனைகள் நடைபெறுகின்றன.**
3. **இவை ஸஹஸ்ர நாம அர்ச்சனைகளைக் காட்டிலும் பன் மடங்கு பயன் தரக் கூடியவை.**
4. **யோக நெறி நிற்கும் தியாக சீலர்களான மஹான்கள் முன்னின்று நடத்துவதும், பங்கு கொள்வதும் கிடைத்தற்கரிய பெருமை.**

மஹிமை வாய்ந்த இவ்விரு த்ரிசதி அர்ச்சனைகளுக்கும் சேர்த்து காணிக்கை கட்டணம் ரூ. 100/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பங்கு பெற விரும்புவோர் அர்ச்சனைக்குரிய எல்லா விவரங்களுடன் கீண்க்கண்ட ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா முகவரிக்கு பணம் அனுப்பக் கோரப்படுகிறார்கள். திருக்கோயில் பற்றியும், மற்ற விழாக்கள், சிறப்பு வழிபாடுகள் பற்றியும் அறிய விரும்புவோர் ''ஸபா'' முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

இங்ஙனம்,

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்,
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்சவரபுரம் - 609 501
திருவாரூர் மாவட்டம்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
32/18 டபீர் புதுத் தெரு,
கும்பகோணம் - 612 001.
தொலைபேசி : 0435 - 2423297



• கீது மோகன்தாஸ்

மலேசியாவில் ஸ்கூல்! கனடாவில் காலேஜ்!

'நள தமயந்தி' ஹீரோயின் கீது மோகன்தாஸ், "தமிழ் நல்லா பேசுவேன்" என மலைத் தேன் குரலில் மலைக்க வைக்கிறார். "எனக்குத் தமிழ் சினிமா புதுசு கிடையாது. பாசில் சார் இயக்கின 'என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு' படத்தில் சத்யராஜ் - சுகாசினி தம்பதிகளின் தத்துக் குழந்தையாக நடிச்சு, ஏற்கெனவே தமிழ் மக்கள் உள்ளத்தில் ஒன்றரை கிரவுண்ட் இடம் வாங்கிப் போட்டிருக்கேன். என்னை குழந்தை நட்சத்திரமா மட்டுமில்லை, கதாநாயகியாகவும் பாசில்தான் அறிமுகப்படுத்தினார். 'லைஃப் ஈஸ் ஃபியூட்டி ஃபுல்' படத்தில் ஆரம்பிச்சு, பதினைஞ்சு மலையாளப் படங்களில் நடிச்சுட்டேன். இந்தப் படங்களில் கதாநாயகிதான்னு இல்லே, ரசிகர்கள் என்னை நிரந்தரமா நினைவில வச்சுகிற மாதிரி நல்ல நல்ல பாத்திரங்களில் நடிச்சிருக்கேன்." என்று புருவம் உயர்த்த வைக்கிற கீதுவுக்கு, 'நளதமயந்தி' யில் எப்படி வாய்ப்புக் கிடைத்ததாம்...?

"மலையாளத்தில் நல்ல சினிமா மீது நம்பிக்கை வைத்து இயங்கிக் கொண்டிருக்கிற சில இயக்குனர்களில் டி.கே. ராஜ்குமார் முக்கியமானவர். அவர் இயக்கிய 'சேஷம்' படத்தில் நான்தான் நாயகி. கதாநாயகன் ஜெயராம் மனநலம் சரியில்லாதவர். அவரைப் பற்றி ஒரு டாகுமெண்டரி படம் தயாரிக்க, கேரளம் வருகிற பெண் இயக்குனராக நான் நடிச்சிருந்தேன்.

"இந்தப் படத்தை பார்த்த கமல் சாரும், மௌலி சாரும் கூப்பிட்டு, நளதமயந்தியில் நீதான் நடிக்கணும்னு அன்புக்கட்டளை பிறப்பித்தார்கள். கமல், டைரக்டர் மௌலி இவங்க எவ்ளோ பெரிய ஜாம்பவான்கள். மறு பேச்சு பேசாமல் வந்துட்டேன்." என்ற கீது, நளதமயந்தியில் தம்பிடிச்சு யாழ்ப்பாணத் தமிழ் பேசுகிறேன் என்கிறார்.

"முக்கால் வாசிப்படம் ஆஸ்திரேலியாவில் நடக்கிறது. இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து போன யாழ்பாணத்துத் தமிழ்ப் பெண்ணாக நடிக்கிறேன். பாலக்காட்டிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு வேலை தேடி பெரும் 'அப்பாவி' ப்ளஸ் அழகு இளைஞன் மாதவனுக்கு என்னோட வீட்டில் அடைக்கலம் கொடுக்கிறேன். உங்களுக்கே தெரியும். யாழ்ப்பாணத் தமிழ் பேசினால் பாட்டுப் பாடின மாதிரி இருக்கும். நான் ராகமாய் யாழ்பாணத் தமிழ் பேச, மாதவன் பாலக்காடு மலையாளத்தை பேசுகிறேன் என்று, அவர் பங்குக்கு மலையாளம் மாதிரி எதையோ பேச, படப்பிடிப்பு முழுக்க சிரித்து சிரித்து வயிறு புண்ணாகிப் போச்சு" என்று பச்சரிசிப் பல் வரிசை காட்டிச் சிரிக்கிறார்.

"அப்பா பிர்லா குருப்பில் சீனியர் மேனேஜர். அண்ணன் பெங்களூரில் டாக்டர், எனக்குப் பாதுகாப்பாக நிழல் மாதிரி பின் தொடரும் குடும்பத் தலைவி அம்மா, இதுதான் என் குடும்பம்" என்று சொல்லும் கீது மோகன்தாசின் இயற்பெயர் காயத்ரி. வீட்டில் செல்லப் பெயர் கீது. அதையே சினிமாவுக்கும் தாரை வார்த்து விட்டாராம்.

"கேரளத்துப் பெண் குட்டியாக இருந்தாலும் பள்ளிப் படிப்பு கோலாலம்பூரில். அப்புறம் கனடாவில் சட்டம் மற்றும் அரசியல் பட்டப்படிப்பை முடிச்சேன். எனக்கு 'பைலட்' ஆகணும்னு ஆசை. அதுக்காக அப்ளிகேஷன் கூடப் போட்டேன்." என்கிற கீதுவின் ஒரே பொழுதுபோக்கு படிப்பதும் ஆங்கிலத்தில் சிறுகதைகள் எழுதுவதும். கடைசியாக எழுதிய சிறுகதையின் தலைப்பு 'நிறங்கள்'. 'ஸ்னேகிதா' மலையாள வார இதழின் ஓணம் பண்டிகைச் சிறப்பிதழில் வெளியாகி இருக்கிறது. இந்தச் சிறுகதையைப் படித்துவிட்டு "உங்கள் நடிப்பைவிட சிறுகதை அருமை" என்று தேடி வந்து பாராட்டிய இளைஞரோடு அவ்வப்போது தொலைபேசியில் 'எழுத்துலகம்' பற்றி அரட்டை அடிப்பாராம். அட! நடிகைக்கு ஓர் இலக்கிய ரசிகர்.

- ஜெய்

படங்கள் :
டிஜிட்டல் சண்முகம்



''அந்த ஆள் வந்து கேட்ட விசிடி, இல்லைன்னா இல்லைன்னு சொல்ல வேண்டியதுதானே... எதுக்காக இப்படி தாறுமாறா திட்டுறே?''

''புரியாமப் பேசாதீங்க சார்... அந்த ஆள் கேட்டது 'சண்டியர்' விசிடி!''

— புளியரை கணேசன்

''உங்க 'உட்கட்சிப் பூசல்' எல்லாம் எப்படி இருக்குது?''

''இப்படி மொட்டையா கேட்டா எப்படி; 'எந்தெந்த கோஷ்டிகளுக் குள்ளே'ன்னு தெளிவாய்ச் சொல்லிக் கேளுங்க!''

— யமுனா ரங்கநாதன்



''நாலு பேருக்கு முன்னாடி என்னைத் திட்டாதேன்னு என் மனைவி கிட்ட சொன்னது தப்பாப் போச்சு!''

''அப்புறம்?''

''தினம் பீச், பார்க்குன்னு அழைச்சுட்டுப் போகச் சொல்றா...!''

— தேனி எஸ். மாரியப்பன்





''சி.பி.ஐ. ரெய்டுல உங்க வீட்டுல ஒரு கோடி ரூபா எடுத்ததா சொல்றாங்க; நீங்க வெறும் பத்து லட்சம்தான்னு சொல்றீங்களே...?''

''ரூபாய்க்கு மதிப்பு வெறும் பத்து பைசாதான்றது உங்களுக்குத் தெரிஞ்சது தானே யுவர் ஆனர்!''

— சீர்காழி வி. ரேவதி

''அரசியல் கட்சிகளுக்கு இடையில் போட்டா போட்டி இருக்க வேண்டியது தான். ஆனா இந்த அளவுக்குப் போகக் கூடாது...''

என்ன சொல்றார், உங்க தலைவர்?''

''எதிர்கட்சில ஒரே மணப் பந்தலில் நூறு கல்யாணம் நடத்தியிருக்காங்க, நாம நூறு விவாகரத்து நடத்திக் காட்டணும்னு அடம் பிடிக்கிறாரு!''

– தஞ்சை தாமு



''பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நம்ம தலைவரை கைது செய்துட்டாங்களாமே... என்ன காரணத்துக்காக?''

''வேலாயுதம்கிற அவரோட பெயரில் ஆயுதம் இருக்குதாம்!''

– ஜி. சுந்தரராஜன்




''என் படத்துல ஒரு சி.ஐ.டி. கதாபாத்திரம் வருது!''

''அவர் எதுக்கு சார்!''

''படத்தோட கதையை தேடித் துருவி கண்டுபிடிக்கத்தான்!''

– யமுனா ரங்கநாதன்



இப்படி நடக்குமோ?

என்ன வேடிக்கையான மதம் இது! இதில் பறவை போதிக்கிறது; விலங்கு வேதாந்தம் பேசுகிறது; பெரிய கடவுளைச் சின்ன மிருகம் சுமந்து போகிறது; குரங்குகள் சண்டை போடுகின்றன; நெருப்பும் காற்றும் நியாயம் பேசுகின்றன.

ஒரு பக்கம் பார்த்தால் சின்னக் குழந்தைகளின் கற்பனைக்கதை போலிருக்கிறது; இன்னொரு பக்கம், லேசாக மாயாஜால வாசனை அடிக்கிறது. என்ன இது?

இந்து மதம் என்றவுடனேயே எல்லா தெய்வங்களும் ஏதாவதொரு வாகனம் ஏறி உலா வருவார்கள் என்பதுதான் பலருக்கும் நினைவு வரும்.

வாகனங்களும், அவற்றிலேறி உலா வரும் கடவுளர்களும் அடிப்படைக் கருத்தொன்றை அழகாக விளக்குகிறார்கள். எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் இறைமை இருக்கிறது என்பது, இந்து மதத்தின் அசைக்க முடியாத ஆணிவேர். அதனால்தான், தன்னை விடத் தாழ்மையானவை என்று மேம்போக்காக மனிதன் நினைக்கக் கூடிய விலங்குகளும் திவ்விய வாகனங்களாகப் படம் பிடிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வாகனம் என்று இந்த வாகனங்களின் பட்டியல் என்னவோ நீளமானதுதான். ஆனால், குறிப்பிட்ட விலங்குகளைக் குறிப்பிட்ட வாகனங்களாக்குவதற்கு, ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உண்டா?

இல்லாமல் இருக்குமா?

அறிவுக்கடவுளான விநாயகருக்கு மூஞ்சூறு வாகனம் (அவ்வளாம் பெரிய உருவத்திற்கு இவ்வுளூண்டு வண்டியா? – அதைப் பின்னால் பார்ப்போம்) - சந்து பொந்துகளுக்குளெல்லாம் துளைத்துக் கொண்டு போகக் கூடிய தன்மை, அறிவுக்கு வேண்டும்தானே!

காக்கும் கடவுளான மகாவிஷ்ணு, வேகமாக வந்துசேர, பறவைதானே சரி! அதுவும், எங்கே பக்தர்கள் தவிக்கிறார்கள் என்று கூர்மையான பார்வையுடன் துல்லியமாகப் பார்க்கத் தெரிந்து, உயரத்திலும் பறக்கக் கூடிய கருடன்தான் பொருத்தமாக அமைய முடியும். கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வரக்கூடிய முருகப் பெருமானுக்கும் பறவையான மயில்தான் வாகனம்.

கலைமகளாம் ஸரஸ்வதியோ அன்னப் பறவை மீதமர்ந்தவள். பலவிடங்களிலும் புகுந்து நுழைந்து, அறிவு பெற்றுவிட்டால் மட்டும் போதாது. அந்த அறிவுக்கு, எது சரி, எது தவறு என்று சீர்தூக்கவும் தெரிய வேண்டும். பாலையும் நீரையும் பிரித்துப் பார்க்கும் அன்னம்போல், அசலையும் நகலையும், நியாயத்தையும் அநியாயத்தையும் பிரித்துப் பகுக்கும் தன்மை பெற்றிருந்தால்தான், அறிவுக்கே பயனுண்டு. பிரம்மாவுக்கும் அன்னம் வாகனம். ஸ்ருஷ்டிகர்த்தாவான அவரே அறிவுக்கும் தலைவர்; கவிஞர்களுக்

உலகம் யாவையும்...

டாக்டர் சுதா சேஷய்யன்

5 இந்த நூற்றாண்டில் இந்து மதம்



கும் தலைவர் (அதனால் பிரம்மாவுக்குக் கவீந்திரர் என்ற பெயர் உண்டு). சரி, தவறு வித்தியாசம் தெரிந்தால் மட்டுமே ஸ்ருஷ்டியும் சிறக்க முடியும்.

பராசக்தி சிம்மவாஹினி. தவறுகள் செய்யும்போது தண்டித்துத் திருத்தும் அவள், வீரத்தின் வேகத்தோடு சிங்கத்தின் மீது ஆரோகணிக்கிறாள். அவளே சில சமயம் புலி வாஹினி. 'தப்பு செய்யாதே, அம்மாவுக்குக் கோபம் வரும்' என்று குழந்தைகளிடத்தில் தாய்மார்கள் கண்களை உருட்டி மிரட்டுவதில்லையா! அப்படித்தான் அம்பாளும் அவ்வப்போது அச்சுறுத்துகிறாள். மென்மையாக, சாத்வீகமாக இருக்கும்போது அவளே பத்மவாஸினியாகத் தாமரை மீது வீற்றிருக்கிறாள்.

செல்வம் தரும் மகாலட்சுமியும் கூட தாமரையில் வீற்றிருப்பவள்தான். எந்த நிலத்திலும் வளமையும் செழுமையும் நன்றாக இருக்குமானால், அங்கு இயற்கை அழகு கொழிக்கும், (செல்வம் என்பதே போதுமான உணவு, தேவைக்கான வளம் ஆகியவை அல்லவா!) இயற்கை எழில் நிறைந்து, நீர்வளமும் மண்வளமும் வசப்படும்போது, ஆங்காங்கே தூய தண்ணீர்த் தடாகங்கள்; தடாகங்களில் தாமரைகள்; தாமரைகளில் செய்யாள் (லட்சுமி).

லட்சுமிக்கும் ஒரு வாகனம் உண்டு. என்ன தெரியுமா? ஆந்தை. அழகான லட்சுமிக்கு அருவருப்பான ஆந்தையா? பணம் பார்வைக்கு அழகாகத் தெரியலாம்; அதற்கான உழைப்பும் உளைவும் நம்மில் பலருக்கு அழகாகத் தெரிவதில்லையே! சோதனைகளை வசப்படுத்தினால் மட்டுமே, சாதனை எழில்கள் சாத்தியப்படும்.

''நம்ம டாக்டர் ரொம்ப தமிழ்ப் பற்று மிக்கவர்னு எப்படிச் சொல்றே?''

''பில் போடும்போது ஆபரேஷன் சார்ஜ்னு போடுறதுக்குப் பதிலா 'வெட்டித் தைக்கிறதுக்குக் கூலி'ன்னு போட்டிருக்காரே!''

- டி. செல்வன்



ஆந்தைக்கு வட மொழியில் 'உலுகம்' என்று பெயர் (இச்சொல்லின் வேரான உலு என்பதும், ஆங்கில ஔல்லின் வேரான உலே என்பதும் ஒன்றாகத் தோன்றியவை). தேவேந்திரனுக்கும் 'உலுகன்' என்றே திருநாமம். இந்திரச் செல்வம் பெற, இரவிலும் இருட்டிலும்கூட விழித்திருத்தல் வேண்டும் என்பதைக் காட்ட, இதனினும் அடையாளம் வேறு உள்ளதோ?

சிவன் மெய்ஞ்ஞானத்தின் அதிபதி. அவருக்கோ காளைமேல் பவனி. காளை போல் உழைப்பும் பொறுமையும் கொண்டால் மட்டுமே மெய்ஞ்ஞானம் கிட்டும்.

எட்டிப் பிடிக்க யாரும் இல்லையென்றால், எகிறிக் குதிக்கலாமென்று நினைப்பது மனித இயல்பு. பக்தியோடு பயத்தையும் புகுத்தும் அவசியம் ஏற்பட்டபோது, வாகனங்களும் சற்றே முகம் சுளிக்க வைக்கின்றன. சனீஸ்வரன் காகத்தின் மீது (சில சமயங்களில் வல்லூறு அல்லது எருமையின் மீதும்) வந்தால், யமதர்மனோ எருமை மாட்டின் மீது வருகிறார். பகிர்ந்து உண்ணும் காகத்திடம் லேசான திருட்டு சுபாவமும் உண்டு. எல்லோரோடும் இயைந்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வாழ்வதை மறந்து, சுயநலமும் அநியாயமும் சூழ்ந்தால், அப்போதே சனி பிடிக்கத் தொடங்கிவிடும். நியாய தர்மத்துக்குப் பெயர்போன காலதேவனோ, அவரின் வாகனத்தைப் போன்றே நிதானமாக வருவார்.

இவ்வளவுதானா?......இன்னும் உண்டு.

பெருமாளுக்குப் பல்லாண்டு பாடுகிறார் பெரியாழ்வார்: - "பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுதுமே!" கருடவாகனனாம் மகாவிஷ்ணு, கருடக் கொடியானும்கூட! பையுடை நாகம் - படமெடுக்கும் நாகப்பாம்பு; நாகப்பகை - கருடன்; கொடியான் - கருடக் கொடியோன். பாம்புக்குப் பகையாக இருக்கும் கருடனைத் தன் கொடியாகக் கொண்டவனுக்குப் பல்லாண்டு. இப்படிச் சுற்றி வளைப்பானேன்? கருடக் கொடியான் மட்டுமா, அவன் பாம்புப் படுக்கையானும்தானே! ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டில், ஒன்று பாயல், ஒன்று பதாகை - நல்ல வேடிக்கை!

உலகம், உலகிலுள்ள அசைவுகள், கோள்கள், அண்டபகிரண்டம், நட்சத்திரக் கூட்டம், ஒளி, ஒலி, இயக்கம், விசை, ஆற்றல் _ இப்படி எதை எடுத்தாலும் எதிரும் புதிருமான இரு தன்மைகளும் நிறைந்தவை, என்

பதை அறிவியல் நமக்கு அறிவிக்கிறது. பாஸிடிவ்வும், நெகடிவ்வும் இல்லையென்றால் ஏது மின்சாரம்?

அணுவைப் பிளந்தால், ப்ரோடான், ந்யூட்ரான், எலக்ட்ரான். குறிப்பிட்ட அணுவில் எத்தனை ப்ரோடான்களோ அத்தனை எலெக்ட்ரான்கள். ப்ரோடான் நேர் என்றால் எலெக்ட்ரான் எதிர். ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்றாரே நியூட்டன்; அப்படியென்றால் எதிரும் புதிரும்தானே பிரபஞ்ச சித்தாந்தம். அதுதான், பரமனின் காளையும் பார்வதியின் சிங்கமும் பக்கத்துப் பக்கத்தில் பரம சாதுக்களாய் நிற்கின்றன; பாம்பில் படுத்தவர் கருடனைப் பிடிக்கிறார்; மயில் மீதாடும் முருகன், நாகம் மீதும் ஆடுகிறார்.

சில தெய்வங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களும் உண்டு. மயில் தவிர, முருகனுக்கு யானையும் ஆடும் வாகனங்கள். சூரசம்ஹார வேளையில் இந்திரனே யானை வாகனமாய் வந்தான். சுயபுத்தியைப் பயன்கொண்டு சிறிதும் யோசிக்காமல், ஆணவத்தோடும் ஆர்ப்பாட்டத்தோடும், தறிகெட்டோடும் ஆட்டினை ஆறுமுகன் அடக்கினார் என்பது கதை. மனித நேய விதை விழவேண்டியதும் இங்கு இதில்தானே!

முருகனுக்கு ஆடு; அப்பன் சிவனும் மாமன் கண்ணனும் மாடு மேய்த்தால், இவர் ஆடு மேய்க்கிறார். உயிர்களெல்லாம் பசுக்கள் - இந்தப் பசுக்களின் பாசத்தை வேரறுத்து, பிறவியென்னும் கானகத்திலிருந்து மீட்கும் பதிதான் இறைவன் - சிவன் பசுபதியானார்; விஷ்ணு கோபாலனானார்.

வாகனங்கள் என்பது மட்டுமில்லை. விலங்கு உருவங்களே தெய்வத் திருமேனிகளும் ஆயின. பைரவரும், கஜானனரும், நாகராஜனும், வானர அனுமனும்... சீன அறிஞர் கன்ஃபூஷியஸ் சொன்னார் - 'கழுதையின் கனவில் கடவுள் வந்தால், நாலு கால் ஒரு வாலோடு வருவார்'. பார்ஸிக்களின் தெய்வமான ஆஹுரா மாஸ்தா எப்போதும் தயாராக இறக்கைகளோடு காட்சியளிக்கிறார்.

மேய்ச்சலுக்கு மாடுகளை ஓட்டிக் கொண்டு போன ஜாபால சத்யகாமன், அவற்றை மீண்டும் தன் குருவின் இல்லம் நோக்கி அழைத்து வருகிறான். வழியில் ஒரு மாடு அவனிடம் கூறியது - "கிழக்கு, பரம்பொருளின் ஒரு பகுதி; அது போலவே மேற்கும் தெற்கும் வடக்குமாகும்." அக்னி மூட்டி தன் அன்றாட வழிபாட்டைச்



"ஏன் சார், இப்படிக் கண் கலங்கறீங்க? கொடுத்த 'சம்திங்' பத்தலையா?"

"இல்லீங்க. இதான் நான் வாங்கற முதல் 'சம்திங்'. அதனால வந்த ஆனந்தக் கண்ணீர்தான் இது!"

- யமுனா ரங்கநாதன்

செய்தவனிடம் அதே அக்னி சொன்னது - "பூமி பரம்பொருளின் பகுதி. அதுபோல், விண்ணும் நட்சத்திரங்களும்கூட. காற்றும் கடலும் அப்படித்தான்." வழியில் சந்தித்த அன்னம் பேசத் தொடங்கியது. – "சூரியனும் சந்திரனும் மின்னலும் இறைவனே!". சிறிது தூரத்தில் சின்னதொரு பறவை; பறந்து பறந்து உரைத்தது - "பார்ப்பதும், கேட்பதும் பரம் பொருளே; ஏன்? பார்வையும் கேட்புத் திறனும்கூட பகவானே." இதற்குள் குருவின் ஆஸ்ரமத்தை அடைந்தான் சத்யகாமன். 'உன் முகத்தில் இப்படியொரு ஒளிக்கென்ன காரணம்?' எனக் கேட்டார் குரு. 'மனிதர் அல்லாத சில மொழிந்த மகத்துவம்' என்றவன், அவரிடமும் ஆசையாய்ப் பாடம் கேட்டான். அவரும் உரைத்தார்.

இந்தக் கதையைக் கூறும் சாந்தோக்ய உபநிஷதம் மேலும் கூறியது - "தெய்வங்கள் அவனுக்குக் கற்றுக் கொடுத்ததை அவர் மீண்டும் சொல்லிக் கொடுத்தார்."

தெய்வங்கள்? ஆம். அண்ட சராசரம் அத்தனையும் தெய்வம் என்பதுதான் இந்து மதம். அதுவேதான் மனிதமும்!

என்ன இலாபம்?

'அழிந்து வரும் உயிரினங்கள்' என்னும் அறிவிப்புப் பலகைகளும், சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பரிசு வாசகங்களும், பள்ளத்தாக்குகளைக் காப்பாற்றும் உண்ணா நோன்புகளும் இல்லாமலே இயற்கையோடும், இயைந்துவிட்ட பரம்பொருளோடும் வாழும் வாழ்க்கை இலாபந்தானே!

(தொடரும்)

"ஹாக்கி வீரர்களை ஊக்கப்படுத்துவதில்லை அரசு"

"ஹாக்கியும் கிரிக்கெட் அளவுக்கு பாப்புலர் ஆகணும்னா, ஆடற எல்லா மாட்சுலேயும் ஜெயிக்கணும். அப்பத்தான் மக்கள் விளையாட்டை பாப்பாங்க. மக்களே ஆர்வம் காட்டலேன்னா ஸ்பான்ஸர்கள் எப்படி ஆர்வம் காட்டுவாங்க?" என்கிறார் தமிழக ஹாக்கி அணியின் தலைவரும், இந்திய அணியில் விளையாடி தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தவருமான திருமால்வளவன்.

"அப்படின்னா ஜெயிக்க வேண்டியது தானே?"

"எப்படிங்க ஜெயிக்கிறது? இங்கே மைதானத்துல நல்லா விளையாடறவங்க, மாநில, தேசிய அளவிலான தேர்வு போர்டுல விளையாடும்போது, அவங்களோட கேம் மாறிப் போயிடுது. இங்கே சாதாரணமான மண் தரையில் விளையாடி அசத்தறவங்க, சர்வதேசத் தரத்தில நடக்குற தேர்வு போட்டிகள்ல அஸ்ட்ரோ டர்ஃப் அப்படிங்கற செயற்கை மைதானத்தில் விளையாடச் சொல்றாங்க. தேர்வு போட்டியில்தான் டர்ஃப்பை பார்க்கிறவங்க, நிச்சயமாக நல்லா விளையாட மாட்டாங்க. ஏன்னா, விளையாடற வேகத்துலேயே நிறைய வித்தியாசம் இருக்குது. செயற்கைத் தரையில் ஆடி பயிற்சி செய்தாலும், அதுக்கப்புறம் தேர்வுக்குழு கண்டுக்கறது இல்லை. அத்தோட அவங்க ஹாக்கி கேரியர் முடிஞ்சு போயிடுது. இதனால, நல்லா விளையாடறவங்க எத்தனையோ பேர் வெளியிலே வராமலேயே போயிடறாங்க.



"மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் மட்டும் ஏழு டர்ஃபுகள் இருக்கு. ஆனா, தமிழகத்திலேயே டர்ஃப் மைதானம் சென்னையிலுள்ள ராதாகிருஷ்ணன் மைதானத்துலே மட்டும்தான் இருக்கு. இந்தியாவில் பத்து அல்லது பதினோரு இடங்களில் தான் இருக்கு. ஹாக்கி விளையாட வரும் எல்லா புதியவர்களும், மண் தரையிலேதான் பயிற்சி செய்ய வேண்டியிருக்கு. இப்படி இருக்கும்போது, சர்வதேச அளவுல போட்டி போடக் கூடிய வீரர்கள் எப்படிக் கிடைப்பாங்க?" என்று கொதிக்கிறார் திருமால்வளவன்.

"நல்ல ஹாக்கி வீரர்கள் தமிழகத்திலே உருவாகணும்னா தமிழக அரசு அதற்கான முயற்சிகளை எடுக்கணும்.

• திருமால்வளவன்



• திருமால்வளவன் மனைவி, குழந்தையுடன்

மாவட்டம் தோறும் ஒரு டர்ஃபை ஏற்படுத்தி, அந்த மாவட்டத்திலிருந்து வரும் விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெற வழி வகை செய்யணும். செய்தால், நன்றாக விளையாட முடியும். அதே போல், தேசிய, சர்வதேச அளவிலான வெற்றிகளைப் பெற்றுத்தரும் வீரர்களை அரசு ஊக்குவிக்கணும். தமிழக அரசு, ஹாக்கி போன்ற முக்கிய விளையாட்டுக்களை முன்னேற்ற எதையும் செய்து கொடுக்கலை. 1994ம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றதற்காக தமிழகத்தைச் சேர்ந்த வீரர் முகமது ரியாஸுக்கு ஒரு வீட்டு மனையை முந்தைய அரசு கொடுத்தது. 1998ம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று, ரொம்ப வருஷத்துக்குப் பிறகு தங்கம் வென்றதற்காக, அதே போல ஒரு வீட்டு மனை அளிக்க ஒப்புதல் அளித்தது அரசு. இது வரை கொடுக்கப்படலை. கேரளாவின் தடகள வீராங்கனைக்குப் பணமுடிப்பு வழங்கும் தமிழக அரசு, ஏன் தமிழக வீரர்களைக் கவனிக்கிறதில்லை?" என்று கேட்கும் திருமால்வளவன் இதுவரை 175 சர்வதேச ஹாக்கிப் போட்டிகளில் விளையாடியிருக்கிறார்.

- அஸிம் பெய்க்

அப்பா சென்ட்ரல் ஜெயிலில்! அம்மா ஷிமோகா ஜெயிலில்!

"அம்மாவை எங்கப்பா, கொன்னுட்டாரு. அதனால ஜெயில்லதான் அப்பா இருப்பாராம். வீட்டுக்கு வரமாட்டாருன்னு எங்க பாட்டி சொல்லுச்சு."

மனம் கனத்துப் போகும் செய்தியை படு கேஷுவலாகச் சொல்லும் சசிகுமார் என்ற பிஞ்சுக்கு வயது ஆறு!

நெஞ்சுக்குள் நெருப்பையும், கண்களில் கவலையையும் வளர்த்துக் கொண்டிருக்கும் இந்தப் பிஞ்சைப் போல, நாற்பத்தைந்து தளிர்கள் ஸோகேர் இன்ட் ஹோமில் (Socare Ind Home) இருக்கிறார்கள்.



* ஆயுள் தண்டனைக் கைதிகளின் குழந்தைகளுடன் மணி



* மணியும், சரோஜியும்

"ஆயுள் தண்டனைக் கைதிகளோட குடும்பத்தை நினைச்சா கண்ணீர்தான் கொட்டுது. அவங்க குழந்தைகளுக்கு உணவு, உடை, கல்வி... இதுக்கெல்லாம் யார்கிட்ட கையேந்தி நிற்பா ஒரு தாய்? சில வருடங்களாவே என் நெஞ்சை இது குத்திக் கொண்டிருந்த விஷயம். தவிர என் ஆபீசுக்குப் போகும் போது சென்ட்ரல் ஜெயிலைக் கடந்துதான் போகணும். தினமும் அங்க கவலை அப்பியிருக்கும் முகங்களைப் பார்ப்பேன். ஜெயிலுக்கு உள்ளேயிருக்கும் அப்பாவைப் பார்க்க, கூட்டமாக நிற்கும் குழந்தைகளோட முகத்தைப் பார்த்து வேதனைப்பட்டிருக்கிறேன். இவங்களுக்கு ஏதாவது செய்யணுங்கற வெறி எனக்குள். அதனால் ரிடையர் ஆனவுடனேயே இந்த அமைப்பை ஆரம்பித்துவிட்டேன்" என்கிறார் வி. மணி.

இந்தியாவிலேயே ஆயுள் தண்டனைக் கைதிகளின் குழந்தைகளுக்கென இயங்கும் அமைப்பு, பெங்களூர் ராஜாஜி நகரில் இருக்கும் இந்த அமைப்பு தான்.

இங்கு இவர்களுக்குப் பாதுகாப்பான இடம், உணவு மற்றும் கல்வி எல்லாமே கிடைக்கிறது. இங்கிருக்கும் ஒவ்வொரு குழந்தையின் பின்னணியிலும் ஒரு மெகா சீரியல் அளவிற்குக் கதை.. கண்ணீர்க் கதை!

"தந்தையோ, தாயோ ஆயுட் கைதி. சிலருக்குப் பெற்றோர்

> "இங்கிருக்கும் ஒவ்வொரு குழந்தையின் பின்னணியிலும் ஒரு மெகா சீரியல் அளவிற்குக் கதை.. கண்ணீர்க் கதை!"

இருவருமே சிறையில். இக்குழந்தைகளுக்கு எந்தவித தயக்கமோ, மானப் பிரச்னையோ ஏற்படுவதில்லையாம்! "எங்கப்பா சென்ட்ரல் ஜெயில், எங்கம்மா ஷிமோகா ஜெயில்' என்று ஆனந்தமாக மனம் விட்டுப் பேசிக் கொள்வார்கள். தண்டனை, குற்றம், கொலை, இது போன்ற வார்த்தைகளையும் அவஸ்தைகளையும் அவர்கள் புரிந்து கொள்ளும் வயதில்லையே?" என்கிறார் மணி.

ரிஸர்வ் வங்கியில் பொறுப்பான பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இந்த மணிக்கு 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பதில் ரொம்ப நம்பிக்கை. "எம்மதமும் சம்மதம் தான். எல்லா சாதியும் மனித ஜாதிதான். ஜாதி, மத பாகுபாடு, வேறுபாடு, என்னைச் சித்திரவதை செய்யும். மனிதர்களின் நிற இன வேறுபாடுகளை வெறுக்கிறேன். எல்லோரும் சமம் என்பதே என் ஜபம்" என்கிறார் மணி.

ஸோகேர் ஹோமில் ஆண் குழந்தைகளுக்கு மட்டுமே அனுமதி. இவர்களை நல்ல ஸ்டாண்டர்டு உள்ள ஆங்கில மீடியம் பள்ளிக் கூடத்தில் சேர்த்திருக்கிறார் மணி.

மணியின் மனைவி சரோஜியும் இந்தச் சிறுவர்களுக்கெனப் பாடுபடுகிறார். ரிடையர் ஆனவுடன் கிடைத்த பணத்தைப் போட்டு, இந்த ஹோமை சுமார் நான்கு வருடங்களுக்கு முன் ஆரம்பித்திருக்கிறார் மணி.

செலவிற்கு என்ன செய்கிறார்?

''ஒவ்வொரு மாதமும் முதல் தேதி நெருங்க நெருங்க டென்ஷன் உச்சத்திற்குப் போய் விடும். சமையல்காரர், வார்டன்கள், டியூஷன் டீச்சர்கள், ஸ்டாஃப் ஆகியோருக்கு சம்பளம் கொடுத்தாகணும். தவிர, பிள்ளைகளுக்குச் சாப்பாடு, ஸ்கூல் ஃபீஸ் என்று செலவு. பெரும்பாலும் என் கையிலிருந்துதான் பணம் போடுகிறேன். ஒரு சில நல்லிதயங்களும் உதவறாங்க. இது விடுதியல்ல, வீடு. தகப்பன் ஸ்தானத்தில் இருந்து கண்டிப்பும் பாசமும் சமமாகக் கொடுக்கிறேன்!"

மணி வெளிப்படையாகச் சொல்கிறார்.

ஸோகேர் இன்ட் அமைப்புக் குழுவில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர் கர்நாடக, முன்னாள் டி.ஐ.ஜி., ஐ.ஜி (சிறை) எல். ரேவண சித்தையா. மணி தம்பதியரின் சேவையை மனம் விட்டுப் பாராட்டியிருக்கிறார்.

- லதா சேகர்

டீ-யில இப்படியா?

வாஷிங்டனின் தேசிய அறிவியல் ஆராய்ச்சி அகாடமியின் ஆராய்ச்சியாளர்கள் 'எல்-தியானைன்' என்ற ரசாயனப் பொருளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.



இதை மனித உடலில் செலுத்தி ஆராய்ந்ததில் 'இது இரத்த அணுக்களைப் பலப்படுத்தி 'காமா-டி-செல்' என்ற நோய் எதிர்ப்பு ரத்த செல்களின் முதல் அணியை உருவாக்குகிறதாம். பாக்டீரியா, வைரஸ் கிருமிகள், தொற்று நோய்க் கிருமிகள், எல்லாவற்றையும் இது அடக்கிவிடுகிறதாம்.

சரி, அது என்ன 'எல்-தியானைன்'?


ஒன்றுமில்லை. நம் ஊர் டீயில் இருக்கிறது எல்-தியானைன். ஆமாம். ஒரு நாளைக்கு ஐந்து கப் டீ சாப்பிடுபவர்களின் உடலில் இந்த எல்-தியானைன் முனைப்பாகச் செயல்படுகிறதாம். பதினோரு பேருக்குத் தினம் ஐந்து கப் டீயும், பத்து பேருக்கு காப்பியும் கொடுத்து நான்கு வாரங்கள் கழித்து பரிசோதித்ததில் 'சாயா'தான் வென்றிருக்கிறது!

இதை இன்னும் கொஞ்சம் ஆராய்ந்தால் இதய நோய், கான்ஸர், ஆஸ்டியோஸ்போரோசிஸ் என்னும் எலும்பு நோய், அலர்ஜி எல்லாவற்றையும் குணமாக்க பயன்படுத்தலாமாம்.

அட, வாங்க, மொதல்ல ஒரு டீ சாப்டுட்டு வரலாம்!

- தேவநாதன்

* அன்வர்



* படத்தில்



ராஜஸ்தானில் லீலாவதி!

மதுரை லீலாவதி கொலை, தமிழகத்தை மட்டுமல்ல, வட இந்திய இயக்குநர் அன்வர் ஜமாலையும் பாதித்துள்ளது. அந்தப் பாதிப்பில் 'ஸ்வராஜ்' என்ற திரைப்படத்தை இயக்கியிருக்கிறார் அவர். கதையை இராஜஸ்தானுக்கு நகர்த்தி, இந்தியில் எடுத்திருக்கிறார்.

இராஜஸ்தானத்து பாலைவனக் கானல் நீரில் மூழ்கியுள்ள ஒரு கிராமம். அக்கிராமத்திற்குத் தண்ணீர் கொண்டுவர பஞ்சாயத்து உறுப்பினர் லீலாவதி மூன்று பேருடன் போராடுகிறார். பஞ்சாயத்துக் கூட்டத்தில் தாழ்த்தப் பட்டவர்கள் தம்மோடு சமமாக உட்காருவதையும், தண்ணீர் குடிப்பதையும் அருவருப்பாகக் கருதுபவர் தான் பஞ்சாயத்துத் தலைவர். அவரது கும்பல், லாரி மூலம் தண்ணீர் கொண்டு வந்து வியாபாரம் செய்கிறது.

கிராமத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள கிணற்றை மேலும் தோண்டி, பைப் மூலம் தண்ணீர் கொண்டுவர தீர்மானம் நிறைவேற்றக் கோருகிறார் லீலாவதி. முடியவில்லை. தாமே கிணற்றைத் தோண்ட முடிவு செய்கிறார். லீலாவதிக்கு உதவ ஊனமுற்ற சிறுமி உட்பட மேலும் மூன்று பெண்கள் முன்வர, கிணற்றை ஆழப்படுத்து கிறார்கள். எட்டு மாதங்கள் உழைக்கிறார்கள்.

அவர்களது ரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி, உழைத்த உழைப்புக்குப் பலன் கிடைக்கின்றது. நீர் கசிகிறது. கசிந்த நீரையும், கலங்கிய சேற்றையும் தங்களின் முகங்களில் பூசிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். ஆனால், அங்கிருந்து நான்கு கி.மீ. தொலைவுக்குப் பைப் பதித்தால்தான் கிராமத்துக்குத் தண்ணீர் வரும்.

பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு மாவட்ட பெண் ஆட்சியரிடம் இருந்து டிராக்டர் நிறைய பைப் குழாய்களுடன் லீலாவதி கிராமத்திற்குத் திரும்புகிறார். பைப் குழாய் பதிக்கும் வேலையில் கிராமம் முழுவதும் ஈடுபடுகிறது. ஒரு அழகான மாலை நேரத்தில் அக்கிராமத்தை முதன் முதலாக குடிநீர் எட்டிப் பார்க்கிறது. ஒரே கிணற்றிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்குவதால் குமுறும் மேல் சாதிக்காரர்கள், இரவோடு இரவாக பைப் குழாய்களைப் பிடுங்கி எறிகிறார்கள். அங்கு நடைபெறும் போராட்டத்தில் லீலாவதி கொலை செய்யப்படுகிறாள்.

மதுரை லீலாவதியின் கதையும் இதுதானே!

படம் முழுவதும் இந்திக் கவிஞர் கபீரின் பாடல் வரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மத நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் வலியுறுத்தும் இந்த இசை வரிகள் செல்லுலாய்டு காட்சிகளுக்குப் புதிய அர்த்தங்களைத் தருகின்றன.

பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ள இப்படம், லீலாவதி கொலை செய்யப்பட்ட ஏப்ரல் இருபத்தைந்து அன்று சென்னையில் திரையிடப்பட்டது. அன்வர் ஜமாலின் மனைவி சேஜோ சிங் திரைக்கதை அமைத்துள்ளார். டெல்லியின் பிரபல நாடக நடிகை அல்கா அமீன்வே லீலாவதியாக, வாழ்ந்துள்ளார். இப்படத்துக்குச் சொக்கலிங்கம் என்ற தமிழர் ஒளிப்பதிவு செய்துள்ளார். சென்னை திரையிடலுக்கு சிறப்பு அமைப்பாளராக அழைக்கப்பட்டிருந்த தங்கர் பச்சான், கொஞ்சமும் பிரசார வாடை இல்லாமல், 'அழகி'ய கவிதையாக வழக்கப்பட்டிருப்பதாகப் பாராட்டினார்.

- அப்பண்ணசாமி

நான் மோர் சாதம் பிசைந்து கொண்டிருந்தபோது, அம்மா, "கிருஷ்ணா, நாளைக்கு ஏகாதசிடா..." என்று மெல்ல ஆரம்பித்து வார்த்தைகளை விழுங்கினாள்.

"அதுக்கென்ன இப்போ?" என்று நான் நிர்தாட்சண்யமாய்க் கேட்க, "ஒண்ணுமில்ல, சொன்னேன்..." என்றாள்.

எனக்குப் புரிந்து விட்டது. அம்மா என்ன சொல்ல வருகிறாள் என்று. நான் நிஷ்டூரமான முகத்துடன், "நாளைக்கு ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன் இருக்கு. சீக்கிரம் போயாகணும்" என்றேன்.

"கொண்டு விட்டுட்டியானா போதும்டா. வரும்போது நான் நடந்தே..."

அம்மா சொல்லி முடிக்கவில்லை. நான் அவளிடம் 'வள்'ளென்று எரிந்து விழுந்தேன். "நான்தான் போன மாசமே சொன்னேனோல்லியோ, இதான் கடைசி தடவைன்னு. அப்பத்தக்கி காரியம் ஆகட்டும்னு மண்டையை மண்டையை பலமா ஆட்டினே. இப்போ திரும்பவும்."

அஸப



நான் ஏசிக் கொண்டிருக்கும்போதே அம்மா தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அவள் கண்களில் மெலிதாய் நீர் திரையிட்டுக் கொண்டது மாதிரி தோன்றியது.

"என்னம்மா, சின்னக் குழந்தையாட்டமா படுத்தறே. அங்க இருக்கறச்சே பக்கத்துல கோயில். இந்தப் புது வீட்லேர்ந்து சரியா நாலு கிலோ மீட்டர். என்னத்துக்கு இந்தக் கஷ்டம். பக்கத்துல இருக்கிற பிள்ளையார் கோயில் போறாதா... ஒண்ணைப் புடிச்சுண்டுட்டா அதையே தான் கட்டிண்டு அழுணுமா... இடம் பொருள் தெரிஞ்சு நம்பள மாத்திக்க வேண்டாமா?..."

அம்மா பதில் பேசவில்லை. நான் சாப்பிட்டு எழுந்து போன பின், சாதம், கூட்டு குழம்பையெல்லாம் எடுத்து வைத்து விட்டு மௌனமாய் எச்சிலிட்டுக் கொண்டிருந்தாள்.

அம்மாவுக்கு இது ஒரு வியாதியோ என்று எனக்குத் தோன்றியது. மாதம் ஒரு நாள் ஏகாதசியன்று காலையிலிருந்து பச்சைத் தண்ணீர் பல்லில் படாமல் கொலைப் பட்டினி கிடப்பாள். குளித்து முடித்து சமைத்து, வீட்டு அம்சங்களெல்லாம் அடங்கியபின், கல்லுக்குழி ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வருவாள். ஆஞ்சநேயரைத் தரிசித்த பின்தான் அவளுக்கு சாப்பாடு உள்ளே இறங்கும். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவளுக்கு இது

பழக்கம். நான் சிறு பையனாயிருக்கும்போது, அம்மா ஏதோ கோயிலுக்குப் போவாள் வருவாள் என்பதுதான் எனக்குத் தெரியும். அப்பா காலமான பின்பு, அவரது வேலை எனக்களிக்கப்பட்டு நானும் சம்பாதிக்க ஆரம்பித்த பிறகுதான், அம்மாவின் கொள்கை எத்தனை வலுவானது என்பது எனக்குப் புரிய ஆரம்பித்திருந்தது.



எத்தனை கஷ்டமிருந்தாலும், எந்தத் தலை போகும் காரியமிருந்தாலும், அம்மா ஏகாதசியன்று ஆஞ்சநேயரைத் தரிசிக்காமல் இருந்தது கிடையாது. அதுவரை சாப்பாட்டைக் கண்ணில் பார்த்ததும் கிடையாது.

முதலில் இது எனக்குப் பெரிய விஷயமாயிருக்கவில்லை. ஏதோ அவளின் ஆசை, என்று விட்டு விடுவேன். ஆபீஸ் போகும்போது அவளை ஆஞ்சநேயர் கோயில் முக்கில் இறக்கிவிட்டுச் செல்வது எனக்கும் வாடிக்கையாகிப் போயிருந்தது. நாங்கள் பழைய வாடகை வீட்டில் குடியிருந்தபோது இது கஷ்டமான ஒன்றாக இருக்கவில்லை. இப்போது, நான் ஆபீஸ் லோன் வாங்கி, நாலு கிலோ மீட்டர் தள்ளி புறநகர்ப் பகுதியில் ஒரு வீடு கட்டிக் கொண்டு விட்டேன். நானும் அம்மாவும் இடம் பெயர்ந்து விட்டோம்.

இவ்வளவு தூரம் வந்த பின்பும், அம்மா அதே ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போகணும் என்று சொல்வதுதான் எனக்குக் கஷ்டமாயிருந்தது. கோயிலுக்கு அழைத்துச் சென்று விட்டு, அவளைத் திரும்ப நாலு கிலோ மீட்டர் தூரம் நடக்க விடுவது எனக்கு ஏற்புடையதாயில்லை. அதனால், நான் அவள் தரிசனம் முடிக்கும் வரையில் கோயிலில் இருந்து, மீண்டும் வீட்டுக்கு அழைத்து வந்து அவளை விட்டு விட்டு, ஆபீஸ் போக வேண்டியிருந்தது. புறநகர்ப் பகுதியாதலால் பஸ் போக்குவரத்தும் சரியாக இல்லாமலிருந்தது. இப்படி இரண்டு மாதம் அம்மாவைக் கொண்டு விட்டுக் கூட்டி வந்தேன். ஆனால் அதை மாதா மாதம் தொடர்வதென்பது, எனக்கு ரொம்பவும் சிரமமான காரியமாயிருந்தது.

போன மாதம் கொண்டு விட்டுக் கூட்டி வரும்போதே

நந்தன்

நான் அம்மாவை எச்சரித்துவிட்டேன். 'இனி மாதா மாதம் இத்தனை தூரம் என்னால் கொண்டு விட்டுக் கூட்டி வர முடியாதும்மா. அதனால் பக்கத்துல இருக்கற பிள்ளையார் கோயிலுக்குப் பழக்கத்தை மாத்திக்கோ' என்று. அப்போது 'சரி' என்று சொன்னவள், இன்று திரும்பவும் அதே கதையைப் படிக்கிறாள். 'ஆஞ்சநேயர்... கோயில்..' என்று மென்று மென்று விழுங்குகிறாள். நான் எரிச்சல்படும்போது மௌனமாகிவிடுகிறாள். ஆனால் மனத்தளவில் திடமாயிருக்கிறாள்.

எனக்குக் கோபம் வருகிறது. ஆங்காரமாய்க் கத்தி விடுவேனோ என்று பயந்து நானும் மௌனமாகி விடுகிறேன்.

காலையில் நான் எழுந்திருந்தபோது, அம்மா வழக்கம் போல் குளித்து முடித்து விட்டு சமையல் வேலையிலிருந்தாள். அவளிடம் நான் ஏதும் பேச வேண்டும் என்று நினைக்கவில்லை. ஏதாவது சகஜமாகப் பேசிவிட்டால், தன் பழைய புராணத்தை அவள் ஆரம்பித்து விடுவாளோ என்று எனக்கு உள்ளூர ஒரு பயம். அதனால் பல் தேய்க்கும் போதும், குளிக்கும் போதும், சாப்பிடும் போதும் நான் இறுக்கமான முகத்துடனேயே இருந்தேன். நேரம் ஆக ஆக, என் இறுக்கம் தளர்ந்தது மாதிரித் தோன்றவே, அங்குமிங்கும் நடக்கும்போது அம்மாவின் முகத்தை ஏறிட்டேன். அவள் சற்றும் அசராது தன் வேலையிலேயே கவனமாயிருந்தாள்.

"ஹெட்கிளார்க் பரீட்சை ஜுரம்னு லீவு லெட்டர் எழுதி அனுப்பியிருக்கிறார் ஸார்!"

"என்னது! பரீட்சை ஜுரமா?"

"ஆமா, 'நான் பரீட்சை நல்லா எழுதலேன்னா, சொல்லித் தந்த நீங்கதான் காரணம்'னு பையன் அவரை மிரட்டிட்டுப் போயிருக்கானாம்!"

– என். உஷாதேவி



நேரம் செல்லச் செல்ல எனக்கு, அம்மா என்னிடம் ஏதும் கேட்க மாட்டாளா என்று தோன்ற ஆரம்பித்தது. இரண்டு மூன்று தடவை அவளின் முகத்தை சில விநாடிகள் இமைக்காது நோக்கிய போதும் கூட அவள் அதைக் கண்டு கொண்டதாய்த் தெரியவில்லை. அவளின் அத்தனை வீம்பைக் கண்டவுடன் எனக்கு மனசினுள் ஒரு விறைப்பு வந்தது. 'வேணும்னா வாயைத் திறந்து கேட்கட்டுமே... அவளுக்கு என்ன அத்தனை வீம்பு...!'

நான் ஆபீஸ் கிளம்பும் நிமிஷம் வரை அம்மா என்னிடம் எதுவும் பேசவில்லை. கிளம்பும் போது, "நீ சாப்பிடலையாம்மா..." என்று நான் கேட்க, "சாப்பிடணும்" என்று அவள் தரையைப் பார்த்துக் கொண்டே பதில் சொன்னாள். நான் சைக்கிளில் ஏறி மிதிக்க ஆரம்பித்தபோது, "ஜாக்கிரதையாப் பார்த்துப் போய்ட்டு வாப்பா" என்று அம்மா வார்த்தை உதிர்த்தாள்.

நான் "சரி" என்று ஒரு மிடுக்கான உறுமலோடு பெடலை மிதிக்க ஆரம்பித்தேன்.

ஆபீஸ் போய் இருக்கையில் அமர்ந்து என்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும்போது, என் மனத் திரையில் காலை நிகழ்வுகள் வரிசையாய் ஓட ஆரம்பித்தன. அம்மாவின் சாந்தமான முகமும், அதில் குடி கொண்டிருந்த அழுத்தமான மௌனமும் என்னைச் சிரமப்படுத்த ஆரம்பித்தன. சிறிது நேர சிந்தனை ஓட்டத்துக்குப் பிறகு, நான் எனக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

வேலையில் மூழ்க யத்தனித்தேன். ஆபீஸ் ஃபைலின் முதல் பக்கத்தைப் பிரித்தபோது அதில் அம்மா தெரிந்தாள். எனக்கு வேலையில் மனசைக் குவிப்பது கஷ்டமாயிருந்தது. ஆபீஸில் இன்ஸ்பெக்ஷன் என்று அம்மாவிடம் பொய் சொல்லிவிட்டு வந்தது மனசைப் பிராண்டியது. 'ச்... சே... என்னத்துக்கு சின்ன விஷயத்துக்குப் பொய் சொன்னோம். இன்னும் கொஞ்சம் அம்மாவிடம் பேசி அவளுக்கு விஷயத்தைப் புரிய வைத்து விட்டு வந்திருக்க வேண்டுமோ' என்று தோன்றியது. அம்மாவிடம் பேசி... என்கிற சிந்தனை வாய்த்தவுடன், காலையில் எழுந்ததிலிருந்து அம்மாவிடம் ஒரு வார்த்தை பேசாதது மனசைக் குடைய ஆரம்பித்து விட்டது. 'ச்சே... நம்ப அம்மாட்ட போய் நமக்கென்ன கோபம்? அம்மா தன்னோட ஆசையை எங்கிட்டக் கேட்கா

பெருமாளுக்கு ஸ்பெஷல் ஊற்று!


கோடை தண்ணீர்ப் பஞ்சம் ஸ்ரீரங்கம் பெருமாளை யும் விட்டு வைக்கவில்லை.

ரங்கநாதர் கோயிலில் அன்றாடப் பூஜைக்கும் பெருமாள், தாயார், சக்கரத்தாழ்வார் திருமஞ்சனத்துக்கும் பக்தர்களுக்குத் தீர்த்தம் கொடுப்பதற்கும் கொள்ளிடத்தி லிருந்து புனித நீர் கொணடு வருவது வழக்கம். தற்போது கொள்ளிடத்தில் நீர் வரத்து துளிக்கூட இல்லை.

இதனால் கோயில் பணியாளர்கள் கடந்த சில நாட் களாக கொள்ளிடம் ஆற்றில் ஊற்று தோண்டி நீர் எடுத்து வந்தனர். இதில் பல்வேறு நடைமுறை சிரமங்கள். கோயில் பணியாளர்கள் காலையில் தோண்டும் ஊற்றை மாலையில் சென்று பார்த்தால் அப்பகுதி மக்கள் அசுத்தப் படுத்தி விடுகின்றனர். இதனால் ஒவ்வொரு முறையும் புதிய ஊற்று தோண்ட வேண்டியதாயிற்று.

இதனையடுத்து கோயில் நிர்வாகம், கொள்ளிடம் ஆற்றில் கோயில் தேவைக்கென சுமார் பத்தடி ஆழம் கொண்ட ஊற்றுக் கிணறு ஒன்றினை உருவாக்கியது. இதையும் அப்பகுதி மக்கள் அசுத்தப்படுத்தாமல் இருக்க சிமெண்ட் உறைகள் போட்டு, பூட்டு போட்டுள்ளனர்.

"எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே கோயிலுக் குக் கொண்டு வரும் தீர்த்தத்திற்குத் தட்டுப்பாடு என்ற நிலை இதுவரை ஏற்பட்டதே இல்லை. காவிரி - கொள்ளிடம் இரண்டும் வறண்டு போயுள்ள



தால் கோயில் தேவைக்கே நீரில் லாத நிலை உருவாகி, ஊற்று தோண்டி நீர் எடுக்க வேண்டி யுள்ளது!'' என்கிறார் கோயில் அர்ச்சகர் ஒருவர்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

மல் யார்ட்ட போய்க் கேட்பாள்?'' எனக்கு அடிவயிற்றில் உஷ்ணப் பந்து ஒன்று உருண்டு மேலெழும்பிப் பின் தாழ்ந்து அடங்கியது.

அப்போது, ''நம்பிக்கைதாண்டா வாழ்க்கை'' - எதிர் சீட்டு முரளி, தன் நண்பனிடம் சொன்ன இந்த வார்த்தை என் காதைக் குத்தியது.

ஆமாம். நம்பிக்கை! அம்மா கோயிலுக் குப் போவது அவர் நம்பிக்கை. அதை ஏன் நான் தடுக்கணும்?

எழுந்து மானேஜரின் அறைக்குச் சென்று ஒரு மணி நேரம் பர்மிஷன் கேட்டேன்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக் குப் பறந்தேன். மணி பதினொன்றாகியிருந் தது. அம்மா சாப்பிட்டாளோ இல்லையோ தெரியலை. ஒரு வேளை என்னோட கோபத் துக்குப் பயந்து பக்கத்துப் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ட்டு வந்திருப்பாளோ!

அம்மா உயிரோட இருக்கற வரைக்கும் தானே அவளைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லும் பாக்கியம் எனக்குக் கிட்டும்! அது வரைக்கும் நான் அதைத் தக்க வெச்சுக்க வேண்டாமா?

இதை நினைத்துவுடன் எனக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. தொண்டைக் குழி அடைத்துக் கொண்டது. அடி வயிறு புரட்டியது.

நான் வேகு வேகென்று சைக்கிளை மிதித்து வீட்டு வாசலில் நின்றபோது, வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டுக்காரரிடம் கேட்டேன். அம்மா, ஆஞ்சநேயர் கோயிலுக் குச் சென்றிருப்பதாகச் சொன்னார்.

எனக்குப் பகீரென்றது. 'ஐயோ... அம்மா நடந்தே அல்லவா போயிருப்பா. பசி வயத்தோட நாலு கிலோ மீட்டர் நடக்கற துன்னா..!' நினைக்கும்போதே வியர்த்தது. சைக்கிளைத் திருப்பி மிதிக்க ஆரம்பித்தேன். மனசுக்குள் அதீத பயம் மண்டியது.

போற வழில எங்காவது விழுந்து... நான் பதற்றத்தோடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே சைக்கிளை மிதித்தேன். வழியில் எங்காவது நாலு பேர் கூடி நின்றால், அம்மா அங்கு எங்காவது விழுந்து கிடக்கிறாளா என்று பயத்துடன் எட்டிப் பார்த்தேன். என் கால்கள் இற்றுப் போனது போல் கெஞ்சின.

கோயில் வாசலுக்குச் சென்று வெளியி லிருந்து எட்டிப் பார்த்தேன்.

அம்மா கோயில் பிராஹாரத்தில் அடிப் பிரதட்சணம் செய்து கொண்டிருந்தாள்.

அம்மா வரும்வரை, வாசலில் காத்திருக்க ஆரம்பித்தேன். ●

"மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக ஒரு தனிப் பள்ளி பீஹாரில் இருக்கவில்லை. 'நார்மல் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் இருக்கிறது போதாதா? அவர்களுக்கென்று தனியே பள்ளி எதற்கு?' என்றே பலரும் கேட்டார்கள். ஆனால் 1976ல் ஒரு பள்ளியைத் தொடங்கி, இப்போது சில்வர் ஜுபிலி கொண்டாடிவிட்டோம்!'' என்கிறார் பானுமதி நீலகண்டன்.

ஐம்பதுகளில் சென்னையிலிருந்து ஜாம்ஷெட்பூருக்குக் குடிபெயர்ந்தவர் பானுமதி. இவர் அங்கே ஆரம்பித்த அமைப்புகள் பதினைந்து. தலைவராக இருந்த அமைப்புகள் நான்கு. உறுப்பினராகச் செயல்படும் அமைப்புகள் பன்னிரண்டு. இவை தவிர உதிரியாக இன்னும் சில!

"ஜாம்ஷெட்பூருக்கு நான் போனபோது, அங்கே நிறையத் தென்னிந்தியர்கள் இருந்தார்கள். ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட வேண்டும் என்று சொன்னபோது வரவேற்றார்கள். சுவாமி சின்மயானந்தா ஒரு முறை வந்திருந்தபோது, 'கிறிஸ்துவ அமைப்புகள் போல, நாமும் மருத்துவ சேவையிலும் கல்வித் துறையிலும் செயல்பட வேண்டும்' என்றார். இந்தி மீடியம்



• பானுமதி நீலகண்டன்

வந்தாச்சு பானுமதி!

பள்ளிகள் அருகே இல்லை. பெண்கள் இரண்டு மைல் போய்ப் படிக்க வேண்டும். பீஹார், ராஞ்சி பல்கலைக் கழகங்களின் தரமோ, சொல்லிக் கொள்ளும்படி இல்லை. ஸ்டேட் போர்டு போதாது என்று ஸி.பி.எஸ்.ஸி. பள்ளி ஆரம்பிக்க ஏராளமான வேண்டுகோள்கள். எனவே கல்விக்காக முதலில் பள்ளிகள் ஆரம்பித்தேன்'' என்கிறார்.

தொழு நோய் ஒழிப்பிலும் அக்கறை காட்டியிருக்கிறார் இவர். நோயாளிகளின் குழந்தைகளை, அவர்களது சம்மதத்தோடு அவர்களிடமிருந்து பிரித்து, வளர்த்து, பெண் என்றால் திருமணமும், ஆண் என்றால் தகுந்த வேலையும் தேடிக் கொடுத்திருக்கிறாராம்.

இவரது சமூகப் பணியில் குறிப்பிட வேண்டியவை இரண்டு. யாருக்கெல்லாம் வங்கிக் கடன் பெற்று, தொழில் தொடங்க வாய்ப்பு இருந்ததோ, அத்தனை பேருக்கும் தமது சொந்தப் பொறுப்பில் வங்கிக் கடன் வாங்கிக் கொடுத்திருக்



• பாராசூட்டில்

கிறார். நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு வீடு கட்ட ஹெச்.டி.எஃப்.சி. நிறுவனத்திடம் வாதாடி, கடன் வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

"பெண்களுக்காகத் தொழிற் கல்வி அகடமி தொடங்கி, அது எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. பீஹார் கல்யாணச் சந்தையில் டிப்ளமோவுக்கு மதிப்பில்லை, டிகிரிக்குத் தான் மதிப்பு என்று புரிந்துகொண்டேன். மத்திய அரசின் திறந்த வெளிக் கல்வித் திட்டத்தை முதன் முதலில் அறிமுகம் செய்து, ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள், தங்கள் தகுதிக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற தொழிற் கல்வி பெற்று டிகிரி பெற வழி செய்தேன்!" என்கிறார்.

வருடா வருடம், தமது சொந்த அறக் கட்டளையிலிருந்து ஐந்து பேருக்குத் தலா பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுத்து வருகிறார். இவரிடம் இப்படிப் பரிசு பெற்ற பெண்மணி ஆட்டுப் பண்ணை வைத்ததில், இப்போது ஒரு சின்ன முதலாளி! கூடை முடைகிறவர் ஒரு கடையே வைத்துவிட்டார். கண் பார்வை இழந்த ஒரு முஸ்லிம் பெண், அலிகார் பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. செய்து வருகிறார்.

சமூக சேவை மட்டுமல்ல. சாகச விளையாட்டுகளிலும் அசத்தியிருக்கிறார். புகழ்பெற்ற பச்சேந்திரி பாலுடன் இமய மலை ஏறியபோது இவருக்கு வயது 57. கணவருக்கு 67. "மனது திடமாகவும் உறுதியாகவும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும்" என்கிறார். பாராசூட்டில் குதித்துப் பறந்திருக்கிறார் - இந்த வயதிலும்!

சென்னைக்கு வந்து செட்டில் ஆனபிறகு, இரண்டு பிரபல தொண்டு நிறுவனங்களுக்குப் போய் அவர்களுடன் சேர்ந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்தபோது, அவரது சேவை பற்றிய விவரங்களைக் கேட்டவர்கள், ஒரு வார்த்தைகூடப் பாராட்டாகச் சொல்லவில்லையாம். ஜெனரல் பாடி மீட்டிங்குக்குப் போனவரை, அறிமுகம் கூடச் செய்து வைக்கவில்லையாம். அவர்களுக்கு என்ன பயமோ!

"அதனால் என்ன? ஜாம்ஷெட்பூரிலிருந்து வந்தவர்கள் இப்போது சுமார் நூறு பேர் இருக்கிறோம். நாங்களே இணைந்து இங்கு பணியாற்றத் திட்டமிட்டிருக்கிறோம்!" என்கிறார். அந்த நூறு பேரும் "வந்தாச்சு பானுமதி, அப்புறமென்ன?" என்கிறார்களாம்!

"சென்னைவாசிகள் பெரும்பாலும் சமூக சேவைக்கு அதிக முக்கியத்துவமோ, உரிய கௌரவமோ கொடுப்பதில்லை. அப்படி சேவை செய்கிறவர்களையும் ஏளனமாகவே மதிக்கிறார்கள். உள் நோக்கத்துடன் வேலை செய்வதாக நினைக்கிறார்கள்!" என்கிறார் வருத்தத்துடன்.

டாடா தொழிலாளர்கள் இவருக்கு 'மைக்கேல் ஜான் மெமோரியல் அவார்டு' வழங்கியிருக்கிறார்கள். ஆர்ய சமாஜ் வித்யா பீட விருது, ஜே.என். டாடா விருது, ஆர்வி அவர்கள் வழங்கிய சமூக சேவை விருது என்று பல விருதுகளைப் பெற்றிருக்கிறார் பானுமதி நீலகண்டன்.

- சித்தார்த்

படம் : **வெங்கடேஷ்**

• இம(ால)ய ஏற்றம்



தாரிக்... தாரிக்...!

ஈராக் யுத்த களத்தில், 'அல் ஜஸீரா டி.வி.யின் செய்தித் தயாரிப்பாளர் மற்றும் நிருபரான தாரிக் அயூப், அமெரிக்க குண்டு களுக்குப் பலியானார் சமீபத்தில்.

இந்த தாரிக் அயூப், 92 - 93ம் வருடங் களில் பெங்களூர் பாரதிய வித்யா பவனில் இதழியல் படித்தவர்.

"பேப்பர்ல அன்னைக்கு வந்த செய்தி

• தாரிக்குடன் வசந்தி



யைப் பார்த்ததும் ஷாக் ஆயிட்டேன். இறந்தது வேறு யாராவது இருப்பாங்கன்னு மனத்தைத் திடப்படுத்திட்டு இருந்தப்பதான் நண்பர்கள் அதை உறுதி செய்தாங்க. என் னால... நம்பவே முடியலை..." என்று விம்மு கிறார் தாரிக்குடன் படித்த வசந்தி ஹரி பிரகாஷ்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் தலை மைப் பொறுப்பாசிரியராக இருந்துவிட்டு தற் போது இந்தியா மார்க்கெட்ஸ் டாட் காமில் ஆசிரியராக இருக்கும் வசந்தி தொடர்கிறார்:

"ஜோர்டானிலிருந்து வந்திருந்தார் தாரிக். திடமான எண்ணம் கொண்டவர். எனக் குன்னு ஒரு குறிக்கோள், லட்சியம் இருக் குன்னு அடிக்கடி சொல்வார்.

"காலேஜில் முதல் நாள் எங்க எல்லோரை யுமே 'பத்திரிகையாளரான பிறகு நீங்கள் செய்யப் போவது என்ன?'ன்னு கேட்டாங்க. அந்த இளமைப் பருவத்திற்கே உரிய கொந்தளிப்புடன் சமுதாயத்தை மாற்றணும் ஊழலற்ற நிர்வாகம் வேணும்ங்கற ரீதியில் நாங்கள் பதில் சொன்னோம். தாரீக் மட்டும் 'பாலஸ்தீன மக்களுக்காக ஏதேனும் செய் வேன், ஒரு விடியலைக் கொண்டு வரு வேன்'னு சொன்னான். நாங்கள் எல்லோரும் ஆரவாரமாக கை தட்டினோம். சர்வதேச அரசியல் ஞானம் அவனுக்கு அதிகம்.

"தாரீக்கிற்குப் பெங்களூர் 'ரவா இட்லி'ன்னா வெகு இஷ்டம். இன் னொரு விஷயத்திலும் அவன் வீக். ஸ்ரீதேவின்னா அப்படி ஒரு மோகம். இந்தியாவில் செட்டிலானா ஸ்ரீதேவி யைத் தான் கல்யாணம் பண்ணிக்கு வேன்னு சொல்வான். ஆனால் கூச்சமாக.

"நாங்கள் எப்பவுமே அன்றைய தினசரிகளை வைத்துக் கொண்டு அலசி ஆராய்வோம்.

"ஒரு முறை காவேரிப் பிரச்னை பற்றி காமெடி டிராமா போட்டோம். தேசியத் தலைவர்கள் மற்றும் சர்வ தேசத் தலைவர்கள் இப்பிரச்னையில் எப்படி பேசியிருப்பார்கள்? ஒரு 'கற் பனை'. நான் ஜெய லலிதாவாக, இன் னொருவர் பங்காரப் பாவாக.. தாரீக்கை பாலஸ்தீன தலைவர் யாஸர் அராஃபத்தாக வேடம் போடச் சொன்னோம். மறுத்து விட்டான். ஆனால் எங்கள் காஷ்மீர் நண்பன் அதே ரோலில் நடித்தபோது தன்னுடைய 'கஃபியே' (தலைப்பாகை) தந்து உதவினான்.

"படித்து முடித்து நான் இந்தியன் எக்ஸ்பிரஸில் சப்-எடிட்டராக சேர்ந்தேன். என்னுடன் படித்த மற்ற எல்லோருடனுமே இத்தனை வருடங்களாகத் தொடர்பு இருக்கிறது. தாரீக்குடன் மட்டும் இல்லாமல் போய்விட்டது. எங்கு என்ன வேலையில் இருக்கிறான் என்று தெரியாமல் போனது. ஆனால் இப்போதுதான்..."

வசந்தியின் கண்கள் குளமாகின்றன!

- எல்.எஸ்.

'ஐசுவரிய ஆரோக்கிய மேன்மை பெற உரிய அரிய ஆழ்நிலை தியானம்'

(தபால்வழி பயிற்சி)

இன்றைய விஞ்ஞான உலகு வியக்கத்தகு மருந்துக்களையும் குணம் செய்யும் மார்க்கங்களையும் அதற்கான கருவிகளையும் கணக்கின்றி கண்டுபிடித்தபோதும் வியாதியினங்கள் ஏற்படாமல் - இளமை குன்றாமல் இனிதான ஆரோக்கிய நிலையில் இருப்போரைக் காணுவது எளிதாக இல்லை. அன்றைய நாளில் ஐந்தாறு தலைமுறைகள் கண்டும் நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழ்ந்த அதிக நபர்கள் மதமதக்க தாளியில் ஆத்மாவோடு அடக்கம் செய்யப்பட்ட வரலாறு காண்கின்றோம். அது எங்ஙனம் சாத்தியப்பட்டது என்ற சரிதத்தின் அத்தியாயம் தான் ஆழ்நிலை தியானம்.

ஆன்மீகத்தின் அரிச்சுவடியே மூச்சுப்பயிற்சியும், மன ஒடுக்கப்பயிற்சியும் தான். இந்த இரண்டு பயிற்சிகளையும் எளிய வழியில் கற்பிப்பதுதான் ஆழ்நிலை தியானம் - எந்த வியாதி வழியிலும் அகப்படாமல் நலம் பெற்று ஆரோக்கிய மேன்மை பெற மூச்சு கணிதமே பூரண துணை செய்யும். எந்த காரியத்திலும் வெற்றி பெற்று ஐசுவரிய மேன்மை பெற்று குபேரனாக வடிவெடுக்க மனஒடுக்க நிலை நிலை தான் துணை நிற்கும்.

விபரம் தெரியும் வயது முதலாகவே சிறிதான மூச்சுப்பயிற்சியும் மனஒடுக்கப் பயிற்சியும் சிறுவர் சிறுமியர் கூட செய்யலாம். எந்த வயதினர் செய்யினும் ஏற்ற பலன் அடைவது உறுதி. எப்போதும் எந்த வியாதி வழி துன்பமும் தொடாமல் வாழலாம். படிப்பு, பட்டம், பதவி என்பது அனைத்தும் அட்டியின்றி எண்ணியபடி அடைந்து அனைத்து நலங்களையும் மனோ சக்தி வழியாக அடையலாம். அதனை பூரணமாக அரிச்சுவடி முதலிலிருந்து கற்றுத் தருவது தான் இந்த ஆழ்நிலை தியானப் பயிற்சி. இது சாஸ்திர வடிவாக அன்றைய கால சித்தர்கள் செய்து வைத்தது. சிறிய மூச்சுப் பயிற்சி. எந்தக் கஷ்டமும் இல்லாதது. செய்யத் துவங்கிய 90 நாட்களிலேயே தேக ஆரோக்கிய நிலையில் - ஆச்சர்யகரமான மாறுதலைக் காணலாம். இருக்கும் வியாதி எதுவாக இருப்பினும் அது நிச்சயம் நீக்கிட உரிய மூச்சுப்பயிற்சியும் உண்டு. அதுவும் 48 நாட்களிலேயே அதிசய பலனைத் தரும்.

இதனை செய்ய விரும்புவோர் நிச்சயமாக மதுபானம் செய்யும் பழக்கம் உள்ளவராகவோ அல்லது புகைபிடிக்கும் பழக்கம், பொடி புகையிலை உபயோகிக்கும் பழக்கம் உள்ளவராகவோ இருக்கக் கூடாது. இத்தீய பழக்கம் உள்ளவர்கள் மனுச்செய்ய வேண்டாம். தவிர இதனை சற்று மனதை ஒருநிலைப்படுத்தி மனதில் சக்தி வடிவில் அட்டமாசித்தியை அடைய விரும்புவோர், காலையிலும், மாலையிலும் இதில் சொல்லும் பிரகாரம் தியானிக்க தயாராக இருக்க வேண்டும்.

இதன் வடிவில் சரியானபடி செய்துவிடில் தொழில்வழி அதிலாப மேன்மை, குடும்ப ஒற்றுமை கடன்வழி தொல்லை நீங்குதல், மாடமாளிகை கூட கோபுரம் அமைப்பது, எவராலும் பில்லி, சூன்யம், ஏவல் செய்வினை செய்ய முடியாத ஒரு தெய்வ அருளைப் பெறுவது, அனைவரும் போற்றிடும் பெருமைக்குரியவராதல், விரைவில் விவாகம் அடைதல், பிள்ளை இல்லாகுறை நீங்கி சற்புத்திரர்களை பெற்றெடுப்பது போன்ற அனைத்து நலங்களும் பெற்று குபேர வாழ்வை ,அடைவது தெய்வ தீர்வை. ஜாதகப்படி, இந்த தியானவழியில் நீங்கள் ஒரு குபேர கோமான் ஆகும் 'விதி' அமைப்பு இருந்தால்தான் இந்த விளம்பரம் உங்கள் கண்ணில் படும். உரிய தேதிக்குள் மனுச்செய்து கொள்ளும் வாய்ப்பு கிட்டும். அவ்விதம் வாய்ப்பு ஏற்பட்டு பயிற்சி பெற்றிடில் நிச்சயம் வாழ்வில் மகத்தான ஒரு உயர்வை அடைவீர்கள் என்பது தெய்வ கட்டளை. எனவே **18-06-2003** தேதி மாலைக்குள் உங்கள் ஜாதக நகலுடன் 'ஆழ்நிலை தியானம் கற்றுத்தேற விரும்புகிறேன்' என எழுதி அனுப்புங்கள். கிடைத்தவுடன் உரிய விபரபடிவம் அனுப்புகின்றோம். அது கிடைத்தவுடனேயே ஒரு நலமேன்மை ஏற்படும். அத்தேதி தவறிடில் இப்போது கடவுள் அனுமதியில்லை என்று பொருள். எமது ஆசிகள்

பெண்களும் நற்பலன் கண்டு அரிய பல மேன்மை அடைந்திருக்கின்றனர். ஆதலால் உரிய தேதிக்குள் அவர்களும் மனுச்செய்து கொள்ளலாம்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர்

பிளாட்எண்:204, அண்ணாநகர் **மதுரை - 625 020** தமிழ்நாடு

(0452)
2533412
2650576

பலவேசமுத்தின் புது வேஷம்

திருட்டு சம்பந்தமாக, சிறைக்கம்பியை எண்ணிய பலவேசமுத்து, தேரியூர் கிராமத்திற்கு வெளிநாட்டுக் காரில் வந்து இறங்கினாரே, அதற்குப் பின்னணியாக அமைந்த ஒரு சந்திப்பு.



5

ஓர் அரசியல் கட்சித் தலைவரின் அந்தரங்க அறை.

பலவேசமுத்துவும் அவருடைய மகன் தண்டபாணியும் ஆளுக்கொரு முரட்டு சூட்கேஸுடன் தலைவரைச் சந்திக்கப் பெரிய கும்பிடுகளுடன் போய் நிற்கிறார்கள்.

அவர்களை அழைத்துச் சென்றவர் தலைவரிடம் அறிமுகப்படுத்துகிறார்: "இவர் பெரிய பிஸினஸ்மேன். கோடிகளில் புரளுகிறவர். அந்தக் கோடிகளை, நீங்க கையைக் காட்டுகிற இடத்தில் கொட்டத் தயாரா இருக்காரு. அவரை முதல்லே 'எம்.எல்.ஏ.' ஆக்கணும். அதுக்குத்தான் சூட்கேஸ்களுடன் வந்திருக்கார். அப்புறம் உங்க பிரியப்படி அவரை மந்திரியாக்கிப்புடலாம். 'வேணாம்'னு சொல்ல மாட்டாரு. அததுக்குள்ள விலையை உங்க காலடியில வச்சிடுவார்" என்றவர், 'பலவேசமுத்து அண்ட் சன்'னைப் பார்த்து, "என்னய்யா, நீங்களும் பேசுங்க". என்றார்.

பேசச் சொன்னதுமே, படாரென்று தலைவர் முன் அடியற்ற மரங்களாகச் சாய்ந்து அவருடைய கால்களைத் தேடினர்.

_ அந்த இடைவெளிக்குள், தலைவரும் கையாளும் ஏதோ ஜாடையில் பேசினார்கள். பின் கையாள் காணாமல் போனார்.

சிலுக்குக் கருப்பட்டி

தாமரை மணாளன்

விழுந்து எழுந்து கேள்விக் குறியாக வளைந்து நின்ற பலவேசமுத்துவிடம், "சொல்லுங்க" என்றார் தலைவர்.

சட்டென்று இரண்டு சூட்கேஸ்களையும் தலைவர் பக்கமாக நகர்த்தி, "ஐயாவுக்கு காணிக்கை. நான் ஒரு கோடி. என் புள்ள ஒரு கோடி.. அத்தனையும் சலவை நோட்டுக்கள்" என்றார்.

"என்ன தொழில் செய்றே?" தலைவர் கேள்வி.

"சலவை நோட்டுன்னதும் தலைவர் தப்பாப் புரிஞ்சுகிட்டீங்க போலிருக்கு. நான் கள்ள நோட்டு அடிக்கலை."

"அடிக்கத் 'தில்' இருந்தா, அடிச்சுட்டுப் போயேம்பா. அகப்படற வரை எல்லாரும் யோக்கியனுகதான்... ஆனா உனக்கு பேர் சொல்றாப்பிலே ஏதாவது தொழில் இருக்கா?"

பலவேசமுத்து யோசித்தார்.

"அதான்யா, இந்த ஒயின்ஷாப், கள்ளச் சாராயம், கலப்படம், கந்துவட்டி இதெல்லாம் வச்சிருப்பே. அது இல்லாம, ஜனங்க கிட்டே உன்னைப் பற்றிச் சொல்றாப்பல... இல்லையா? ஒண்ணு செய். கொஞ்சம் நெலம் வாங்கிப் போடு."

"எதுக்கு தலைவா?"

"நெலம் வச்சிருந்தியானா, 'பெரிய விவசாயி. போகத்துக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மகசூல் கெடைக்குது'ன்னு அடிச்சு விடலாம். ஜனங்க நம்பிக்குவாங்க. சரி, எம்.எல்.ஏ.ஆவுறதுக்கு எவ்வளவு செலவளிப்பே?"

"எவ்ளோ வேணும்னாலும்..."

"அப்ப நீ ஜெயிச்சாச்சுன்னு வச்சுக்க. ஆமா, நீ எந்தப் பக்கம் 'எம்.எல்.ஏ'க்கு நிக்கணும்னு நெனைக்கிறே?"

"தலைவரே, எனக்குச் சொந்த ஊர் திருச்செந்தூர்ப் பக்கம். நான் ஊரை விட்டு வர்றப்போ, ஒரு பயலும் என்னை மதிக்கலை. அவனுவள்லாம் இப்ப கையெடுத்துக் கும்புடணும். அதனால அங்க எம்.எல்.ஏ. ஆவணும். ஒவ்வொரு வீட்லயும் கொண்டு துட்டை எறைச்சுப்புடறேன்." பலவேசம் சிலிர்த்தார்.

"எல்லா ஊட்லயும் எதுக்கு? குடிசை வீடுகளுக்குக் குடுத்தாப் போதும்." தலைவர் திருத்தினார்.

"தலைவரே, காலம் மாறிப் போச்சு. இப்ப பெரிய ஊட்டுக்காரன்தான் பெரிய தட்டை நீட்டி ஏந்துறான். 'எலக்ஷன்'னா இப்ப ஜனங்களைப் பொறுத்தவரை, 'கலக்ஷன்'! 'அம்புட்டுதான்!"

"பரவாயில்லையே, அரசியலைப் புரிஞ்சு வச்சிருக்கியே!"

"இல்லே தலைவரே, மனுஷனைப் புரிஞ்சு வச்சிருக்கேன். பலசரக்குக் கடை நடத்திப் பழக்கம். பத்து ரூபா காசுக்கு ஜனங்க என்னென்ன மாய்மாலம் பண்ணுவாங்க தெரியுமா? பணத்துல ஏழை பணக்காரன் கெடையாது. ஒருத்தன் வேட்டியை உருவிட்டு, அஞ்சு ரூபா குடுத்தா, அஞ்சு ரூபாதான் ஜனங்களுக்குப் பெரிசாத் தெரியும். நூறு ரூபா வேட்டி போச்சேன்னு கண்டுக்க மாட்டாங்க."

தலைவரே அசந்து விட்டார்.

"பலவேசம், நீ ரொம்பத் தெளிவா இருக்கே. நீ ஆசைப்பட்டபடி திருச்செந்தூர்ப் பக்கம் போய் மளமளன்னு இப்பவே வேலையை ஆரம்பிச்சுடு."

"என்ன செய்யணும்?"

"எங்கே வோட்டு வங்கி இருக்கோ, அங்கே உள்ள கோயில்கள்லே திருப்பணி பண்ணு. எல்லா மதக் கோயிலையும் விடாதே. எவனாவது சும்மா கல்லை நட்டு வச்சிருந்தாலும் நீ கோயில்னு கட்டடம் கட்டிக் குடுத்துடு. இப்ப கோயிலைக் கட்டுறதுதான், ஜனங்களைச் சாய்க்கிறதுக்கு ரூட்டு. அப்படியே

அந்தக் கோயில்லெ வச்சு சத்தியம் வாங்கிப் பிடு. மற்ற கட்சிக்காரன் எலக்‌ஷன் வந்தப் புறம் தான் 'கோயில் உண்டா, குளம் உண்டா?'ன்னு திரிவானுக. நீ முந்திக்க. சீக்கிரமே எலக்‌ஷன் வருது."

"நான் இப்பவே போறேன்."

"போறதுக்கு முந்தி ஒரு விஷயத்த கிளியர் பண்ணிட்டுப் போ."

"என்ன தலைவரே..!"

"நீ இப்ப குடுத்திருக்கியே ரெண்டு கோடி, இது அட்வான்ஸ்தானே?"

"அட்வான்ஸ் கூட இல்லே... பெரியவங் களைப் பார்க்க வரும்போது வெறுங்கை யோட வரப்படாதே... பழம், கிழம், வாங் கிட்டு வர்றாப்பில இது ஒரு மரியாதை."

"சரி, சரி! இன்னொரு விஷயம். உன்னை எங்கிட்டே கூட்டிட்டு வந்தானே, அவனுக்கு ஏதாச்சும் கொடுத்தியா?"

"ஆமா, தலைவரே...பத்துலட்சம்..!"

"இனிமே இப்படி ரூட்டு புடிக்கிறதுக்கு காக குடுக்கிறதுன்னா, என் மவனுக்குக் குடு. அவன் அதுக்குன்னு இருக்கான். அவனுக்கு மத்த கட்சித் தலைவர்கள்கிட்டேயும் செல் வாக்கு உண்டு. நாளைக்கு நம்ம ஆட்சி மாறினாக் கூட, அவங்ககிட்டே, என் புள்ளை மூலமா காரியம் சாதிச்சுக்கலாம். சரி, போ!"

"தலைவரே, ஒரு சின்ன சந்தேகம்... நான் நாளைக்கு ஒங்க தயவுல மந்திரியாயிட் டேன்னு வச்சுக்குங்க. அப்ப 'மினி மந்திரி' ஏதாவது இருக்குமா?" ரகசியமாய்க் கேட்டார்.

"எதுக்கு?"

"என் மகனுக்குத்தான்."

"வேணும்னா, ஒனக்கு மந்திரி பதவி வந்தா, அத அவன் கிட்ட குடுத்துடேன்."

"வேணாங்க. அவன் மந்திரியாயிட்டா, என்னை வெளியே நிறுத்திப்புடுவான்"— வெளியேறினார்.

சுருக்குப் பையிலிருந்து ஒவ்வொரு வெற்றிலையாக எடுத்து மடித்து வாயில் திணித்தவாறு, பலவேசமுத்து தன் கோஷ்டி யுடன் இங்கு வந்திருக்கும் நோக்கத்தை தன் பாணியில் சொல்லி முடித்தாள், சொகுசு அக்கா.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" பூமணி கேட்டாள்.

"இப்ப நான் யாரு? முந்தி மாதிரி இந்த ஊர்க் காட்டில சோமாறிக்கிட்டிருக்கிற வளா? அண்ணாச்சியோட கட்சியில நம்மூர் மகளிர் அணித் தலைவி. 'கவர்'குடுத்து சேத்திருக்காங்க."

"கவர்னா?"

"கவர்னா சும்மா இல்ல, கைநெறய ஐந்நூறு ரூபா நோட்டுக்களை கவருக்குள்ளே திணிச் சுக் குடுக்கிறது... ஒங்களுக்கும் தரணும்னு நெறய வச்சிருக்காவ. நீங்க 'சரி'ன்னா, பொட்டியைத் தூக்கிட்டு வந்துருவாவ."

ராமக்கனியின் கண்கள் சீற்றத்தால் சிவந்தன. "அவன் வந்து எனக்குத் தர்றா னாமா? எங்க செம்பவம் அப்பா போட்ட பிச்சையில வாழ்ந்த பயலுக்கு எம்புட்டு ஏத்தம்?"

"சித்தி, நீங்க இப்படிக் கோபப்படுவியன் னும் பலவேசமுத்து அண்ணாச்சி சொன் னாவ. அவிய வந்து பேசிட்டுப் போனா ஒங்க கோபம் மாறிடும்னும் சொன்னாவ. அதுக்குத் தான் நான் வந்திருக்கேன்."

"கோவம் இல்ல சொகுசு... அடிவயித்தி லேருந்து பத்திக்கிட்டு எரியுற தீ...!"

"சித்தி, நானும் ஒங்களுக்கு ஒரு மக மாதிரின்னு நீங்க சொல்லுவிய. அந்த உறவுல சொல்லுதன். நம்ம குடும்பம் இப்ப இருக்கிற நெலமை தெரியும்... செண்பகத்துக்கும் கல்யாணம் நடக்கணும். பலவேச அண்ணாச் சிக்கு யாரால வந்த வாழ்வு... உங்க வூட்டுக் காரவுகளால வந்தது தானே... அதனால இவயகிட்டே பணம் வாங்குறது தப்பில்லை."

ராமக்கனி அம்மாள் ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் செண்பகம் குறுக் கிட்டு, "அம்மா வீடு தேடி வர்றவங்களை 'வரப்படாது' என்று சொல்லப்படாது. அது நமக்கு மரியாதை இல்லே. அப்பா நம்மளை அப்படிப் பழக்கலை" என்றவள் சொகுசு

"எப்படி உங்க கட்சியிலே இரண்டு கொ.ப.செ?"

"ஒருத்தர் கொள்கை பரப்ப, மற்றவர் கொள்கையைப் பறக்க விட."

- எம்.ஆர்.மூர்த்தி





"மாப்பிள்ளை பையன் ஆட்டோ டிரைவர் போல..."

"எப்படிச் சொல்றீங்க?"

"அம்பது ரூபாய் மொய் செய்ததும், 'மேலே போட்டுக்கொடுங்க'ன்னு கேட்கிறார்!"

- எஸ்.முகம்மது யூசுப்

வைப் பார்த்து, "அக்கா, அவங்க வர்றதுன்னா, வரச் சொல்லுங்க" என்றான்.

சொகுசு வெற்றிப் பிரகாசத்துடன் வெளியேறினாள்.

அவள் சென்றதும் ராமக்கனி அம்மாள், "நீ ஏன் அவனை வரச் சொன்னே?" என்று சீறினாள்.

"அவங்களை வரச் சொன்னது எனக்கும் பிடிக்கலை. அப்பனும் மகனும் பொறுக்கிங்க மாதிரி இருக்கானுவ. கோயில்ல வச்சு அந்தப் பயல் செண்பகத்தைப் பார்த்த பார்வை, ரொம்பக் கேவலம்...' என்று இரைந்தான் கண்ணன்.

"நிறுத்துடா!" என்று மகனை அடக்கிய பூமணி, "என் மருமகள் செண்பகம் எதைச் சொன்னாலும், அதுல ஏதாவது நியாயம் இருக்கும். அவ மனசில இருக்கிறதை தெரிஞ்சுக்குவம்" என்றாள்.

"அம்மா, இப்ப வந்துட்டுப் போனது, சொகுசு அக்கா. வம்புக்குன்னே அலையுதவ. நாம அவளை மறுத்துப் பேசினா, வெளியே போய் வாய்க்கு வந்தபடி புரளி கிளப்புவா. அந்த ஆளுங்க வரட்டும். என்ன பேசணுமோ பேசிக்கலாம்" என்றாள் செண்பகம்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த ராமக்கனியின் முகம் ஒருவாறாக அமைதிக்கு வந்தது. பின், "அந்த ஆளுங்க வர்றாங்கன்னா, குடிக்கிறதுக்கு ஏதாவது குடுக்கணும். வீட்ல என்ன இருக்குன்னு பாரு!" என்றாள் அந்தப் பண்புள்ள தாய்.

பலவேசமுத்துவின் கூட்டம் தங்குவதற்கு ஒரு பெரிய வீட்டை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தாள் சொகுசு. அந்தக் கிராமத்தில், தான் வந்தால் தங்குவதற்கென ஒரு பெரிய வீட்டைக் கட்டிப் போட்டு விட்டு சென்னையில் இருந்தார் ஒரு பெரும்புள்ளி. அந்த வீடு காலியாக இருந்தது. அவர் சாதாரணமாக யாரையும் தங்க விடமாட்டார். ஆனால் சொகுசோ அவரிடம் தொலைபேசியில், "நாளைக்கு மந்திரியாகப் போறவுக வீடு கேட்கிறாக. அவுக கோயில் கட்டி முடிக்கிற வரை அவங்களுக்கு ஒங்க வீடு வேணும். பணம் எவ்வளவு வேணும்னாலும் வாங்கித் தாறேன். நாளைக்கு மந்திரியாயிட்டா, ஒங்க பிசினஸுக்கும் ஒதவுமே" என்று பந்தாவாகப் பேசி, வீட்டை வாங்கிக் கொடுத்து விட்டாள்.

அதன் மூலம் பலவேசமுத்துவின் கோஷ்டியில், மற்ற 'கரைவேட்டிகள்' பொறாமைப்படுகிற அளவு, சொகுசுவின் செல்வாக்கு ஏறிவிட்டது. அதோடு, அவள் ஆளை வளைக்கிறாற்போல் தளுக்காகப் பேசுகிற பெண் வேறு.

போதாக்குறைக்கு, 'உன் கண்ணில முழிக்கிறதே பாவம்' என்று சென்னையிலிருந்து வரும்போது ஏசிய ராமக்கனி அம்மாளின் மனசையே கரைத்து, அந்த வீட்டுக்குத் தான் செல்ல ஏற்பாடு செய்து விட்டாளே, சொகுசு! அதில் அவருக்கு அபாரதிருப்தி. ஏனென்றால் ராமக்கனி வீட்டோடு சமரசம் செய்து கொள்வதில், அவருக்குச் சில அந்தரங்கத் திட்டங்கள் இருந்தன.

தன் எண்ணப்படி காரியங்களைச் சாதித்து விட்டு வந்த சொகுசுவைப் பாராட்டும் விதமாக, அவளுடைய கன்னத்தில் செல்லமாகத் தட்டினார் பலவேசமுத்து. பெண்சாதி இல்லாமல் வாழும் பெரிய மனுஷனின் சபலத் தட்டு அது!

அந்த நேரம் பார்த்து அவருடைய மகன் தண்டபாணி உள்ளே நுழைந்தான். தான் சொகுசுவிடம் நடந்து கொண்டிருந்த விதத்தை மகன் பார்த்திருப்பானோ என்று அவருக்குக் கூச்சம்.

உடனடியாக மகனைக் குஷிப்படுத்துவதற்காக, "டேய் தண்டபாணி! 'செண்பகம், செண்பகம்'னு நீ பொலம்புறியே! அந்தச் செண்பகத்தை உனக்குக் கல்யாணம் செஞ்சு வைக்க முடிவு பண்ணிட்டேன். செண்பகம் வீட்டுக்கே போறோம். எல்லாம், சொகுசு ஏற்பாடுதான்!" என்றார்.

தன் தந்தை சொகுசுவின் கன்னத்தில் தட்டியதைப் பார்த்ததால் ஏற்பட்ட எரிச்சல் மாறி, படு உற்சாகமானான் தண்டபாணி.

(தொடரும்)



அந்தரங்க அடுக்குகளில்!

அடுத்தவன் படகு கவிழ்ந்தால்
நமக்குச் சந்தோஷம்.

எல்லோருடைய
மனத்திலும் ரகசியமாய்
கட்டி வைத்திருக்கிறோம்
சாதிச் சங்கங்கள்.

எல்லோரின்
கையிலும் இருக்கிறது
எதிரியின் முகத்தில் வீச
திராவக சீசாக்கள்.

பாஞ்சாலியின் சபதத்துக்குக் காரணமான
சகுனியின் சூதுபடிந்த தாயக்கட்டைகள்
யுத்த வெறி பிடித்த வேல்கம்புகள்
ரத்தத்தில் புரண்ட வாள்கள்
ஹிட்லரின் பீரங்கிகள்
கோட்சேயின் துப்பாக்கிகள்
எல்லாம்
ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன
மனசின் அந்தரங்க அடுக்குகளில்.
விரோதம் விரிந்து கிடக்கிறது
ரத்தக் கடலாக.


இளையபாரதி

அன்னமே பிரம்மா! அன்னமே விஷ்ணு! அன்னமே சிவன்!

சித்தர்கள் வாழும் பூமியாம் - திருவருள் பொழியும்

திருவண்ணாமலையில்

பௌர்ணமி நாளில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



பேரன்புடையீர்! நமஸ்காரம்.

பஞ்சபூதத் தலங்களில், அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலை, நினைத்தாலே முக்தி தரும் புண்ணிய க்ஷேத்திரம். கிரியே சிவமாகவும், சிவமே கிரியாகவும் விளங்குவதால் இங்கு பௌர்ணமி தினத்தில் கிரிவலம் வருவது சிவபெருமான் உறையும் கைலாயத்தையே வலம் வருவதற்கு ஒப்பாகும். இங்கு பௌர்ணமி காலத்தில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கும், சாதுக்கள், ஊனமுற்றோர், சன்யாசிகள், ஏழை எளிய மக்கள், பக்தர்கள் ஆகியோருக்கு அன்னம் அளிப்பது மகத்தான புண்ணியத்தை நமக்குத் தருகிறது.

தடுத்தாட் கொள்வது, கிரக நிலைகளை மாற்றுவது, ஊழ்வினைகளை நீக்குவது, முக்தி தருவது, ஆயுளை நீடிப்பது, நோய்களைக் குணப்படுத்துவது போன்ற சிவ லீலைகள் நிகழ்ந்த இவ்விடத்தில், அன்னதானத்தின் மூலம் புண்ணியம் பெறுவதும், மோக்ஷம் அடைய முயல்வதும் உயர்ந்த லட்சியமாகும்.

★ மனச்சாந்தி பெற ★ திருமணம் கைகூட ★ நோய்நொடிகள் தீர ★ எண்ணங்கள் வெற்றி பெற ★ சந்தான பாக்யம் பெற ★ பிரச்சனைகள் எளிதில் தீர ★ கணவன் மனைவி ஒற்றுமை ஏற்பட ★ தொழிலில் மேன்மை பெற ★ பிரிந்தவர்கள் ஒன்று சேர ★ கடன் தொல்லைகளிலிருந்து விடுபட ★ நினைத்த காரியம் நிறைவேற ★ உங்களுக்காக நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

அன்னதானம் செய்ய அரிசி போன்ற உணவு பொருட்களும் சிறிய தொகையும் ஏற்றுக் கொள்ளப்படும்.
ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 மற்றும் ரூ. 5,000 அளிக்கும் அன்பர்களுக்கு பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். அல்லது **கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால்** தயாரிக்கப்பட்ட அபூர்வ யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகளை அனுப்பும் அன்பர்கள் **SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST, CHENNAI-41** என்ற பெயரில் **CHEQUE/D.D./M.O.** மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஸ்ரீ அன்னலக்ஷ்மி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: (044) 24900303, 24900603 Mobile : 94441 16300 (A UNIT OF GOPURA DHARISANAM)



கோடைக் கால குற்றங்கள்!

குமரேசனுக்குச் செமினார் வகுப்பில் கவனம் போகவில்லை. அவ்வப்போது தனது செல்ஃபோனையே கவனித்துக் கொண்டிருந்தார். தமது வங்கியின் சார்பில் அளிக்கப்படும் பயிற்சிக்காக வேலூரிலிருந்து சென்னை வந்திருந்த ஸ்டேட் பாங்க் அலுவலரான குமரேசன், தமது பன்னிரெண்டு வயது மகன் பிரசாந்திடமிருந்து தான் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தார். பயிற்சிக்காக புறப்படும்போதே சொல்லியிருந்தான் :

“நான் பாஸ் ஆன ரிசல்ட் தெரிஞ்சதும் முதல்லே உங்களுக்குத்தான் ஃபோன் பண்ணிச் சொல்வேன்.” அவர் எதிர்பார்த்தது போலவே செல்ஃபோன் ஒலித்தது. மகனின் மழலைக் குரலை எதிர்பார்த்தவருக்கு, இதயத்தை இரண்டு கூறாக கிழித்துப் போட்டது அந்தத் தகவல். பட்டப் பகலில் வீட்டில் தனியே இருந்த அவரது மனைவி பிரேமாவையும், மகன் பிரசாந்தையும் கொலை செய்துவிட்டு, நகைகளை கொள்ளையர்கள் அள்ளிச் சென்றுவிட்டதை அறிந்து துடிதுடித்துப் போனார். வேலூரை ஒட்டிய புற நகரில் வசித்து வந்ததால்தான், உயிருக்குயிரான மனைவி, மகன் இருவரையும் கொள்ளையர்களிடம் பறிகொடுக்க வேண்டி வந்ததா? இந்தக் கேள்விக்கு எதிர்மறையாக, இதே போன்றதொரு கொடூர சம்பவம், நெருக்கமான அடுக்குமாடிக் குடியிருப்புகள் மிகுந்த சென்னை தியாகராய நகரில் நிகழ்ந்திருக்கிறது.

அலங்கார மீன்கள் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வந்த ஆண்டியப்பன், வழக்கம்போல மதிய உணவுக்காக வீட்டிற்கு வந்தபோது, அவர் கண்ட காட்சி நெஞ்சை உறைய வைத்துவிட்டது. மனைவி மலர்க்கொடி கொடூரமாய்க் கொலை செய்யப்பட்டுப் பிணமாய்க் கிடக்க, கழுத்தறுபட்ட நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான் இவர்களின் ஒரே மகனான நான்கு வயது விக்னேஷ்.

வீட்டில் பெண்கள் மட்டும் தனித்திருப்பதை மோப்பம் பிடித்து, கொள்ளையடிக்க உள்ளே புகும் திருடர்கள், ஆதாரம் இருக்கக் கூடாதென்று பெண்களையும் குழந்தைகளையும் கொல்லும் பயங்கரம், கோடைக் காலங்களில் அதிகரிக்க என்ன காரணம்? சென்னை மாநகரக் காவல் துறையின் துணை ஆணையர் கே. சண்முக ராஜேஸ்வரன் சொல்கிறார் :

“முதல் காரணம் கோடை வெப்பம் காரணமாக, காற்றோட்டத்துக்காக கதவு, ஜன்னல்களைத் திறந்து போட்டுவிட்டுப் புழுங்குவதையும், மொட்டை மாடியில் தூங்குவதையும் திருடர்கள் கவனிக்கிறார்கள். இரண்டாவது, விடுமுறை காரணமாக வயதானவர்களையோ அல்லது பெண்களை

மட்டுமோ வீட்டில் தனியாக விட்டு விட்டுச் சுற்றுலா சென்றுவிடுவதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைப்பார்கள். மூன்றாவது, கோடைக் காலங்களில் பூட்டப்பட்டிருக்கும் வீடுகளின் மீது அவர்களது பார்வை திரும்பும்.

"வீட்டில் தனியாக இருக்கும் பெண்கள், அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்களிடம் பேசும்போதோ, வேறு பொது இடங்களில் உறவினர்கள், நண்பர்களை நேரில் சந்திக்கும்போதோ, செல்ஃபோனில் பேசும் போதோ, 'வீட்டில் தனியாக இருக்கிறேன். ரொம்ப போர் அடிக்கிறது' என்ற ரீதியில் பேசக்கூடாது. மின்சார மீட்டர் கணக்கு எடுப்பவர், கேபிள் டி.வி. சரி செய்ய வருபவர், மார்கெட்டிங் பிரதிநிதிகள் என்று எந்த ரூபத்திலும் இருடர்கள் வரலாம்.

தினசரி வீட்டுக்கு வந்து போகிற தெரிந்த முகங்களில், பால்காரர், சலவைக்காரர், காஸ் சிலிண்டர் டெலிவரி செய்பவர், காய்கறி தருபவர் என்று பலரும் உண்டு. நன்றாகப் பழகுகிறார்கள் என்பதாகச் சொல்லி அவர்களை உள்ளே அனுமதிக்கக் கூடாது. விலை உயர்ந்த பொருட்கள் அவர்கள் கண்ணில் படும்போது, தவறான எண்ணங்கள் எழ நீங்களே வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறீர்கள். இவர்கள் மற்றவர்களிடம் பேசும்போது பேச்சுவாக்கில் வீட்டின் நிலைமை பற்றிக் கூறிவிடுவது திருடர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடுகிறது" என்கிறார் சண்முக ராஜேஸ்வரன்.

விடுமுறையில் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூர் செல்பவர்கள், தங்கள் உடமைகளைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லித் தருகிறார்.

"வீட்டைப் பூட்டிவிட்டுச் செல்பவர்கள் தயங்காமல் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்து விட்டுச் செல்வது, கண்காணிப்பை கூர்மைப்படுத்த உதவும். வீட்டில் உள்ள விலையுயர்ந்த பொருட்களையும் பணத்தையும் வங்கியிலும் லாக்கரிலும் வைத்துவிட்டுச் செல்லலாம்.

"சென்னை போன்ற பெரிய நகரங்களில் வசிப்பவர்கள், எலக்ட்ரானிக் ரிமோட் அலாரங்களை வீடுகளில் பொருத்திக் கொள்வது மிகுந்த பாதுகாப்பைத் தரும். குறிப்பாக கதவுக்கு வெளியே பொறுத்தக் கூடிய மினி கேமராவுடன் கூடிய இண்டர்காம் போன் பொருத்தினால், ஃபோனிலேயே பேசி, தேவையிருந்தால் மட்டும் உள்ளே அனுமதிக்கலாம்.'' என்று சொல்லும் துணை ஆணையர், "அடுக்குமாடிகளில் குடியிருப்போர் நல சங்கங்களை பகுதிவாரியாக அழைத்து, வாராந்திரப் பாதுகாப்புக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். கூட்டங்கள் நடைபெறாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள். காவல் நிலையத்தை அணுகினால் அவர்கள் பகுதியிலும் உடனடியாகக் கூட்டம் போடப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யலாம்'' என்கிறார்.



• கே. சண்முக ராஜேஸ்வரன்

- ஸ்ரீசக்கரம்

படம் : டிஜிட்டல் சண்முகம்


3

தனநந்தர் புதையல்

வடிவலம்ப நின்ற பாண்டியன், கடல் கடவுளை வணங்கி போற்றினார் : "பாரீர்! இன்றைக்குப் பிற்பகல் கதிரவனின் பொற்கிரணங்கள் துளைத்து அலைகளின் பசுமை நிறங்கள் கீழே பொதிந்து கிடக்கும் மரகதக் கற்களால் பளபளக்கும் காட்சியைப் பாரீர்...பாரீர்...!"

தனிமையில் நின்று கடலைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த அவனை ஷிவா உற்று நோக்கினான். அருகில் இன்னொரு மனிதன் இருப்பதையே கவனிக்காமல் அவன் பெரும் ஆனந்தக் களிப்போடு கடலையே உற்று நோக்கி பேசிக் கொண்டிருந்தான். ஷிவா அவனைக் கூர்ந்து நோக்கினான். அதிகப்படியான உடைகள் அவன் உடலில் இல்லை. அராபியர்களைப் போல நீண்ட சராயை அணிந்திருந்தான். மார்பு திறந்து கிடந்து படு விசாலமாக திண்ணிய தசைகளுடன் இருந்தது. மார்பிலும் தோள்களிலும் கடல் நீர்த் துளிகள் சூரிய ஒளியில் பிரகாசித்து வைர ஹாரம் போல் பிரமை ஏற்படுத்தின. அவன் கடலை நோக்கி நீட்டிக் கொண்டிருந்த கரங்கள் வலிமையை உணர்த்தின.

ஷிவா, அவனை நோக்கிச் சென்று "எக்ஸ்கியூஸ் மி... எந்த டான்ஸ் மாஸ்டர் ட்ரூப் நீங்க?" என்றான்.



எங்கிருந்தோ திடீரென்று ஒரு முரட்டுக் குதிரை அவன் முன் வந்து நின்றது. தன் நீண்ட முகத்தை தூக்கித் தூக்கி அவன் முன் காண்பித்தது. தன் வலிமைமிக்க கையால் அவன், குதிரையை மெல்ல தடவிக் கொடுத்தான்.

"எக்ஸ்கியூஸ் மி..." என்றான் ஷிவா மறுபடியும்.

திரும்பிய அவன் ஷிவாவின் உடைகளை மிக ஆச்சர்யமாகப் பார்த்தான்.

"என்ன மொழி பேசுகிறீர் நீர்? நான் அசுவசாத்திரத்தை நன்கு அறிந்தவன். புரவிகளின் பாஷைகூடத் தெரிந்தவன்... நீர் பேசுவது விளங்கவில்லையே?... எந்தத் திசை உமக்கு? பஃறுளி ஆற்றைத் தாண்டி வருகிறீரோ?"

ஷிவாவுக்கு ஷாக் அடித்தாற்போல ஆகிவிட்டது. கடவுளே! மஞ்சள் தண்ணி நிஜமாகவே எங்கேயோ கொண்டு வந்து விட்டுவிட்டது. தடதடவென அடிக்க ஆரம்பித்த தனது இதயத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவனை நோக்கினான்.

"ஐயா... இது எந்த ஊர் என்று நான் அறிந்து கொள்ள முடியுமா?..."

வஸந்த் செந்தில்

"இது மாங்குடி... பாண்டிய தேசம்... நள நாட்டின் ஒரு பகுதி கடலுக்குள் போய் விட்டாலும், வடக்கு நிலப் பகுதியை இணைத்து சாம்ராஜ்யம் பெரிதாகி விட்டது... தலையானங்கானத்து நெடுஞ்செழியன் புகழ் தான் ஓங்கி வளர்கிறதே... உமது தேசத்திற்குத் தெரியாதோ?"

அவன் வெண்கலக் குரலில் சப்தமாகப் பேசினான். நெஞ்சை நிமிர்த்தி விறைப்பாக நின்று கொண்டிருந்தான்.

ஷிவாவுக்குப் புரிந்து விட்டது. பாண்டியர்கள் அரசாள்கிற ஏதோ ஒரு காலத்திற்கு வந்துவிட்டோம். அந்த சரவணனும் இங்கேதான் வந்திருக்க வேண்டும். முதலில் பயத்தில் அடித்துக் கொள்கிற இந்த இதயத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஷிவா திடீரென்று கடலைப்



பார்த்துக் கத்தினான். "அச்சமில்லை... அச்சமில்லை... அச்சமென்பதில்லையே?..."

குதிரையைத் தடவிக் கொண்டு இரும்பு போல நின்ற அவன், ஷிவாவை ஆச்சர்யம் கொண்ட விழிகளால் ஏறிட்டான்.

"என்ன கூச்சல் அது?"

ஷிவா, "கூச்சலா? ஓ... இது உனக்குத் தெரியாதில்லையா?... இந்தப் பாட்டை எழுதினது பாரதியாருப்பா... பின்னால இருபதாம் நூற்றாண்டுல வந்து பாடுவாரு... நான் ரொம்ப பயந்துட்டா இதைப் பாடிப்பாடி பயத்தைப் போக்கிக்குவேன்" என்றான்.

'நீர் பேசுவது ஒன்றும் விளங்கவில்லை?"என்றான் அவன்.

ஷிவா! தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டே, "உமக்குப் புரிகிற மாதிரி கேட்கிறேன்...தீப்பெட்டி இருக்கிறதா? ஒரு சிகரெட் பற்ற வைத்து புகை பிடிக்க வேண்டும்" என்றான்.



''எங்க வீட்டுக்கு வந்திருந்த திருடன் தொழிலுக்குப் புதுசுன்னு நிச்சயமா தெரியுது...''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''கத்தியைக் காட்டி, 'கட்டுத் தள்ளிடுவேன், ஜாக்கிரதை'ன்னு சொன்னானே!''

– சீர்காழி வி.ரேவதி

"என்ன?"

ஷிவா, "ச்சே... நம்ம தமிழ் எவ்வளவு தெளிவா இருக்கு... இதைப் போய் புரிய லைன்னு சொல்றானே?" என்று முனகிக் கொண்டு, சப்தமாக, "ஐயா... சற்று எரிகிற நெருப்பு வேண்டும்..." என்றான்.

''அவ்வளவுதானே?'' என்று மலர்ந்து அவன் தன் சராய்க்குள் இருந்து இரண்டு சிறிய கற்களை எடுத்தான். குதிரையின் வயிற்றுப் பக்கம் தொங்கிக் கொண்டிருந்த தோல் பையில் இருந்து ஒரு குச்சியை எடுத்தான். சரக்கென்று அந்தக் கற்களை உரசி, அந்தக் குச்சியைப் பற்ற வைத்தான். ஜுவாலை கிளம்பி சந்தன வாசம் அடித்தது. ஷிவா, தனது கோல்ட் ப்ளேக் கிங்ஸ் ஒன்றை எடுத்து அதில் பற்ற வைத்து, உதட்டில் சரியாக இட்டு, நெஞ்சு சூடாக இழுத்தான். கடலில் இருந்து வீசிக் கொண்டிருந்த குளிர்ந்த காற்றுக்கு அந்த வெப்பம் மாற்றாக இருந்தது.

ஷிவா, அவனை நோக்கி, "முதல் முதலா சந்தனக் கட்டையை எரிச்சு தம் பத்த வச்ச ஆளு நீந்தாய்யா..." என்றான்.

எதிரே நின்று கொண்டிருந்தவனின் முகம் திடீரென்று கலவரமாகியது. குதிரை கனைத்துக் கொண்டது. இரண்டு எட்டு பின்னால் சென்றவன், "ஐயகோ... பாண்டிய தேசத்தில் மறுபடியும் ஒரு மந்திரவாதி... தனலை உண்கிறான்...!" என்று அலறிய படியே தாவி, அந்தக் குதிரையில் ஏறினான். நிமிடத்தில் அந்தக் குதிரை பாய்ந்து, மறைந்து புள்ளியானது.

ஷிவா, அவனுடைய வேகத்தைப் பார்த்து உறைந்து விட்டான். 'பாவி... தம்மடிச்சதைப் பாத்து பயந்துட்டானே? லா படிச்சுட்டு ஹைகோர்ட்ல வாய்தா வாங்கி வாழ்க்கை நடத்தற ஆளு நான்... என்னைப் பாத்து மந்திர வாதின்னு சொல்லிட்... ஆ... என்ன சொன்னான்? மறுபடியும் ஒரு மந்திரவாதின்னு சொன்னான்... கரெக்ட்... அப்ப சரவணன் இந்த ஊர்லதான் இருக்கான்.!'

ஷிவா, அந்த இடத்தைச் சுற்றிலும் கவனிக்க ஆரம்பித்தான். சற்றுத் தூரத்தில் கடலில் நான்கு பெரும் மரக்கலங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அதிலிருந்து எக்கச் சக்கமான குதிரைகளை பெரிய படகுகளில் இறக்கிக் கொண்டிருந்தார்கள். மிக உயர்ந்த ஜாதிக் குதிரைகளாக இருக்க வேண்டும். அடிமைகள்போலத் தோற்றமளித்த சிலர், வணிக மூட்டைகளைச் சுமந்து சென்று கொண்டிருந்தார்கள். கூடவே, அங்குமிங்கு மாக பல்வேறு சிறுசிறு படகுகள். அவை ஏககாலத்தில் எழுப்பிய ஓசைகள் கடலின் அலை ஓசைக்குப் பின்பாட்டுப் போல இருந் தன. கண்ணில் பட்ட மனிதர்கள் அனை வரும் சொல்லி வைத்தது போல இடுப்புத் துணி மட்டும் கட்டியிருந்தார்கள். கழுத்தில் கறுப்பு நிறக் கயிறு இருந்தது. முன்பு பார்த்த வனைப் போல் ஒவ்வொருவரும் திண்திண் ணென்று இருந்தார்கள். ஷிவா யோசித்தான். இவர்களிடம் மாட்டினால் மந்திரவாதி என்று நினைத்து உப்புத்தான் போட்டு உரித்துவிடுவார்கள்... வேண்டாம்... அந்த ஒற்றையடிப் பாதை வழியே போகலாம்...

கடற்கரையைத் தாண்டியதும் மெல்லிய கோடு போல ஒரு வழி, ஊருக்குள் போக ஆரம்பித்தது. ஷிவா, அதில் நடந்து கொண் டிருந்த போது எதிரே ஒரு முதியவர் வந்து கொண்டிருந்தார். தசைகள் தளர்ந்தவர். ஷிவா, அவரிடம் பேசலாம் என்று நினைத் தான். ஏதாவது பிரச்னை என்றாலும் இவ ரிடம் தப்பிப்பது எளிது என்று நினைத்து அவரை நெருங்கினான்.

"ஐயா...நான் அயல் தேசத்து வணிகன்.. வந்த இடத்தில் எனது புரவி நோய்வாய்ப் பட்டு இறந்து விட்டது. தாங்கள் யாரென்று தெரிந்து கொள்ளலாமா?"

"நான் வானசாஸ்திர வல்லுநன்... வள்ளா னப் பெரியோன் எனது பெயர்... மாகீர்த்தி யின் அரசவையில் அரங்கேற்றப்பட்ட தொல்காப்பியம் மறுபடியும் வாசிக்கப்பட் டது. நெஞ்சு குளிரக் கேட்டுவிட்டு வரு

இறேன்... காயல் தாண்ட வேண்டும்..."

ஷிவா, சாந்தமாக இருக்கும் அந்த முதியவர்தான் விஷயங்களைத் தோண்டுவதற்குச் சரியான ஆள் என்று முடிவெடுத்தான்.

"ஐயா... எனக்கு முன்பு வேறொரு வணிகன் இங்கு வந்தான்... திரும்பவேயில்லை... அவனைத் தேடித்தான் வந்தேன்..."

பெரியவர் தமது நீண்ட வெண்தாடியை நீவிக் கொண்டே அர்த்தத்துடன் புன்னகைத்தார்.

"மன்னர் மகள், சாதாரண வணிகன் என்றெல்லாம் காதலுக்கு ஏது பாகுபாடு?" என்றார் ஷிவாவை ஆழ்ந்து நோக்கி.

ஷிவா, "அவன் தந்தை சென்னையில் கலவரமாக இருக்கிறார்... சற்று விவரமாகச் சொல்ல முடியுமா?" என்றான்.

பெரியவர் மீண்டும் சிரித்தார். அவருடைய ஜடைமுடி அவரைவிட வலிமையாக இருந்தது.

"அந்த வணிகன் இந்த மாங்குடிக்கு திடீரென்று வந்தான். நாட்டின் இரண்டாவது இளவரசி திவ்யதேவி செய்யுள் கற்பதற்காக மருதனாரிடம் வந்தாள். வந்தவள் அந்த வணிகனைச் சந்தித்த நொடியிலேயே காதல் கொண்டாள். ஆனால் மன்னன் மகளாயிற்றே?... ராஜநீதி என்ன ஆவது?... உனது வணிகன், நகரின் மையத்தில் கட்டி வைக்கப்பட்டிருக்கிறான்... கடந்த பத்து தினங்களாக கடல் கடவுளுக்கு விழா நடந்து கொண்டிருந்தது. அதனால் அவன் தப்பித்தான்... அநேகமாக அவன் நாளை உச்சி வெயிலில் சிரச்சேதம் செய்யப்படுவான்..."

ஷிவா மிரண்டு விட்டான். 'சிரச்சேதம்? தலை துண்டிக்கப்படும். மை காட்...' அவரைப் பார்த்து மறுபடியும் பணிவுடன், "அந்த இடத்திற்கு எப்படிப் போக வேண்டும் ஐயா?" என்றான்.

"இதோ... இந்த ஒற்றையடிப் பாதையில் போனாலே நகரமையம் வந்துவிடும்..." என்ற அந்த முதியவர் மறுபடியும் புன்னகைத்தார்.

ஷிவா அவரை நோக்கி, "மிக மர்மமாக சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களே?..." என்றான்.

"நான் சோதிட சாஸ்திரம் கற்றவன். அதில் வல்லவன்... இரண்டாவது இளவரசி திவ்யதேவி பூமியில் ஜனித்த நேரம் அறிந்தவன். அவள் ஜாதகக் கணிப்புப்படி பார்த்தால், அவள் பல ஜென்மங்களைக் கடந்தாவது அந்த வணிகனை மணம் செய்வாள். தலையானங்கானத்தானுக்குக் காதலின் வலிமை தெரியவில்லை... ஆண்டவன் முடிவை யார் தடுப்பது?"

பெரியவர் தமது தாடியை வசமாக நீவிக் கொண்டே மறுபடியும் புன்னகைத்தார். அவர் சொல்வதெல்லாம் ஷிவாவுக்கு முக்கியமாக இல்லை. இருட்டாகி விட்டது. தாமதிக்கிற ஒவ்வொரு நொடியும் ஆபத்து. அவரிடம் நன்றி சொல்லி விடைபெற்று, அந்த ஒற்றையடிப் பாதையில் ஓட ஆரம்பித்தான்.

(தொடரும்)

காதலின் ஆத்மாவை எப்படிக் காப்பாற்றுவது?

'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தை இயக்கிய ஆர். பாலுவை நினைவிருக்கிறதா? ஐந்து வருட இடைவெளிக்குப் பிறகு அமைதியாக 'அன்பே உன் வசம்' என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த இடைவெளிக்கு அவர் சொல்லும் பாசமான காரணத்தைக் கேளுங்கள். "பட அதிபர் அழகன் தமிழ்மணியின் பாசறையில், உதவி இயக்குனராக வளர்ந்தவன் நான். அதுதான் எனக்குத் தாய் வீடு. 'அன்புடன்' படத்திற்குப் பிறகு தாய் வீட்டிற்கு ஒரு படம் இயக்கிவிட்டுத்தான், வேறு வாய்ப்புகளை ஏற்பது என்ற பிடிவாதத்தோடு இருந்தேன். எனது உறுதியை உற்சாகப்படுத்துவதற்காகவே இந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறார் அழகன் தமிழ்மணி" என்கிறார். பாசில், விக்கிரமன் படங்களைப் போல குடும்பத்தோடு பார்க்கும் படங்களாகத் தமது படங்களும் இருக்க வேண்டும் என்று விரும்பும் பாலு, நடிகர்களுக்காகக் கதை பண்ணுவதில்லையாம். 'அன்பே உன் வசத்'தில் என்ன கதை சொல்கிறார்?

"காதல் இல்லாமல் வாழ்க்கையில்லை என்பதை மனிதன் உணர்ந்திருந்தாலும், அவனுக்குக் காதல் சீக்கிரம் கசந்து போய் விடுகிறது. வாழ்க்கையின் கடைசி மணித்துளி வரை காதலின் ஆத்மாவை எப்படிக் காப்பாற்றுவது? என்பதைச் சொல்லியிருக்கிறேன்" என்கிறார்.

பாடம் நடத்துற மாதிரி படம் இல்லாமல் இருந்தால் ஓ.கே!

- ஜெ.

• படத்தில் ரதி - அஷ்வின்



க்ளீவ்லேண்டிலிருந்து கீவாளூர்!

'கச்சேரிக்கு நடுவே கதை சொல்வதாவது...! நிகழ்ச்சி எப்படியிருக்குமோ!' என்ற சந்தேகத்துடன் தான் போய் உட்கார்ந்தேன். ஆனால் டி.எம். கிருஷ்ணா, சந்தேகங்களை சங்கீத வெள்ளத்தால் அகற்றித் தள்ளினார். வேறொரு உலகுக்கு அழைத்துப் போனார்... அனுபவத்தை விவரிக்க நானும் கதைதான் சொல்ல வேண்டும்.. எந்தக் கதையையென்று சொல்வது...? சங்கராபரணத்தை அவர் இழை இழையென்று இழைத்த நெடுங்கதையைச் சொல்வதா? கரஹரப்ரியாவைக் கொண்டு புதிது புதிதாகக் கோலம் போட்ட சித்திரக் கதையைச் சொல்வதா? சுருட்டியில் ஆரம்பித்து, கேதாரம், ஸாவேரி, பெஹாக் என்று பல்லவியில் ஆனந்த நடனப் பிரகாசனை அழைத்து அழைத்துக் குசலம் விசாரித்த தொடர்கதையைச் சொல்வதா...?



• டி.எம்.கிருஷ்ணா



• டெட்ராய்ட் நண்பரின் குழந்தையுடன் கிருஷ்ணா

கிருஷ்ணா எப்போது பாடினாலும் குதூகலத்தின் அக்மார்க் முத்திரை இருக்கும். ஆனால் 26.4.2003 அன்று க்ளீவ்லேண்டில் அவர் பாடிய கச்சேரி நெடுக உற்சாகச் சிற்றலைகளும், உல்லாசப் பேரலைகளும் எழுந்து எழுந்து விழுந்தன. கல்கி வைர விழாவோடு தமது இரண்டாவது குழந்தை அனந்தாவின் புதுவரவையும் அவர் கொண்டாடியதாகத் தோன்றியது.

ஒவ்வொரு உருப்படிக்கும் ஒரு சிறு விளக்கம் வழங்கியதுதான் 'இந்த, கல்கி வைர விழா கச்சேரி'யின் வித்தியாசமான அம்சம். ஆராதனைக் குழுவுக்கும் கிருஷ்ணாவுக்கும் நன்றி கூறி, அமரர் கல்கியின் நினைவுக்கு நிகழ்ச்சியைச் சமர்ப்பித்துத் தொடங்கினார் கல்கி தலைமை நிர்வாக அதிகாரி சங்கர் ராமசந்திரன். ஆசிரியர் சீதா ரவியும் சங்கர் ராமசந்திரனும் மாறி மாறி 'கதை சொன்னார்

தியாகராஜ ஆராதனையில் கல்கி க்ளீவ்லேண்ட் 2003



* அரங்கத்தில்...



கள்'. சில கதைகள் நிஜமாகவே கதைகளாக இருந்தன. பல கதைகள் கதையென்ற பெயரில் வெறும் நிகழ்ச்சி விவரிப்புத்தான். எனினும், அதிக நேரம் எடுத்துக் கொள்ளாததாலும், பாட்டுகளோடு தொடர்புடைய சம்பவங்கள் யாவுமே சுவாரஸ்யமானவையென்பதாலும், நிகழ்ச்சி சுவை குன்றாமல் தொடர்ந்தது.

ஸ்ரீரஞ்சனி வர்ணம் : முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தந்தை ராமசுவாமி தீக்ஷிதர் இயற்றிய இந்த வர்ணத்தில், சியாமா சாஸ்திரியும் முத்துசுவாமி தீக்ஷிதரும் அவர் சகோதரர் சின்னசாமி தீக்ஷிதரும்கூட பங்களித்துள்ளனர். இந்த விளக்கத்தைத் தொடர்ந்து கிருஷ்ணா பாட ஆரம்பிக்க, முல்லைவாசல் சந்திரமௌலி (வயலின்) பி. சிவராமன் (மிருதங்கம்), கார்த்திக் வெங்கட்ராமன் (கஞ்சிரா) ஆகியோர் ஆரம்பம் முதலே அமர்க்களமாகச் சேர்ந்து கொண்டனர்.

நன்னுபாலிம்ப : தியாகராஜரின் மகள் சீதாலக்ஷ்மம்மாவுக்குக் கல்யாணம்... பரிசாக ஸ்ரீராமன் படத்தைத் தூக்கிக் கொண்டு வருகிறார் தியாகராஜரின் சிஷ்யர் வாலாஜா பேட்டை வெங்கடரமண பாகவதர்... தூரத்திலிருந்து பார்த்தால் ஸ்ரீராமன் நடந்து வருவது போலிருக்கிறது. 'என்னை ஆதரிக்க நீ நடந்து வந்தாயோ ராமா...?' என்று அழைத்துப் பாடினாராம் தியாகராஜர். பாவபூர்வமாகப் பாடி, கற்பனை ஸ்வரங்களால் அழகு கூட்டினார் கிருஷ்ணா.

தேவி ப்ரோவ ஸமயமிதே : தஞ்சை சரபோஜி மன்னருடைய அரண்மனைக் கலைஞர்களை நோக்கிச் சவால் விட்டார் பொப்பிலி கேசவய்யா என்ற வித்வான். சியாமா சாஸ்திரியிடம் சரண் புகுந்தனர் அவைக் கலைஞர்கள். சாஸ்திரியோ காமாக்ஷியைச் சரணடைந்தார். 'தேவி ப்ரோவ ஸமயமிதே...' என்ற சிந்தாமணி ராக கீர்த்தனை, பிரார்த்தனையாக உதித்தது. சிந்தாமணி, சாஸ்திரி புதிதாகப் படைத்த ராகம். அதையே மறுநாள் பொப்பிலி முன்பாகப் பாடி வெற்றி கண்டார் சியாமா சாஸ்திரி.

கிருஷ்ணா, தேவி ப்ரோவ பாடினார்.

தேர் ஊர்ந்து வரும் காலப் பிரமாணத்தில் சியாமா சாஸ்திரியின் இஷ்ட தேவதை காமாக்ஷி வலம் வந்தாள்.

சமானமெவரு : 'உனக்குச் சமமானவர் யார் உளர்?...' என்று ராமரைப் பார்த்து தியாகராஜர் பாடும் இந்த கரஹரப்ரியா பாடலைக் கேட்டுவிட்டு கோபாலகிருஷ்ண பாரதி, 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா?' என்று ஆபோகியில் பாடியதாகத் தெரிகிறது. கோபாலகிருஷ்ண பாரதியின்

பாடலைக் கேட்டுவிட்டு தியாகராஜர் இயற்றியதாகவும் இருக்கலாம்.

எப்படியிருந்தாலும், உயர்ந்த உள்ளங்கள் ஒன்றை ஒன்று தூண்டிவிட்டன. சற்றே தெளிவில்லாத இந்த விளக்கம் ஆபோகியை எதிர்பார்க்க வைத்தது. ஆனால் கிருஷ்ணா பாடியது கரஹரப்ரியா! கதையை மறந்து கரஹரப்ரியாவில் லயிக்க வைத்தார்.

உன்னைத் துதிக்க அருள்தா : தமிழ்த் தியாகய்யா என்றழைக்கப்படும் பாபனாசம் சிவன் இயற்றிய முதல் பாடல். திருவாரூர் தியாகேசர் வீதி வலம்வரக் கண்டு எழுந்த தாம் இப்பாடல். கல்கியின் 'கள்வனின் காதலி, நாவலிலும் இடம் பெற்றுள்ளது. இந்த குந்தலவராளி பாடலைச் சற்று நிதானமாகப் பாடியிருந்தால் வார்த்தைகள் நன்றாகப் புரிந்திருக்குமே!

அக்ஷயலிங்கவிபோ : முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீவளூர் கோயிலில் நடை மூடியிருக்கக் கண்டு, இறைவனைத் துதித்து இப்பாடலைப் பாட, நவநீத ஹ்ருதயனான (வெண்ணெய் போல் உருகும் உள்ளம் உடையவன்) ஈசுவரன் கிருபையால் நடை திறந்தது.

தீக்ஷிதர் தரிசனம் பெற்றார்... கிருஷ்ணா நிரவல் செய்தார் 'ஸாது ஜனோ பேத சங்கர நவநீத ஹ்ருதய விபாவ..' ஆலாபனை, நிரவல் - ஸ்வரமென்று ஒரு மணி நேர சங்கரா பரணப் பொழிவின் இறுதியில் எழுந்த கரவொலி க்ளீவ்லேண்டிலிருந்து கீவளூர் வரை கேட்டிருக்குமோ!

தனியாவர்த்தனம் : கச்சிதம் கற்பனை வளம், கொஞ்சம் சஸ்பென்ஸ், தீர்மானமான முடிவு... என்று இது டிராக் டு கதை. பி.சிவராமனின் அனுபவத்துக்கு ஈடு கொடுத்தது கார்த்திக் வெங்கட்ராமனின் கஞ்சிரா. கிருஷ்ணாவின் கற்பனைக்கு லய வடிவம்.

ராகம் - தானம் - பல்லவி : இந்தக் கட்டத்தில் வயலினைப் பற்றி கொஞ்சம் கதை சொல்ல ஆரம்பித்த கல்கி குழு மிருதங் கத்தைப் பற்றிச் சொல்ல மறந்ததேனோ!

பல்லவி முடிந்தபோது பத்தரை மணி! பதினொரு மணிக்கு அரங்கின் கதவுகள் தானியங்கி முறையில் மூடிக் கொள்ளும். அப்புறம் அக்ஷயலிங்கவிபோ பாடினாலும் திறக்காது. ஆகவே கச்சேரி 'ஷார்ட் கட்'டில் ஓடி, கல்கியின் 'மாலைப் பொழுதினிலே' பாடலோடு நிறைவுற்றது.

கல்கி தீபாவளி மலரில் பெயரின்றிப் பாடல் வெளியானதும் அதைப் படித்து விட்டு, தமிழறிஞர் டி.கே.சி., 'தமிழுக்கு ஒரு புதுக் கவி கிடைத்து விட்டார்' என்று குதூ கலித்ததும், பின்னர் பாடல் எஸ்.வி.வெங்கட் ராமனால் இசையமைக்கப்பட்டதும், கல்கி யின் மகள் ஆனந்தியும், சதாசிவம் மகள் ராதாவும் அதற்கு நடனமாடியதும் (நடன அமைப்பு : வழுவூர் ராமைய்யா பிள்ளை, பாடியவர் எம்.எஸ்.சுப்புலட்சுமி). - மூத்த தலைமுறையினரிடையே பழைய நினைவு களைப் பெருக்கி, இளைய தலைமுறையின ரிடையே புதிய கேள்விகளை எழுப்பிற்று.

மூன்றரை மணி நேரக் கச்சேரிக்குப் பிறகு க்ளீவ்லேண்ட் சுந்தரம் பேசியது :

''இங்கே கிருஷ்ணா குழுவினர் பாடியதையா கேட்டோம்...? செம்மங்குடி அல்லவா பாடினார்! வி.வி. சுப்ரமண்யம் அல்லவா வயலின் வாசித்தார்! டி.கே. மூர்த்தி மிருதங்கம் வாசிக்க, நாகராஜன் அல்லவா கஞ்சிரா வாசித்தார்!..'' என அறு பதுகளின் கச்சேரிகளைப் படம் பிடித்தார்.

தொடங்கிய நாள் முதல் இசையோடு இழையும் கல்கி, இன்னொரு அறிவிப்பையும் செய்தது : க்ளீவ்லேண்ட் கச்சேரிகளில் உப யோகிக்க நான்கு தம்பூராக்கள் அன்பளிப்பு.

- திஷா ராவ்

''காலையில எழுந்ததும் மனசுக்கு இதமான எதையாவது பார்த்தால் நாள் பூராவும் மனசுல டென்ஷனே இருக்காதுன்னு சொல் றாங்களே?''

''அதுக்காகத்தான் சொல்றேன். நான் முழிக்கறதுக்கு முந்தி நீ எழுந்து எங்கேயாச்சும் தலைமறைவா போயிடு! ரெண்டு பேருக்கும் நல்லது!''

- கிரிஜா மணாளன்



நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : தாமதமான கல்யாணம் என்றாலும்கூட, திடீரென முடிந்தது நடிகை சௌந்தர்யாவின் திருமணம். அதுபோல தாமதமான சுபகாரியங்கள் படுவேகமாக நடந்தேறும். எடுத்த காரியங்கள் திட்டமிட்டபடி வெற்றியைத் தேடிக் கொடுக்கும்.

ரிஷபம் : பார்த்திபன் - சீதா, கமல் - சரிகா போன்று கணவன் மனைவி பிரச்னை உங்களுக்கு வராது. இது மட்டுமின்றி தெளிவான மனநிலை, உடல் ஆரோக்கியம், தெய்வ பலம், தாராளமான பணவசதி, எதிர்பாராத பயணம் என உங்களைத் திக்கு முக்காட வைக்கப் போகிறது.

மிதுனம் : ராணி மேரி கல்லூரி விவகாரத்தில் கல்லூரிக்குக் கிடைத்த வெற்றியைப்போல், நீங்களும் சிக்கலான பிரச்னைகளைத் திறம்பட சமாளித்து வெற்றி காண்பீர்கள். அலுவலகத்தில் நல்ல பெயர் கிடைக்கும். சிலர் வெளிநாடுகளுக்குப் போகும் வாய்ப்பும் ஏற்படும்.

கடகம் : குறுகிய காலத்திற்குள் பல லட்சம் வாடிக்கையாளர்களைப் பெற்று, தொழிலில் முன்னேறி வருகிறது ரிலையன்ஸ் செல்போன் நிறுவனம். அது போல் உங்கள் தொழிலிலும் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் நிர்வாகத்தில் சாமர்த்தியமும், திறமையும் பளிச்சிடும்.

சிம்மம் : கஜோல் அஜய்தேவ்கனுக்கு அழகான பெண் குழந்தை பிறந்திருக்கிறது. அதேபோல் உங்கள் வீட்டிலும் புதிய வரவுகள் வரக்கூடும். குடும்பத்தில் சந்தோஷத்திற்குப் பஞ்சமிருக்காது.

கன்னி : அடுத்த நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, அராஜக வெற்றியடைந்த அமெரிக்கா போல் அல்லாமல் நேர்மையான வெற்றி தேடி வரும். எல்லா விதத்திலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். கல்வி, கேள்விகளில் ஆர்வம் அதிகரிக்கும்.

அக்னிசர்மா பக்கம்

மே 7 முதல் 13 வரை

துலாம் : கிரிக்கெட் விளையாட்டில் மட்டுமல்ல. மும்பையில் ஹோட்டல் துவங்கி அதையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறார் சச்சின். அதே போல் ஹோட்டல், லாட்ஜ், உணவுப் பொருள் உற்பத்தி செய்பவர்களுக்கு, அமோகமான வாரமாக இருக்கும். புதிய வாகனம், வீடு வாங்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

விருச்சிகம் : எத்தனை எதிர்ப்புகள், எத்தனை வில்லன்கள்! அத்தனையையும் சமாளித்து நிமிர்ந்து நிற்கும் 'அண்ணாமலை'யைப் போல், நீங்களும் சிக்கலான பிரச்னைகளை உங்கள் புத்திசாலித்தனத்தால் எதிர் கொண்டு வெற்றி பெறுவீர்கள்.

தனுசு : அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்குப் பயந்து மிரண்டு போயிருக்கும் சிரியாவின் நிலை உங்களுக்குக் கிடையாது. இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள் மறையும். பல தடைகளைத் தாண்டி பதவி உயர்வு உங்களை வந்தடையும்.

மகரம் : பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, நுழைவுத் தேர்வு முடிவுகளை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு நம்பிக்கையான வாரம். குடும்பத்துடன் உல்லாசப் பயணம், புனித யாத்திரை செல்வதற்கான சந்தர்ப்பம் கூடி வரும்.

கும்பம் : கமல்ஹாசனின் சமீப படங்களுக்கு இசை அமைக்காத இளையராஜா, மீண்டும் சண்டியர் படத்தில் இசை அமைக்கிறார். அதேபோல் பிரிந்திருந்த நண்பர்கள், உறவினர்கள் மீண்டும் இணைவார்கள். சொத்து விவகாரங்களில் சாதகமான சூழ்நிலை உருவாகும்.

மீனம் : விருப்பம் இல்லாவிட்டாலும் அரசியல் கட்சிகள் கூட்டணி வைத்துக் கொள்வதைப் போல், உங்களுக்கு ஆர்வம் இல்லாவிட்டாலும் தங்கம், வெள்ளி, நவரத்தினங்களின் ஆபரணச் சேர்க்கை தேடி வரும். பெண்களுக்கு அனுகூலமான வாரம் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

பிரதமர் வாஜ்பாய் (கடகம்)
திறமை இன்னும்
பளிச்சிடப் போகுதாமே!





அட்மிஷன்

"அம்மா" என்றபடி ஓடி வந்து வனிதாவைக் கட்டிக் கொள்கிறது அந்த மூன்று வயதுக் குழந்தை. சட்டென்று முகத்தில் கொஞ்சம் கோபத்தைக் கூட்டிக் கொள்கிறாள் வனிதா. "செல்லம் கொஞ்சுவதெல்லாம் இருக்கட்டும். இது என்ன?" என்று காய்கறிக்கூடையில் இருக்கும் ஒரு பொருளைக் காட்டுகிறாள்.

"தக்காளி" என்கிறது குழந்தை. இடிந்து போய்விடுகிறாள் வனிதா. கணவனைக் கூப்பிட்டு முறையிடுகிறாள்.

"என்னங்க. இதைக் காட்டி என்னன்னு கேட்டா, இவ தக்காளின்னு சொல்றா" என்கிறாள்.

அப்படி எதைக் காட்டினாள்?

கணவன் அந்தத் திசையை நோக்குகிறான்.

ஒரு நிமிடம் குழம்பிப் போகும் அவன் அடுத்த நிமிடம் விபரீதத்தை உணர்ந்து கொள்கிறான். "இது என்னன்னு கேட்டா தக்காளின்னு சொல்லக்கூடாதும்மா. டொமாடோன்னு சொல்லணும்" என்கிறான்.

அழாக்குறையாக வனிதாவும் "ஒரு மாசமா இதையெல்லாம் படிச்சுப் படிச்சு சொன்னேனே. அத்தனையும் வேஸ்ட்டா?" என்று புலம்புகிறாள்.



அவஸ்தைகள்!

அவளும் என்னதான் செய்வாள்? மூன்று தெரு தள்ளியிருக்கும் பிரபல கான்வென்டில் எப்படியாவது தன் மகளைச் சேர்த்துவிட வேண்டும் என்ற ஆசை அவளுக்கு. ஆனால் டக்கென்று அவளை எல்.கே.ஜி.யில் சேர்த்துக் கொண்டுவிட மாட்டார்கள். நேர்முகத் தேர்வு ஒன்றில் அந்தக் குழந்தை தேறியாக வேண்டும்.

எல்.கே.ஜி. என்பது பள்ளியின் ஆரம்பக் கட்டம் (சொல்லப்போனால் ஐந்தாம் வயதில் - அதாவது முதல் வகுப்பில்தான் - முறையான பள்ளிப் பருவம் தொடங்க வேண்டும் என்கிறார்கள் பல மனவியல் நிபுணர்கள்).

பள்ளியில் சேர்க்கும்போதே அந்தக் குழந்தைகளைப் பார்த்து "வாரத்தில் உள்ள நாட்களின் பெயர்களைச் சொல்லு?" என்றோ, "ஏ, பி, சிக்கு அடுத்த எழுத்து என்ன?" என்றோ கேட்பது என்ன நியாயம்? இதையெல்லாம் சொல்லித்தரத் தானே பள்ளியில் சேர்க்கிறோம்?

எப்படியோ அட்மிஷன் என்றாலே அவஸ்தைதான் என்றாகி விட்டது. முன்பெல்லாம் பெருநகரங்களில் சில குறிப்பிட்ட பள்ளிக் கூடங்களில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்களை வாங்குவதே ஒரு பெரும் சாதனையாக இருந்தது. அதாவது, குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையில் மட்டுமே விண்ணப்பங்களை அளிப்பது வழக்கம் என்பதால் பெற்றோர்கள், வரிசையில் ஓரிரு நாட்கள் தொடர்ச்சியாக நின்று விண்ணப்பங்களை வாங்கிச் செல்வார்கள்.

இப்போது அப்படியில்லை. எவ்வளவு விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் தாராளமாகத் தருகிறார்கள். பெற்றோர்கள் படும் அவஸ்தையைக் குறைப்பதற்காக அல்ல இந்த ஏற்பாடு. விண்ணப்பங்கள் அதிகமாக விற்க விற்க, அதிக லாபம் ஆயிற்றே!

"வெறும் இரண்டு பக்கங்கள் கொண்ட நுழைவு விண்ணப்பத்துக்கு நூற்றி ஐம்பது ரூபாய் கட்டணம் பெற்றுக் கொள்கிறார்கள். இது பகல் கொள்ளை. போதாக்குறைக்கு நுழைவுத் தேர்வு என்ற ஒன்று வேறு. அதற்கு வேறு தனியாகப் பணம் கட்டியாக வேண்டும்'' என்கிறார் ஒரு தந்தை.

தவிர, நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்குத்தான் அட்மிஷன் என்றில்லை. "இவர்களுக்குச் சமமான எண்ணிக்கையில், சில சமயம் அதைவிட அதிகமாகக் கூட, சிபாரிசுக் கடிதங்கள் மூலம் வருபவர்களுக்கும் கொல்லைப்புறமாக பள்ளியில் அனுமதி கிடைத்து விடுகிறது" என்று கொந்தளிக்கிறார் மற்றொருவர்.

'குழந்தைக்குத் தனியாக சில தேர்வுகள் நடத்திய பிறகு, பெற்றோருக்கும் சில தேர்வுகளை வைக்கின்றன சில பள்ளிகள். சி.ஏ., ஐ.ஏ.எஸ். போன்ற தேர்வுகளை அலட்சியமாக எழுதி முடித்த தந்தைக்குக் கூட, இந்தத் தேர்வுகளை எதிர்கொள்வதில் கிலிதான்.

"சார் எங்கள் மகளைச் சேர்த்திருக்கும் பள்ளியில் நுழைய வினோதமான, எழுதப்படாத ஒரு சட்டம் உண்டு. குழந்தையின் அப்பா அம்மா இருவருமே குறைந்தது பட்டதாரிகளாக இருக்க வேண்டும்! இதை உறுதி செய்துகொண்ட பிறகுதான் குழந்தைகளை அனுமதிக்கிறார்கள். அப்போதுதான் குழந்தைக்கு வீட்டில் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முடியுமாம்! அப்படி வீட்டிலும் பெற்றோர் கற்றுக் கொடுத்தால்தான் இவர்களால், "எங்கள் பள்ளியின் ரிசல்ட்

சென்ட் பர்ஸன்ட்' என்று பீற்றிக் கொள்ள முடியும்'' என்றார் ஒரு பெண்மணி.

பள்ளிக்கூடத்திலிருந்து மூன்று கிலோ மீட்டருக்குள் குழந்தையின் வீடு இருக்க வேண்டும் என்பதும் ஒரு நிபந்தனை. சில பள்ளிகளில் குழந்தைகளைச் சோதிக்கும் போது பெற்றோர் அருகில் இருக்கக்கூடாது என்ற கட்டுப்பாடும் உண்டு. புத்திசாலிக் குழந்தைகள்கூட, புதிய சூழலில் பெற்றோர் அருகில் இல்லாத நிலையில் தவறான பதில்களைக் கூறவோ, பதிலே கூறாது மௌனம் சாதிக்கவோ வாய்ப்பு அதிகம். அப்படி இருக்க, இதையே காரணமாக்கி அந்தக் குழந்தைக்கு அனுமதி மறுப்பது அநியாயம் இல்லையா?

பள்ளியில் சேர்க்க தேர்வுகளை நடத்தக் கூடாது என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருப்பது எவ்வளவு பெற்றோருக்குத் தெரியும்?

பள்ளியில் சேரும்போது டெபாசிட் என்று பெற்றுக் கொள்கிறார்கள். இதில் சிலர் 'இந்த நன்கொடை, பள்ளியை விட்டு குழந்தை விலகும்போது திருப்பியளிக்கப் படும்' என்பார்கள். நடைமுறையில் இது செயல்படுத்தப் படுவதில்லை. அப்படியே திருப்பிக் கொடுத்தாலும் பல பள்ளிகள் அதற்கு எந்த வட்டியும் தருவதில்லை. பெற்றோர்கள் தாங்களாகப் போய் "என் பையன் ப்ளஸ் டூவை முடித்துவிட்டானே. உங்க ஸ்கூலில் எல்.கே.ஜி. சேரும்போது கட்டிய வைப்புத் தொகையைத் திருப்பிக் கொடுங்க'' என்று கேட்டால் உடனே கொடுத்துவிடுவதில்லை. "இவ்வளவு காலம் உங்கள் பையன் படித்த பள்ளிக் கூடத்துக்கு இதை நீங்கள் நன்கொடையாகத் தரக் கூடாதா?'' என்று சென்டிமென்டாக ஒரு கேள்வியைக் கேட்பார்கள். இதில் விழுந்து விட்டால் அந்தத் தொகைக்கான ரசீதை நன்கொடை என்று பெயரிட்டுத் தரமாட்டார்கள். "அபராதத் தொகை" என்பதுபோல் இதைக் கணக்கில் காட்டுவார்கள். நன்கொடை என்று வாங்கினால், அதில் சிலவகை கணக்குச் சிக்கல்கள் உண்டு.

சில வங்கிகளில் மிகவும் மனிதாபிமானத்தோடு ஒரு காரியத்தைச் செய்கிறார்கள். ஏப்ரல் மாதத்தில்தான் வேறு இடத்துக்கு ஊழியர்களை மாற்றுகிறார்கள். அதாவது தங்கள் குழந்தைகளைப் புதிய கல்வி ஆண்டில், புதிய பள்ளிகளில் சேர்ப்பதற்கு, இந்த நடைமுறை வசதியாக இருக்கும் என்பது நிர்வாகத்தின் எண்ணம். ஆனால் நடைமுறை வேறாக இருக்கிறது.

'ஜனவரி மாதத்திலேயே இங்குள்ள பள்ளிகளில் இடங்கள் எல்லாம் நிரம்பிவிடுகின்றன. அதற்குள் இந்த விண்ணப்பத்தாள், நுழைவுத் தேர்வெல்லாம் முடிந்துவிடுகின்றன. அடுத்த கல்வியாண்டின் முதல் தவணைக் கட்டணத்தை கோடை விடுமுறை முடிவதற்கு முன்பே கட்டிவிட வேண்டும் என்கிறார்கள்.

ஆனால் புதிதாகச் செல்லவிருக்கும் இடத்தில் (முக்கியமாக வடக்கே என்றால்) அங்கு நுழைவுத் தேர்வு ஏப்ரல் இறுதியில்தான் இருக்கும். மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் இந்தியா முழுவதுமே இந்த நுழைவுத் தேர்வுகள் மே-ஜூனில்தான் நடைபெறுகின்றன. இந்த நிலையில், புதிய வகுப்பில் இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகமும் இருப்பதால், முதல் தவணைக் கட்டணத்தைச் செலுத்திவிட வேண்டியிருக்கிறது. இதை எக்காரணம் கொண்டும் பள்ளிகள்

பெற்றோருக்கு சில அட்வைஸ்கள்!

* எந்தப் பள்ளியில் நுழைவுத் தேர்வு நடக்க இருக்கிறதோ அந்தப் பள்ளிக்கு குழந்தையை முன்னதாகவே ஓரிருமுறை அழைத்துச் செல்லுங்கள். தேர்வின்போது புதிய சூழலில் தோன்றும் படபடப்பு உணர்வை இது குறைக்கும்.
* குறிப்பிட்ட கல்வி நிறுவனத்தில் (அது பள்ளியோ கல்லூரியோ) சேர்ந்தால்தான் எதிர்காலம் உண்டு என்று முடிவெடுப்பதே தவறு. அப்படிப்பட்டக் கருத்தை உங்கள் மகனிடமோ மகளிடமோ திணிப்பது மேலும் தவறு. ஒருவேளை அந்தக் கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்கவில்லையென்றால் அது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும். நிராகரிப்பு உணர்வு போதாதென்று, வருங்கால பயத்தை வேறு ஏன் ஊட்ட வேண்டும்?
* தேர்வில் எதுபோன்ற கேள்விகளைக் கேட்பார்கள் என்பதை அந்தக் கல்வி நிறுவனத்தில் ஏற்கெனவே படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது.
* எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு குறித்து சில ஒத்திகைகள் பார்க்கலாம். கேள்விகளை நீங்கள் கேட்பதைவிட,



தெரிந்த வேறு யாரையாவது விட்டுக் கேட்க வைத்துப் பயிற்சி அளிக்கலாம்.

* தேர்வில் அவன் திருப்திகரமாகச் செய்யவில்லையென்றால், திட்டு அடி போன்றவற்றில் இறங்காதீர்கள். இது இல்லையென்றால் வேறு பள்ளிக்கூடம் (கல்லூரி) என்று மனத்தைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

* சக்திக்கு மீறி பெரும் கடன் வாங்கியெல்லாம் குறிப்பிட்ட கோர்ஸ்களில் சேர்க்க வேண்டுமென்பதில்லை. இந்தப் படிப்பை இப்போது படித்தால்தான் நாலைந்து வருடங்கள் கழித்து எதிர்காலம் என்றெல்லாம் கணிக்க முடியாது. தவிர, எந்தப் படிப்பிலும் சிறந்து விளங்குபவர்களுக்கு எதிர்காலம் உண்டு என்பதுதான் காலம் கூறும் பாடம்.

திருப்பித் தருவதில்லை என்றார் ஒரு நண்பர்.

பள்ளியில்தான் என்றில்லை. கல்லூரியில் சேருவதிலும் பல்வேறு அவஸ்தைகள். இதுவரை பொறியியல் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை, ஒற்றைச் சாரளமுறையில் இருந்தது. சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்லூரிகளுக்குச் சில சலுகைகளை அளிக்கும் வகையில், உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு, இப்போது அந்த நடைமுறையும் ஆட்டம் கண்டுவருகிறது. மொத்தத்தில் கடைசிவரை நிரப்பப்படாமலேயே சில பொறியியல் சீட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் காலியாகவே உள்ளன என்று கூறினாலும், நகர்ப் புறங்களிலும், ஓரளவு நல்ல பெயரெடுத்த கல்லூரிகளிலும் இடம் கிடைப்பது இப்போதும் கடினம்தான்.

போதாக்குறைக்கு டொனேஷன் வாங்கிக் கொண்டு (சில லட்சங்கள்!) சேர்ப்பதை பொது நுழைவுத் தேர்வு நடப்பதற்கு முன்பே தொடங்கிவிடுகின்றன தனியார் கல்லூரிகள். அதாவது "பொதுத் தேர்வில் தேர்வு பெறாவிட்டால் டொனேஷன் கொடுத்து சேர்க்கலாம்" என்ற வாய்ப்புக் கூட பெற்றோருக்கு மறுக்கப்படுகிறது. 'ஒரு வேளை பொதுத் தேர்வில் நம் மகன் அதிக மதிப்பெண்கள் பெறாவிட்டால்?' என்ற பயத்தை ஏற்படுத்தி பணம் பண்ணும் உத்தி இது.

தவிர மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றோமா என்பதைத் தெரிந்து கொள்ளும் தேதி, வழக்கமான கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்ஸி என்று சேருவதற்கான கடைசித் தேதி, இப்படி பல தேதிகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக அமைந்து, ஒரு சீரான, தெளிவான முடிவை எடுக்கவிடாமல் செய்கின்றன.

இட ஒதுக்கீடு முறைபற்றி ராயப்பேட்டையைச் சேர்ந்த அநிருத்தன் என்ற வாசகர் எழுதிய கடிதம் நம்மை உலுக்கியது.

"இட ஒதுக்கீடு முறையினால் கசக்கி எறியப்பட்ட ஒரு சாதாரண மேல்தட்டு வகுப்பைச் சார்ந்தவன் நான். நான் ஒரு குறிப்பிட்ட சாதியை சார்ந்தவன் என்பதாலேயே எனக்கு வேண்டிய தகுதியிருந்தும், விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்காமல், போனவன். அனைத்துக் கல்வி மற்றும் அரசு வேலைகளில் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் சாதி பேதங்கள் ஒழிந்திருக்கிறதா என்றால் இல்லை. தமிழகத்தில் அதிக அளவுக்கு 'ரிவர்ஸ் டிஸ்கிரிமினேஷன்' எனப்படும் மாற்று அடக்குமுறையில் பாதிக்கப்படுபவர்கள் மேல்தட்டு ஜாதியினர். இட ஒதுக்கீடு மூலமாக, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை சுலபமாக, குறைவான தகுதி இருந்தாலும் மற்ற பிரிவினர் அடைந்துவிடுகின்றனர். தகுதியிருந்தும் வேலை மற்றும் கல்வி கிடைக்காதவர்களுக்கு என்னதான் வழி?" என்கிறது அந்தக் கடிதம்.

படிக்கும் கல்வி வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக இருக்கிறதா? என்பதுபற்றி விவாதங்கள் நடக்கின்றன. பாடத் திட்டங்கள் மாற்றப்பட வேண்டுமா இல்லையா என்ற காரசாரமான பட்டிமன்றங்களுக்கும் குறைவே இல்லை. ஆனால் அதைவிட முக்கியமாக இந்த அட்மிஷன் ஜுரத்தை 'சார்ஸ்' போல எண்ணி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

- ஜி.எஸ்.எஸ்.


மாடல் : **வித்யா**

அட்டைப்படம் : **ஸ்ரீஹரி**




ஜில்லு மல்லு

—கதிர்



ஹாய்...எப்படியிருக்கு என்னோட பெட்?
உன்ன மீறி யாரு வந்துடப் போறாங்கன்னு நாய் வளர்க்கிற?
காரணம் எதுக்கு? நம்ம அன்போட ஒரு அடையாளமாகத் தான் நாய் வளர்க்கிறோம்.
அப்படி என் அம்மா நினைச்சிருந்தா எனக்குப் பதிலா ஒரு நீர் யானையை இல்ல வளர்த்திருப்பாங்க.
சரி, அத விடு. இவனுக்கு என்ன பேர் வச்சிருக்க?
இவனோட சைஸைப் பார்த்தா 'மல்லு'ன்னு பேர் வச்சா பொருத்தமா இருக்கும்ல.
அப்போ கடிக்குமே பரவாயில்லையா?
உன் கடிக்கு நாய்க்கடி எவ்வளவோ தேவலைப்பா!
'யூஸ்லெஸ்! நாயும் பூனையும் போல சண்டை போட்டுக்கறாங்க!


கல்கி
11.5.2003
இதழுடன்
இலவச இணைப்பு
ரிலாக்ஸ் மனமே
ரிலாக்ஸ்!



சிலர் நகத்தைக் கடித்துத் துப்புவதைப் பார்த்தால் விரல்களே இல்லாமல் போய்விடுமோ என்ற பயம் ஏற்படும். வேறு சிலர் நரசிம்மாவதாரம் எடுப்பார்கள். இன்னும் சிலருக்கோ உடலெல்லாம் நடுங்கும். சிலர் மனச்சோர்வு ஏற்பட்டு மீளமுடியாமல் தவிப்பார்கள். இன்னும் சிலருக்கோ இரத்தக் கொதிப்பு அதிகமாகி ஹார்ட் அட்டாக்கே வந்து விடும்!

இத்தனைக்கும் காரணம் டென்ஷன்! டென்ஷன்! இந்த டென்ஷனை ஓரங்கட்டிவிட்டு மனசை எப்படி ரிலாக்ஸ் பண்ணலாம்? உங்களுக்கு உதவத்தான் இந்த இலவச இணைப்பு.

தாழ்வு மனப்பான்மை

டென்ஷனை உண்டாக்கி, வாழ்க்கையை நரகமாக்குவதில் தாழ்வு மனப்பான்மைக்கும் ஒரு முக்கிய பங்குண்டு. கொஞ்சம் நீளமான மூக்கு, பல் கொஞ்சம் வெளியே நீட்டிக் கொண்டிருப்பது. இளமையில் நரை, இப்படி உடல் சம்பந்தப்பட்ட குறைகள், தாழ்வு மனப்பான்மைக்குக் காரணமாக இருக்கக் கூடும். நம்மால் மாற்ற முடிந்த குறைகளை மாற்றிக் கொள்வது சரியான ஒரு தீர்வாக அமையும்.

உதாரணமாக, பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்வதன் மூலமாகவோ, தலைக்கு டை அடித்துக் கொள்வதாலோ, பல்லில் க்ளிப் மாட்டிக் கொள்வதாலோ மேற்கூறிய குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

எல்லாக் குறைபாடுகளையும்



“டென்ஷன் ஆகாதீங்க! அதிகமா நான் எதிர்பார்க்கமாட்டேன்! மீட்டருக்கு மேல பத்து ரூபா போட்டுக் கொடுங்க, போதும்!”

மருத்துவரீதியாக தீர்த்துக் கொள்ள முடியாதுதான். தவிர உடலில் உள்ள குறையின் காரணமாகத்தான் தாழ்வு மனப்பான்மை ஏற்படவேண்டும் என்பதும்



''கைராசிக்கார
சைக்கியாட்ரிஸ்டுன்னீங்க. ஆனா
வெளிய வர நோயாளிகளெல்லாம்
மனபாரத்தோட வர மாதிரியிருக்கே.''
''நோய் குணமாயிடுது — ஆனா
ஃபீஸைக் கொடுத்ததும் திரும்பவும்
இப்படி ஆயிடறாங்க.''

போன்ற சமயங்களில் மன உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, தாழ்வு மனப்பான்மை கொள்ளக்கூடாது.

"சூழ்நிலைகளைப் பொறுத்தா நம் சுக துக்கங்கள் அமைகின்றன?'' அல்ல, சூழ்நிலைகளை நாம் எப்படி ஏற்றுக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் அமைகின்றன. ஒரு பணக்காரன் இரண்டு பேருக்கு, தலா பத்து ரூபாய் என்று தர்மம் செய்வதாக வைத்துக் கொள்வோம். "அட பத்து ரூபாயா!" என்று ஒருவன் பேரானந்தம் கொள்ளலாம். "சே,' வெறும் பத்து ரூபாய்தானா?''என்று இரண்டாமவன் வெறுப்படையலாம். ஆக, கிடைத்த பணத்தைவிட அதை அவர்கள் எந்தக் கோணத்தில் பார்க்கிறார்கள் என்பதுதான் அவர்களது சந்தோஷத்தையோ, வருத்தத்தையோ நிச்சயிக்கிறது, இல்லையா? எனவே உடல் குறைகளையோ, மற்ற குறை

களையோ நாம் மனதளவில் எப்படி அணுகுகிறோம் என்பதுதான் முக்கியம்.

சரி மனத்தளவில் எப்படி அணுகுவது? இதோ சில டிப்ஸ்:

நண்பர்கள் வட்டத்தை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது பாதுகாப்பாக உணர்வீர்கள்.

எந்த வேலையைச் செய்தாலும் அக்கறையாக முழுத் திறமையைக் காட்டி செய்யுங்கள். அது உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும்.


உங்களை யாராவது உற்றுப்பார்த்தால், உங்களது நீண்ட மூக்கையோ, முகத்தில் உள்ள பெரிய மச்சத்தையோ பார்ப்பதாக ஏன் நினைக்க வேண்டும்? அழகான சிகையலங்காரத்தையோ, அகலமான கண்களையோ, உங்கள் திறமையையோ அவர்கள் ரசிப்பதாக நினைத்துக் கொள்ளுங்களேன்.

வாழ்க்கையை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். "இது என் வாழ்க்கை. இதன் சுக துக்கங்களைத் தீர்மானிக்க வேண்டியது நான்தான்" என்ற உறுதியுடன் பிரச்னைகளை எதிர்கொள்ளுங்கள்.

தாழ்வு மனப்பான்மைக்குக் காரணம் ஏதாவது தீவிர மனப்பிரச்னை என்றால், மனவியல் மருத்துவரை நாடுவதற்குத் தயங்கவேண்டாம்.

விமர்சனங்கள்.

பலராலும் தன்னைப் பற்றிய விமர்சனங்களைத் தாங்க முடிவதில்லை. ஆனால் சிலர் அதை சீக்கிரமே மறந்து விடுவார்கள். சிலருக்கு அந்தக் கொதிப்பு அடங்க வெகு நேரமாகும். "என்னைப் பற்றி இப்படிச் சொல்லி விட்டானே" என்று தொடங்கி, "இவன் ரொம்ப யோக்கியமாக்கும்'' என்று வளர்ந்து. இந்த



எண்ணங்களே ஆக்கிரமித்துக் கொண்டு ஒரு வழி பண்ணும்.

நியாயமான விமர்சனம் என்றால் அதை ஏற்றுக் கொள்வதும், நம்மைத் திருத்திக் கொள்வதும்தான் நல்லது. அதே சமயம் அனாவசிய விமர்சனங்கள் நம்மை பாதிக்க ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அலட்சியப் படுத்திவிட வேண்டும.

உடல் பருமனான ஒருவர் அவசரமாக ஒரு இடத்துக்குச் செல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்

வோம். வேகமாக ஓடிச் சென்றால், சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருக்கும் பேருந்தில் ஏறிக் கொண்டு விடலாம். மெதுவாக நடந்தாலோ அந்தப் பேருந்து கிளம்பி விடும். இந்த நிலையில் "நாம் ஓடினால் யாராவது கேலியாகச் சிரிப்பார்களோ?" என்று நினைத்துக் கொண்டு மெதுவாக நடந்தால் காரியம் குட்டிச் சுவர்தான்.

அனாவசியமாக உங்களை சிலர் கேலி செய்கிறார்கள் என நினைக்கிறீர்களா? அவர்களின் நோக்கம் நம்மைப் புண் படுத்துவதுதான். அவர்களது கிண்டல் மொழிகளில் நாம் இடிந்து போனால், அவர்களின் நோக்கத்தை நாமே பூர்த்தி செய்துவிடுவதுபோல் ஆகிறதே. இதற்கு இடம் கொடுக்கலாமா? புன்னகையுடன் அந்த விமர்சனங்களை ஒதுக்கிவிட்டு, நம் வேலைகளில் கவனம் செலுத்துவதுதானே நமக்கு வெற்றி!

காலை நேர டென்ஷன்கள் குறைய...

பொதுவாகவே திட்டமிட்டுச் செயல்படுத்துவது கடைசி நிமிட டென்ஷன்களைக் குறைக்க உதவும்.

வேலைக்குப் போகும் பெண்மணிகளைக் கேட்டுப் பாருங்கள். டென்ஷனின் உச்சகட்டமே, காலை வேளையில் உருவாவதுதான் என்பார்கள். அதைச் சமாளிக்க என்ன வழி என்று சிலரைக் கேட்டபோது கிடைத்த யோசனைகள், எந்தப் பெண்மணியும் அறியாதவை அல்ல இவை. ஆனால் இவற்றை எந்த அளவுக்கு நினைவில் கொண்டு கடைப்பிடிக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க பட்டியலிடுவது உதவும்.

இரவில் சீக்கிரம் தூங்கி காலையில் சீக்கிரம் எழுவதைப் பழக்கமாக்கிக் கொள்ள

வேண்டும்.

எழுந்தவுடனேயே குளித்துவிட்டால் வேலைகள் அடுத்தடுத்து சீக்கிரம் நடக்கும். தேவைப்பட்டால் கிளம்புவதற்கு முன் முகத்தைக் கழுவிக் கொண்டு ஒப்பனை செய்து கொள்ளலாம்.

முதல் நாளே காய்கறிகளை நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

மறுநாள் அணிந்து கொள்ளவேண்டிய உடை என்ன, என்று தீர்மானித்து, அதை முதல் நாள் இரவே எடுத்துத் தயாராக வைத்துக் கொள்ளலாம்.

பேருந்தில் செல்பவர்கள் அதற்கான சில்லறையைத் தயாராக முன்னமேயே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகள் பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய புத்தகங்கள், பென்சில் போன்ற வற்றை முதல் நாள் இரவே எடுத்து வைத்து விட வேண்டும்.

சமையலறையில் ஒவ்வொரு சாமானும் அதற்குரிய இடத்தில் இருந்து விட்டாலே பாதி டென்ஷன் குறையும்.

அதேபோல் சமையலறைச் சாமான்கள், நாம் உபயோகப்படுத்தும் சிறு பாட்டில்கள் மற்றும் டின்களில் பொருள்கள் குறைந்திருந் தால் முதல் நாளே அவற்றை நிரப்பிக் கொள்ள வேண்டும்.

கணவன் அல்லது இதர உறவினர்கள் காலை வேளையில் உதவிகள் செய்யுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

காலை நேரத்து டென்ஷன்களுக்கு நேரமின்மை ஒரு காரணமென்றாலும், அதைவிட முக்கியக் காரணம் அவரவரு டைய இயற்கையான சகிப்புத்தன்மையின் அளவும்தான். 'எதையும் சீக்கிரம், அதே சமயம் பதற்றப்படாமல் செய்வேன்' என்ற வைராக்கியத்தை வளர்த்துக் கொண்டால், காலை நேர டென்ஷன் தானாகக்


குறையும்.



வரங்களை எண்ணிப்பாருங்கள்!

பெரும்பாலும் நமக்கு, அது இல்லையே, அடுத்த வீட்டுக்காரரிடம் இருக்கிறதே, என்பது போன்ற ஏக்கத்தில் தான் மன பாரம் அதிகமாகிறது. டென்ஷன் உண்டாகிறது –

மனிதப் பிறவி என்பது ஒரு பெரும் பேறு. அதில் நமக்குக்



கிடைத்திருக்கும் வசதிகளையும் நல்வாய்ப்புகளையும் மறந்துவிட்டு, இல்லாததை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தால் எப்படி?

ஒரு கிராமத்தானுக்கு ஒரு பெரும் கவலை. ஒரு விதத்தில் நியாயமான கவலையும் கூட. அவன் வீடு மிகவும் சிறியது. அதில் மனைவி, மூன்று குழந்தைகள், பெற்றோர்கள் என்று அத்தனை பேரும் வசிக்க வேண்டிய கட்டாயம். அந்தக் கிராமத்துக்கு வந்திருந்த ஒரு முனிவரிடம் போய், தன் பிரச்னையைக் கூறி நிவாரணம் கேட்டான். அதற்கு அந்த முனிவர் "இன்னும் மூன்று நாட்களுக்கு உன் ஆடு மாடுகளையும் உன் வீட்டுக்குள்ளேயே இருக்க வை" என்றார். திகைத்துப் போனான் கிராமத்தான். என்றாலும், முனிவர் கூறியதை

எப்படிக் கேட்காமல் இருப்பது? அப்படியே செய்துவிட்டு மூன்று நாட்களுக்குப் பின் அந்த முனிவரிடம் மீண்டும் போனான். "உன் ஆடுமாடுகளை இப்போது வெளியே கட்டு" என்றார் அவர். உடனடியாக அதைச் செய்து முடித்தான். பிறகு முனிவரைப் பார்த்தபோது "ஐயா, எங்கள் ஏழு பேருக்கும் இப்போது இடப் பிரச்னையே இல்லை. வீடு விசாலமாக இருக்கிறது" என்றான்.

நம்மில் பலரும் கூட இப்படித்தான். நம் வாழ்க்கையில் உள்ள வரங்களை எண்ணிப் பார்க்காமல், "என்ன வாழ்க்கையோ?" என்று அலுத்துக் கொண்டும், "எனக்கும் அதிர்ஷ்டத்துக்கும் வெகு தூரம்" என்று சுயபச்சாதாபப் பட்டுக் கொண்டும், நம் வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்கிறோம்.

"உனக்கும் கீழே உள்ளவர் பாரு, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு" என்ற வைர வரிகளை மறக்கலாமா?

இறை நம்பிக்கையும் பிற நம்பிக்கைகளும்.

இறைவன் இருக்கிறானா? என்ற ஆன்மிகத் தேடல் ஒரு புறம் இருக்கட்டும். நமக்கு மேலே உள்ள ஒரு சக்தியின் மீது நம்பிக்கை வைக்கும்போது, அதில் ஏற்படும் மன நிம்மதியே தனிதான்.

முக்கியமாக நம் கண்ணெதிரே ஒரு அநியாயம் நடந்தும் நம்மால் ஏதும் செய்ய இயலாத நிலைமை. அல்லது செய்யாத தவறுக்குத் தண்டனை அனுபவிக்கும்படி நேருகிறது. அநீதியின் கை ஓங்குகிறது.

இது போன்ற சமயங்களில் மனம் கொந்தளித்துப் போய், நம் கையாலாகாத நிலையை எண்ணி மன இறுக்கம் தோன்றலாம்.

இதைப் போக்க கடவுள் நம்பிக்கை உதவும். "என்னால் ஒன்றும் செய்ய முடியா

மல் போனாலும், நியாயம் வென்றுதான் தீரும். எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் பரிகாரம் கிடைக்கும். தெய்வம் நியாயம் வழங்கும்.'' இது போன்ற எண்ணங்களை மனத்தில் ஆழ உழுதுவிட்டால், மகிழ்ச்சி எனும் மரம் வளர்ந்து வேகமாகக் கிளை பரப்பும்.

ஜோதிடம், கைரேகை, பெயர்ராசி, வாஸ்து, என்று பலவித விஷயங்கள் மனிதனின் வாழ்வை இப்போதெல்லாம் ஆட்டிப் படைக்கின்றன. இவையெல்லாம் விஞ்ஞான அடிப்படையைக் கொண்டவை என்றே ஒரு வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும், இவற்றைக் கையாளுபவர்கள் (அதாவது ஜோதிடர், ரேகை சொல்பவர் போன்றவர்கள்) அந்த விஞ்ஞானத்



''உங்க மனபாரத்தை உடனே இறக்கி வையுங்க. மனசிலே இருக்கிறதையெல்லாம் கொட்டித் தீருங்க.''
''ராஸ்கல், இடியட், பேராசைக்காரா. ஒவ்வொரு விசிட்டுக்கும் இருநூறு ரூபாய் வாங்கறியேடா? நியாயமா?''

தைக் கசடறக் கற்றுக் கொண்டவர்களா, என்பது மிக முக்கியமான கேள்வி. எனவே ஜோதிடப் பலனையோ, கிளி உங் களுக்காக எடுத்துப் போடும் வாக்கியங்களையோ படிக்க நேரும்போது, அவற்றில் உங்களுக்கு நல்ல பலன் காணப்பட்டால், மனதளவில் ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த உற்சாகம் வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்தும். மாறாக, கெட்ட பலன்கள் காணப்பட்டால், "இதையெல்லாமா நம்புவது?" என்று அவற்றை மறந்து விடுங்கள்.

அதெப்படி ஒரு பகுதியை நம்பிவிட்டு மறுபகுதியை நம்பாமல் இருப்பது? இதில் என்ன லாஜிக் இருக்கிறது என்பவர்களுக்கு இதுதான் பதில்: "மனச் சோர்வை ஏற்படுத்தாமல், மனத்தை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளக் கூடியவை மட்டுமே நம்மைப் பொறுத்தவரை லாஜிக்கானவை" என்பது தான் இதற்கான அடிப்படை.

மேலே குறிப்பிட்டபடி பிரித்தறியும் பக்குவம் இல்லையென்றால், இவற்றின் பக்கம் போகாமல் இருப்பதே நல்லது. "என்ன தீங்கு வந்தாலும் அதை இறைவன் உதவியுடன் முறியடிப்பேன்" என்ற நம்பிக்கையை ஆழமாக மனத்தில் கொள்ளுங்கள்.

தூங்குங்கள்.

தூக்கம் என்பது நம் வாழ்வின் மிக முக்கியமான ஒரு பகுதி. நன்கு தூங்கியெழுந்தால் புத்துணர்வோடு இருக்க முடியும். தினமும் குறைந்தது ஆறு மணி நேரமாவது தூங்காவிட்டால், உடல்களைப்படைந்து மனச்சோர்வு ஏற்படும். நிம்மதியாகத் தூங்க வேண்டுமானால் நாம் பின்பற்ற வேண்டிய சில விஷயங்கள் உண்டு.

எப்போதுமே பகல் தூக்கத்தைவிட

இரவுத் தூக்கம்தான் நல்லது. ஏனென்றால் ஆரவாரங்கள் அடங்கியிருக்கும் நேரத்தில் தூங்குவதுதான், ஆழமான தூக்கமாக இருக்கும்.

தினமும் குறிப்பிட்ட நேரத்துக்குத் தூங்கச் செல்வது என்பதைப் பழக்கிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் சீரான உறக்கம் வரும்.

இரவு எதுவுமே சாப்பிடாமல் படுத்துக் கொள்ள வேண்டாம். பாதி ராத்திரியில் விழிப்பு வரக்கூடும்.

தூக்கம் வராதபோது கண்களை மூடிக் கொண்டு, குலதெய்வத்தின் உருவத்தையோ அல்லது மெழுகுவர்த்தி ஒளியையோ தொடர்ந்து உருவகப்படுத்திக் கொள்ளுங்கள்.

மல்லாந்தோ, குப்புறவோ படுத்துக் கொள்வதைவிட ஒரு புறமாகப் படுத்துக் கொள்வது தூக்கத்தை எளிதாக்கும்.

பாதித் தூக்கத்தில் விழித்துக் கொண்டால், ஜில்லென்று ஒரு டம்ளர் தண்ணீர் குடியுங்கள். வீட்டுக்குள்ளேயே கொஞ்சம் நடைபயிலுங்கள். மீண்டும் தூக்கம் கண்களைச் சுழற்றும்.

நடந்ததையே நினைத்திருந்தால்...

சமீபத்தில் ஒரு பெரும் துக்கம் உங்களைப் புரட்டிப் போட்டிருக்கலாம். அது காதல் தோல்வியாக இருக்கலாம். அல்லது நீங்கள் பணத்தைப் போட்டிருந்த நிதி நிறுவனம் மூடப்பட்டிருக்கலாம். அல்லது நெருக்கமான ஒருவர் இறந்தும் போயிருக்கலாம்.

இவற்றில் மிக துக்கத்தை ஏற்படுத்தும் கடைசி உதாரணத்தைப் பார்ப்போம். மீண்டு வருவது மிகவும் கடினமான விஷயம்

தான். ஆனால் முடியாத ஒன்றல்ல. மனப்பூர்வமாக யோசித்துப் பாருங்கள். எத்தனை நெருங்கியவர் இறந்திருந்தாலும், அன்றோ, அதற்கடுத்த நாளோ, நம்மால் சாப்பிடாமல் இருக்க முடிகிறதா? அன்புக்கு உதாரணமாக தாய்ப்பாசத்தைச் சொல்லுவார்கள். ஆனால் மகன் அகால மரணம் அடைய நேரிட்டாலும், எத்தனை தாய்கள் உயிரை விட்டிருக்கிறார்கள்? கேட்பதற்கு அசௌகரியமாக இருந்தாலும் இதுதான் உண்மை. இந்தத் துக்கத்திலிருந்து எப்படியும் ஒரு நாள் நாம் முழுமையாக மீளப்போகிறவர்கள்தான். அந்தக் காலகட்டத்தை சற்று முன்னதாகவே வரவழைத்துக் கொள்வதில் எந்தக் குற்ற உணர்ச்சியும் தேவையில்லை.

எந்த ஒரு கடுமையான சூழலால் பாதிக்கப்பட்டிருந்தாலும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உங்கள் வாழ்வில் இதே போன்றோ அல்லது இதைவிடக் கடுமையானதாகவோ, ஒரு சிக்கல் கடந்த காலத்தில் தோன்றியிருக்கும். அதை வெற்றிகரமாகக் கடந்து வந்து விடவில்லையா? அதேபோல் இதையும் தாண்டிவிட முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.



"ஆமாம், ஒரு பெரிய சிக்கல்தான் நமக்கு வரப் போகிறது...!"

வருங்கால பயங்கள்.

கடந்த காலம் மட்டுமல்ல, வருங்காலத்தைப் பற்றிய அச்சங்களும் இப்போதைய மனச்சோர்வுக்கு முக்கியக் காரணமாக அமையக் கூடும்.

'கம்பெனியில் ஆள் குறைப்பு நடக்குது, என்னையும் வேலையை விட்டுத் தூக்கிடுவாங்களோ? எனக்கு ஏதாவது பெரிய உடல் பாதிப்பு ஏற்பட்டால் என்ன செய்வது? அப்படி ஒன்றும் அதிக சேமிப்பு இல்லையே? மகள் வளர்ந்து வருகிறாள். இன்னும் சில வருடங்களில் கல்யாணம் செய்ய வேண்டுமே. நம்மால் முடியுமா?'

இது போன்ற கேள்விகள் எழும்போது நமக்குப் பாதகமான பதிலையே நம் மனம் மீண்டும் மீண்டும் சுற்றிவரும். இதுதான் இயல்பு. தடாலடியாக யோசித்துப் பாருங்கள். "ஆமாம், ஒரு பெரிய சிக்கல்தான் நமக்கு வரப்போகிறது" (கம்பெனியை விட்டு நம்மை நீக்கத்தான் போகிறார்கள், மகளுக்குத் திருமணம் செய்ய, போதிய தொகை இல்லாமல் தான் போகும். இந்த மாதிரி). ஆனால் அப்படி எண்ணிப் பார்த்து இடிந்து போவதோடு நீங்கள் நின்றுவிடக் கூடாது.

அதிக பட்ச பாதிப்பு இதுதான், என்று தீர்மானித்து அந்தப் பாதிப்பை ஏற்றுக் கொள்ளும் வகையில் மனத்தைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதே சமயம் இந்தப் பாதிப்பை எந்த அளவு, எப்படிக் குறைக்கலாம் என்றும் திட்டமிட்டு செயல் பட வேண்டும். அப்போது இழந்த மன அமைதியின் பெரும்பங்கு கிடைத்து விடும்.


தவிர நமக்கு மனச்சோர்வை ஏற்படுத்தும் பல விஷயங்களை, சில காரியங்களைச் செய்வதன் மூலம் அகற்றிவிடலாம்.

விதிமுறைகளை மீறாமல் நம் வீட்டைக் கட்டிக் கொள்வது, அப்படி மீறல் நடந்திருந்

தாலும், அதை உரிய முறையில் சரி செய்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, வீட்டு வரி, தண்ணீர் வரி போன்றவற்றை ஒழுங்காகச் செலுத்திவிடுவது, வீட்டில் உள்ள பொருள்களை இன்ஷூர் செய்து கொள்வது, பெரும் நோய்கள் ஏற்பட்டால் உண்டாகும் மருத்துவச் செலவை சந்திக்க மெடி க்ளெய்ம் போன்ற இன்ஷூரன்ஸ் பாலிசியை எடுத்துக் கொள்வது, வீட்டில் உள்ள விலை உயர்ந்த நகைகளை வங்கி லாக்கரில் வைப்பது, குழந்தைகள் பிறந்தவுடனேயே அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை சேமிப்பில் போடுவது – இப்படிப் பல 'வருமுன் காப்போம்' திட்டங்களை மேற்கொண்டால், தானாக நமது



"நான் சொன்ன மாதிரி எல்லாரும் கொஞ்ச நேரம் காரணமில்லாம சிரிச்சீங்களா?"
"சிரிச்சோம். ஆனா நாங்க சிரிச்சதும் இவர் தன்னைத்தான் கேலி செய்யறதா நினைச்சு டிப்ரஷன்ல ஆழ்ந்துட்டாரு."



டென்ஷன்களின் எண்ணிக்கை குறையும்.

உடல் நலம்

டென்ஷன் என்பதோடு நெருங்கிய சொந்தம் கொண்டது இரத்தக் கொதிப்பு. எது காரணம், எது விளைவு என்ற பட்டி மன்றம் ஒரு புறம் இருக்கட்டும். நீங்கள் டென்ஷன் பார்ட்டியென்றால் உடனடியாக ஒரு மருந்து

வரைக் கலந்து ஆலோசியுங்கள். தொடர்ந்து இரத்தக் கொதிப்பு இருந்தால், அதற்கான மாத்திரைகளை உட்கொள்ளுங்கள். இரத்தக் கொதிப்பும் டென்ஷனும் ஒரு கட்டுக்குள் வந்து விடும்.

கோபம்

டென்ஷனின் பல வெளிப்பாடுகளில் சகஜமானது கோபம். கோபம் ஏற்பட்டால் பலருக்கு உடம்பெல்லாம் நடுங்கும். டென்ஷனோ டென்ஷன்தான்.

கோபம் ஏற்படுவது ஏன்?

மூளையில் கோபத்துக்கென்றே ஒரு மையம் உண்டு. இந்தப் பகுதி தூண்டி விடப்பட்டால், உடனே தடைபோட முடியாத அளவுக்குக் கோபம் வரும். வலிப்பு நோய் உள்ளவர்களுக்கு, எந்தக் காரணமுமில்லாமல் மூளையின் இந்தப் பகுதி தூண்டிவிடப்படுகிறது.

இப்படி மூளையளவில் ஏற்படும் கோபத்தை அடக்குவது முழுவதும் நம் வசம் இல்லை. தவிர, சிலருக்கு இயல்பாகவே சட்டென்று கோபம் வரும். இந்த விஷயத்தில் எல்லோரும் ஒரே மாதிரி இருக்க முடியாது. ஆனால் அப்படி வரும் கோபத்தை அடக்கிக் கொள்வது நம் கையில்தான் இருக்கிறது.

கோபத்தினால் உண்டாகும் மன டென்ஷன் காரணமாக உறவின் தன்மை பெரிதும் மாற வாய்ப்பு உண்டு. கணவனோ மனைவியோ பெரும் கோபக்காரர் என்றால், அங்கே மனம் விட்டுப் பேசுவது குறைந்துவிடும். நாளடைவில் இயல்பான பேச்சு என்பது அவர்களிடம் இல்லாமலே போகலாம். ஆக, தகவல் தொடர்பு என்ற அற்புதமான கலையைக் கோபம் நசுக்கி விடக் கூடும்.



"இயற்கைக் காட்சிகளைப் பார்த்தா மன இறுக்கம் தீரும்னு டாக்டர் சொன்னாருதான். அதுக்காக இது ஒண்ணுதான் அப்படிப்பட்ட காட்சியா?"

பலவித உடல் கோளாறுகளுக்கு கூட கோபம் ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கும். இவற்றை "சைக்கோமேடிக் பிரச்னைகள்" என்பார்கள். கடும் கோபம் என்பது அதிக இரத்த அழுத்தத்திலிருந்து இதய நோய் வரை கொண்டு விடலாம்.

சரி, கோபத்தைக் குறைத்துக் கொள்வது எப்படி?

கோபம் வரும்போது ஒன்றிலிருந்து பத்து வரை எண்ணினால் படபடப்பு குறையும். அதற்குப் பிறகு அவசியம் என்று பட்டால், கோபப்படுங்கள். கோபம் வரும்போது ஒரு தம்ளர் தண்ணீர் குடியுங்கள். கோபம் பொங்கியெழும்போது அந்த இடத்தை (அறையை) விட்டுத் தாற்காலிகமாக வெளியேறி விடுங்கள். கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்யுங்கள். ஆழ் நிலை தியானமும் கோபத்தைத் தவிர்ப்பதில் பெரிதும் உதவக் கூடும்.

மேற்கூறியவற்றில் எது உங்களுக்கு அதிகப் பலனைத் தருகிறதோ, அதைப் பின்பற்றலாமே!

சில டானிக் யோசனைகள்:

சுற்றியுள்ள சிலரிடம் "மனத்தில் உற்சாகமில்லாமல் இருக்கும்போது மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள என்ன செய்வீர்கள்?" என்று கேட்டோம். அவர்கள் தந்த விடைகள் இதோ:

அவற்றில் எவை உங்களுக்குப் பொருந்துமோ, அவற்றைக் கடைப்பிடித்து மன இறுக்கத்தைப் போக்கிக் கொள்ளலாம்.

1. வாழ்க்கையில் அதிகமாக எதிர்பார்க்காதீர்கள். அதுவும் நிறைய விஷயங்களில் நிறைய எதிர்பார்த்தால் நிச்சயம் ஏமாற்றம் தான். பொதுவாகவே எதிர்ப்பார்ப்புகளைக் குறைத்து கொண்டால் முடங்கிப் போகாமல் இருக்கலாம்.

2. முடிந்தவரை உண்மையைப் பேசுவேன். ஒரு பொய் சொன்னால் அதை உறதிப்படுத்த அடுத்தடுத்து பல பொய்களைக் கூற நேரிடும். இந்தச் சங்கிலித் தொடர் பொய்களால் மன அமைதி தொலைந்து விடும்.

3. பிரச்னைகள் பற்றி சிந்திப்பேன். ஆனால் கவலைப் படமாட்டேன். அதுவும் "ஒரு வேளை நேர்ந்தாலும் நேரலாம்" என்பது போன்ற பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவே மாட்டேன்.

4. மனத்தில் கவலை தோன்றும்போது எனக்குப் பிடித்த புத்தகங்களைப் படிப்பேன். நகைச்சுவை நூல்களுக்கு முன்னுரிமை கொடுப்பேன்.

5. ஆபீஸ் பிரச்னைகளை வீட்டுக்குள் நினைக்கவே மாட்டேன். வீட்டுக்குள் நுழைந்தவுடன் செருப்புகளைக் கழற்றுவது



"டாக்டர் என்னை ரிலாக்ஸ்டா இருக்கச் சொல்லியிருக்கார் டார்லிங்! அதனால எட்டரை மணிக்குள் சமையலை முடிச்சுட்டுச் சொல்லு; குளிச்சுட்டு சாப்பிடத் தயாரா வரேன்!"

போல, அலுவலகப் பிரச்னைகளையும் உதறிவிட்டுத்தான் நுழைவேன்.

6. மகிழ்ச்சியின் முக்கிய எதிரி பொறாமை. பொறாமைப் படுவதை படிப்படியாக குறைத்து வருகிறேன். மற்றவர்களின் பாராட்டுகளை எதிர்பார்க்க வேண்டாம். அங்கீகாரத்துக்கு ஏங்குவதுதான் மனித மனம். என்றாலும் இயன்ற வரை பாராட்டுகளை எதிர்பார்க்காமல் இருந்தால் மனம் புண்படாது. மன இறுக்கம் உண்டாகாது.

7. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வேன். "என்னால் முடியும்" என்ற ஊக்க வார்த்தைகளை அடிக்கடி சொல்லிக் கொள்வேன்.

8. ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுவேன். எழுந்திருக்கும்போது கவலை பறந்திருக்கும்.

9. என்னால் முடிந்த சின்னச் சின்ன உதவிகளைப் பிறருக்குச் செய்து கொண்டே இருப்பேன். சோகத்துக்கு இது நல்ல

வடிகாலாக விளங்குகிறது.

10. ஏதாவது விஷமமான அல்லது குறும்பான ஐடியாவைச் செயல்படுத்துவேன். அது அளிக்கும் குதூகலமே தனிதான்.

11. முடிந்தவரை திருமணத்தைத் தள்ளிப் போட்டு வருகிறேன்.

12. எரிச்சல் ஏற்படும் போதெல்லாம் "எனக்கென்ன குறைச்சல்? நல்லாத்தான் இருக்கேன்" என்று அடிக்கடிச் சொல்லிக் கொள்வேன். கொஞ்ச நேரத்தில் சரியாகி விடும்.

13. பல சமயம் ஏதோ நாம் செய்திருக்கும் ஏதோ தவறின் காரணமாகத்தான் உற்சாகம் ஆஃபாகியிருக்கும். அந்தத் தவற்றை உரியவரிடம் ஒப்புக் கொண்டுவிடுவேன். மன பாரம் இறங்கும்.

14. உடனடியாக எனக்கு மிகவும் பிடித்த நண்பருடனோ உறவினருடனோ நேரிலோ



"இவ்வளவு ஒல்லியா இருக்கீங்க. எடை தொண்ணூறு கிலோவா?"
"என் மனசிலே தாங்க முடியாத பாரம்னா நம்ப மாட்டேன்னீங்களே டாக்டர்!"



"ஏங்க நம்ம மூணுமாசக் குழந்தை ரெண்டு நாளா அழவேயில்ல. டிப்ரஷனா இருக்குமோ? சைக்கியாட்ரிஸ்ட் கிட்ட போயிட்டு வரலாமா?"


தொலைபேசியிலோ பேசுவேன்.

15. குழந்தையோடு சற்று நேரம் விளையாடுவேன்.

பிறகென்ன, உங்களுக்கேற்ற வழிமுறைகளைத் தேர்ந்தெடுங்கள். டென்ஷனுக்கு நிரந்தரமாகவே டாடா சொல்லிவிடுங்கள்.

சுவாசப் பயிற்சிகள்

டென்ஷனைப் போக்கவும், மனச் சோர்வை விரட்டவும் சுவாசப் பயிற்சிகள் பெரிதும் உதவக் கூடும். பெரும்பாலும் இவற்றால் எந்தவித பாதகமும் இருக்க வாய்ப்பில்லை என்றாலும், அவற்றை முயற்சிப்பதற்கு முன் உங்கள் மருத்துவரையும் கலந்து ஆலோசிப்பது நல்லது.



கீழே உள்ளதுபோல் மூச்சை இழுத்துவிடுங்கள். ஒரு முக்கிய விஷயம். காற்றை உள்ளிழுக்கும்போது மூக்கின் வழியாகவும், வெளியே விடும் போது வாயின் வழியாகவும் அமையுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

1. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணி முடிக்கும்வரை காற்றை உள்ளே இழுங்கள்.

2. பிறகு ஒரு சிறு இடைவெளி கொடுங்கள்.



3. அதற்குப் பிறகு ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணி முடிக்கும்வரை காற்றை வெளியே விடுங்கள்.

பிறகு மேலே சொன்ன பயிற்சியை மீண்டும் சில முறைகள் செய்யுங்கள். மனச்சோர்வும் டென்ஷனும் பெருமளவு விலகி யிருப்பதை உங்களால் உணரமுடி யும்.

அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில்...

இன்னும் சற்று அதிக நேரத்தை செலவழிக்க முடியும் என்பவர்கள் ஃப்ளோரிடா பல்கலைக் கழகத்தில் பின்பற்றப்படும் கீழ்க்கண்ட சுவா சப்பயிற்சியைச் செய்யலாம்.

வசதியான ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள். சௌகரியமான நிலையில் உங்கள் உடல் இருக்கட்டும். இப்போது கண்களை மெதுவாக மூடிக் கொள்ளுங்கள். சுவாசம் சீராக இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். சிறிது நேரம் செல்லட்டும். இப்போது உங்கள் சுவாசம் சீராக, ஏதோ அழகான தாள வரிசையில் அமைந்ததுபோல் இருக்கட்டும்.

இப்போது முன்பைவிட, சற்று ஆழமானதாக உங்கள் சுவாசம் இருக்கட்டும். உங்கள் உடல் மிகவும் வசதியாகவும், இறுக்கமின்றியும் இருக்கட்டும். அந்த அமைதியை உணருங்கள்.

உடலின் பிற பாகங்கள் ரிலாக்ஸ்டாக இருக்க, வலது முஷ்டியை



மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக மடக்குங்கள். முஷ்டியில் உள்ள இறுக்கம் அதிகரிக்கட்டும். அந்த இறுக்கத்தை கை முழுவதுமே நீங்கள் உணர வேண்டும். அப்படியே சில நொடிகள் கடக்கட்டும்.

இப்போது உங்கள் கையில் உள்ள இறுக்கத்தை மெதுவாக விடுவியுங்கள். உங்கள் விரல்கள் தளர்வாக ஆகட்டும். கை இறுக்கமாக இருந்தபோது ஏற்பட்ட மன உணர்வுக்கும், இப்போதுள்ள மன உணர்வுக்கும் வேறுபாடு உங்களால் கண்டறிய முடியும்.

இப்போது உங்கள் மொத்த உடலும் தளர்வாக இருக்கட்டும்.

உங்கள் இரண்டு கைகளையும் சிறிது சிறிதாக நன்கு மடக்குங்கள். 'பைசப்ஸி'ல் ஒருவித இறுக்கம் தோன்றும். இந்த டென்ஷனை மிக அதிகமான அளவுக்குக் கொண்டு சென்று அப்படியே சற்று நேரம் வைத்துக் கொள்ளுங்கள். எந்த அளவு உடலிலும் மனத்திலும் டென்ஷன் ஏற்படுகிறது என்பதைக் கவனியுங்கள்.

இப்போது உங்கள் கைகளை நேராக்குங்கள். பிறகு மெதுவாக இரு கைகளையும் பக்கவாட்டில் தொங்க விடுங்கள். இப்போது உங்கள் தசைகளின் இறுக்கம் நீங்குவதையும் ஒருவித அமைதி பரவுவதையும் உங்களால் உணர முடியும். இந்த உணர்வு உங்கள் உடல் முழுவதும் பரவட்டும். அப்போது இனம் காணாத அமைதி கிடைக்கும். மேலும் மேலும் இந்த அமைதியில் திளையுங்கள்.


இனி கூறப்படும் ஒவ்வொரு செயலின் போதும் இறுக்க நிலையிலே சில நிமிடங்கள் அப்படியே விட்டுவிட்டு, அந்த இறுக்கத்தைக் கவனிப்பதும், பிறகு தளர்வடையும் போது அந்த இறுக்கம் நீங்குவதை உணர்வதும் தொடர்ந்து நடக்கட்டும்.

உங்கள் கழுத்து, தோள்கள் மற்றும் மேல் முதுகு ஆகியவற்றில் உங்கள் முழு கவனமும் இப்போது திரும்பட்டும். மேலே கூறியது போன்ற சுவாசப் பயிற்சியைச் செய்யுங்கள். அப்போது கழுத்து, தோள் மற்றும் மேல் முதுகில் உள்ள டென்ஷனை வெளியேற்றுங்கள். இங்கு ஏற்படும் அமைதி அலை கீழ்ப்புறமாக இறங்கி உங்கள் மார்புப் பகுதி, கீழ் முதுகு மற்றும் வயிற்றுப்பகுதியில் பாயட்டும். இப்படி நடைபெறும் சுவாசங்கள் அதிகரிக்க அதிகரிக்க, உங்கள் உடல் மேலும் மேலும் புத்துணர்வு பெறும்.

இப்போது தொடைகள் மற்றும் உட்காரும் இடத்தில் உள்ள தசைகளை இறுக்குங்கள். முன் பாதத்தை மேற்புறம் தூக்கிக் கொண்டு குதிகாலை அழுத்து வதன் மூலம் இந்த இறுக்கத்தைக் கொண்டு வரலாம். இந்தத் தசை இறுக்கத்தை சில நொடிகள் உணர்ந்த பிறகு அந்த இறுக்கத்தைத்




"தினமும் அஞ்சு மணி நேரம் வாய்விட்டு அழறேன். அப்படியும் மனபாரம் இறங்க மாட்டேங்குது டாக்டர்."
"தினமும் பத்து மெகாசீரியல்களைப் பார்ப்பதைச் சொல்றா!"



தளரவிடுங்கள். இப்போது உங்கள் இடுப்பு மற்றும் தொடைப் பகுதிகள் இலேசானது போன்ற உணர்வைப் பெறுவதை அனுபவிக்க முடியும். இப்படி ஒரு விரும்பத் தகுந்த மாற்றம் ஏற்படும் வரையில் சுவாசப் பயிற்சியைத் தொடரலாம்.

அடுத்து உங்கள் குதிகாலை நன்கு அழுத்துங்கள். கெண்டைக் கால் தசைகள் இறுகும். அதே போல் அந்த இறுக்கத்தைத் தொடர வைத்து பிறகு அதை ரிலீஸ் செய்யுங்கள். சொல்லப் போனால் சுவாசத்தை ஆழமாக இழுத்து மெதுவாக வெளியிடுவதன் மூலம், மேலும் அதிகப் புத்துணர்ச்சி பெறலாம்.

இறுதியாக ஆழ்ந்து சுவாசித்த பிறகு, பாதத்தை இலேசாக உதறி அசைத்து, கண்களைத் திறக்கவும். டென்ஷன் மறைந்து போய் புத்துணர்வும் அமைதியும் நிரம்பியதை உணர்வீர்கள்.



பிராணாயாமம்

ஒரு ஸ்டூலின் மீது உட்கார்ந்து கொள்ளுங்கள், கண்களை மூடிக் கொள்ளுங்கள். அமைதியான நிலையில் இருங்கள். மூடிய கண்கள் நெற்றியில் புருவங்களின் மையத்தில் ஒரு ஜோதி அல்லது 'ஓம்' ஒளிர்வதை நோக்குவது போல நிலைநிறுத்துங்கள். மூச்சை நிதானமாக ஐந்தாறு நொடிகள் நீடிக்குமாறு உள்ளே இழுங்கள். அப்போது வயிறு உள்ளடங்கி மார்பு விரியும்.

பிறகு ஒன்று முதல் மூன்று நொடிகள் அப்படியே மூச்சை உள்ளே நிறுத்திக் கொள்ளுங்கள்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka.
Supplement to the Kalki issue Dated 11.5.2003



அடுத்து ஐந்தாறு நொடிகளுக்கு சுவாசத்தை வெளியே விடுங்கள். அந்த சமயம் வயிறும் நெஞ்சும் தளர வேண்டும். இப்போது ஓரிரு நொடி அப்படியே மூச்சு வெளியேறிய நிலையிலேயே உள்ளே நிறுத்திக் கொள்ளுங்கள். மறுபடி முன் கூறியபடி மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடுங்கள்.

மேற்படி சுவாசப் பயிற்சிதான் பிராணாயாமம். இதை அடுத்தடுத்து சில முறைகள் செய்ய வேண்டும் (சுமார் பத்துமுறை).

பத்மாசனம் என்ற வகை ஆசன நிலையில் உட்கார்ந்து கொண்டு பிராணாயாமத்தைச் செய்தால் மேலும் பலன் கிடைக்கும். இதற்கு யோகாசன நிபுணரிடம் நாலைந்து நாட்கள் பயிற்சி பெறுவது நலம்.

— ஜி.எஸ்.எஸ்.

ஜோக்ஸ் : குல்லு



Heinz
Trust • Taste • Nutrition
என்னையே நம்பி இருக்கும் என் குழந்தையின் ஊட்டசத்துக்கு நான் யாரை நம்புவது?
என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவள் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், 'அவளுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?' என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை. ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே! ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம். அதுமட்டுமா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும், பால், கோதுமை, அரிசி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கையான நற்குணங்கள் அதிசிறப்பாக அப்படியே இருக்கும். மேலும், ஃபாரெக்ஸ் என் குழந்தைக்கு புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்ஸ், விட்டமின்ஸ் மற்றும் மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய சமச்சீர் ஊட்டசத்து அளிக்கிறது. எனவே, என் குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு வீட்டில் தயார் செய்த ஆகாரங்களுடன், நான் நம்புவது ஃபாரெக்ஸைதான்.
எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பல தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்ஸை நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொரு முறையும் என் குழந்தை சிரிக்கும் போது, 'நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!' என்று கூறுவது போல் இருக்கும்.
ஃபாரெக்ஸ்®
வளர்ச்சிக்கு சிறந்த வழி
6 ருசிகரமான சுவைகளில்
ரைஸ், வீட், வீட் வெஜிடபிள், வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ், வீட் ஆப்பிள்
வீட் எக்
இலவச குழந்தை பராமரிப்பு புத்தகத்திற்கு, குழந்தையின் பெயர்/பிறந்த தேதியுடன் எங்களுக்கு எழுதுங்கள்: ஹைன்ஸ் இண்டியா பி. லிட். த. பெ. எண் : 1907, மும்பை - 400 001.
IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.
महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें.
CONTRACTFRX2470TM

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

அனுபவியுங்கள் ஜீவா.
ஓர் ஆயுர்வேதிக் சோப்பு
27 மடங்கு
சிறப்பானது,
உங்கள் சருமம் புத்துயிர் பெற.



27



அனுபவியுங்கள் ஜீவா. உங்கள் சருமத்திற்கு உகந்த சோப்பு. ஜீவாவிலுள்ள 27 அத்தியாவசிய ஆயுர்வேத உட்பொருள்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, மெருகூட்டி, பாதுகாக்கிறது. இதன் ஒப்பற்ற நுரை சரும துவாரங்களை திறப்பதோடு மட்டுமின்றி, இதில் நிறைந்த ஆயுர்வேத நற்குணங்கள் சருமத்தில் ஊடுறுவிப் பாய்கிறது. எனவே உங்கள் சருமத்தில் இளமை, மென்மை மற்றும் பொலிவு பூத்துக் குலுங்குகிறது. மேலும் சருமத்திற்கு தருவதோ புத்துயிர்.

சருமம் புத்துயிர் பெறும்

From the house of Jyothy Laboratories Ltd. Shivshakti Estate, Marol, Andheri (E), Mumbai - 59.

Situations/JLL-JEEVA/89/2002 TAM